MASTER NEGATIVE NUMBER

6166.89

நவசக்தி

சிலம்பு 6, பரல் 5

November 21, 1925

Record no. 2305

Navacakti
Cilampu 6, paral 5
November 21, 1925

Record no. 2305

நவம்ப
Registered No. M. 1500.
இன்றைய அநுபந்தம்
"NAVASAKTI" WEEK

நவசக்தி

வாரப் பதிப்பு
வெள்ளிக்கிழமை தோறும் வெளிவருவது.

வாரப்பதிப்புச் சந்தா விவரம்	ரூ.	அ.
வருட சந்தா ...	5	0
ஆறுமாத சந்தா ...	3	0
வெளி நாடு-வருட சந்தா ...	6	0

விளம்பர விகிதம்.		
கலம் 1-க்கு வாரம் 1-க்கு ரூ. ...	7	0
சில்லரை விளம்பரம் 1 அங். ...	0	8
முன்பணமின்றி விளம்பரஞ் செய்யப்பட மாட்டாது.		

"வீடு பெறநில்" "மாற்றானுக் கிடங்கொடேல்" "ஏற்பதிகழ்ச்சி"

சிலம்பு ௨ குரோதனஹு கார்த்திகைமீ ௬௨ (21—11—25) பரல் ௫

௩௧-வது தமிழர் மகாநாடு

காஞ்சியில் கூடியது

திரு. வி. கலியாணசுந்தர முதலியார்

அக்கிராசன உபந்நியாசம்

குரோதனஹு கார்த்திகைமீ ௬, ௭௨

(21, 22-11-25)

எழுவாய்

சகோதரிகளே! சகோதரர்களே!

நாட்டின் விடுதலைச் சூரியனாயெழுந்த ஒரு பெரும் இயக்கம் விழுந்துள்ள இக்காலத்தில், அவ்வியக்கத்திற் புகுந்து, எவ்வேற்றுமையுங் கருதாது உழைத்துச் சிறைக் கோட்டம் நண்ணிய தலைவர்களுக்குள்ளும் பிணக்கு நிகழ்ந்து வரும் இந்நேரத்தில், அப்பிணக்கான் எம் மூலையினும் வகுப்பு வேற்றுமையும் காழ்ப்புங் கனன்றெரியும் இவ்வேளையில், தமிழ் நாட்டின் முப்பத்தோராவது அரசியற்பெருங் கழகம், உலகன்னையார் முப்பானிரண்டறம் வளர்த்த இக்காஞ்சியம்பதிக்கண் இன்று கூடியிருக்கிறது. இக்கூட்டத்துக்குச் சிறியேனைத் தலைவனாக நீங்கள் தெரிந்தெடுத்திருக்கிறீர்கள். அத்தெரிவுக்கு உளங்கொண்ட உங்கள் உழுவலன்பிற்கு எனது நன்றியறிதலான வணக்கஞ் செலுத்துகிறேன். நீங்கள் அடியேற்குப் பணித்துள்ள தொண்டாற்றப் போதிய ஆற்றல் என்பால் இல்லை என்பதை யான் அறிவேன். ஆயினும் உங்கள் அன்பினின்றும் பிறந்த ஆணை வழிநின்று, உங்கள் துணைகொண்டு ஒல்லும் வகை எனது கடனாற்ற முயல்கிறேன். குற்றங் குறைகள் நிகழுமேல் அவைகளைப் [illegible] பொறுத்தருளுமாறு உங்களை வேண்டுகிறேன்.

பிரிவாற்றுமை

இக்காஞ்சியில் நுழைந்ததும், இப்பெருஞ் ச[illegible] ஆராய்ந்து உண்மைக்[illegible] துள்ளத்துற்ற [illegible]வோமாக. ஆதலால் நம்மை ஒருமை சென்ற வல்ல தமிழை வளர்க்க முயல்வோமாக. [illegible]ட்டை

பிரிட்டிஷ் ஆட்சி

இத்தமிழ் நாட்டைப் போன்ற பல பெரும் நாடுகளைக் கொண்டது நமது பரத கண்டம். பாரத பூமிக்குக் கண்டம் என்னும் பெயர் பண்டை நாளில் நம்மவர்களாலேயே நிறுவப்பட்டது. பலதிற வழக்க ஒழுக்கம் மொழி முதலியவற்றைக் கொண்ட பல நாடுகளை உறுப்பாகப் பெற்ற பெருநிலம் கண்டம் என்பது எவரும் அறிந்த தொன்று. நாடுகளின் பன்மையால் பரத கண்டம் ஆக்கப்பட்டாலும் அப்பன்மையில் ஒருமையை அது வழங்காமலில்லை. பாரதகண்டம் வடமொழியைப் பொது மொழியாகவும் வேதாந்தத்தைப் பொதுக்கொள்கையாகவுங் கொண்டிருந்த காலமுண்டு. இன்னும் ஹிந்துக்களுக்குள் அவ்வொற்றுமை காணலாம். இவ்வொற்றுமைக்குக் கால் கொண்டவர்கள் பாரத நாட்டின் பழங்குடி மக்களும், பல்லாயிரம் ஆண்டுகளுக்கு முன்னர்ப் பரதகண்டத்திற் குடி புகுந்த ஆரிய மக்களுமாவார்கள். இவ்விருவருங் கலந்த ஓரினமே ஹிந்து சமூகம் என்பது. இவர்கள் ஆட்சியில் இந்தியாவின் பொருள் இந்திய மக்கட்கே பயன்பட்டு வந்தது. அப்பொருட் பேற்றால் அந்நாளில் இந்தியாவில் வளர்ந்த கலைஞானத்திற்கோர் அளவுமுண்டோ? வடமொழியில் கடல்போலக் கிடக்கும் நூல்களெல்லாம் அக்காலத்தில் எழுதப்பட்டனவேயாகும். பின்னைப் போந்த முஸ்லீம்களும் இந்தியாவைத் தாய் நாடாகவே கொண்டு ஆட்சி புரிந்தமையால் இந்தியாவின் வளஞ் சுருங்காதிருந்தது. இந்நாளில் நடைபெறும் பிரிட்டிஷ் ஆட்சியில் இந்தியா உற்றுள்ள நிலையை விரித்துரைக்க வேண்டுவதில்லை.

பிரிட்டிஷார் இந்தியாவைத் தாய்நாடாகக் கொண்டவரல்லர். ஒரு நாட்டைத் தாய்நாடாகக் கொண்ட ஓரினத்தவரால், அவரது வழக்க ஒழுக்கத்தினின்றும் முற்றும் மாறுபட்ட மற்றொரு நாட்டார் ஆளப்படுதல் இயற்கைக்கு மாறுபட்ட செயலாகும். தொழிலின் பொருட்டோ வாணிபத்தின் பொருட்டோ எதன்பொருட்டோ சில ஆண்டு தங்கி மீண்டும் தாயகம் புகுவோர் சார்பு நாட்டின் நலம் நாடுதல் அரிதே. இது பக்கன்

காஞ்சியின் அமைப்பை நோக்குழிப் பழைய நகர ஒழுங்குகள் காணலாம். அருகர்கள் பல்கலைக் கழகம் அமைத்து வடமொழி தென்மொழி வளர்த்த இடம் இக்காஞ்சிமா நகரம். இக்கச்சியம்பதி ஒருகாலத்தில் பௌத்த சமயப் பஞ்சசீலப் பெருக்கிற்கே நிலைக்களனாக நின்றது. சைவம் வைணவம் சாக்தேயம் கௌமாரம் காணாதிபத்யம் முதலிய சமயங்கட்கும் இடந் தந்திருப்பது இத்திருப்பதி. இன்னும் அவ்வச்சமயக் கோயில்களும் மடங்களும் நமக்குக் காட்சி யளித்தல் கண்கூடு. முஸ்லீம்களையும் கிறிஸ்துவர்களையும் விலக்காது ஏற்று நிற்பது இப்பழம்பதி. இதன்கண் பலப்பல தீர்த்தங்களுண்டு. மக்கள் வளஞ் சுருங்கியுள்ள இந்நாளிலும் கலைவாணர் இசைவாணர் பலதிறத் தொழிலாளர் [illegible] வதிகிறார். எல்லாக் கொள்கைகட்

அவ்வாட்சியி[illegible] [illegible]க் காமாட்சி பீடத்தில் எல் களில் ஆங்கிலம் பயின்[illegible] பெறுமாறு இம்மகா ஒருங்கு கூடி நியாய வரப் கிளர்ச்சி செய்து சுயராஜ்ய கொள்ளலாமெனக் கனவுகண்டு கா[illegible] சபை கண்டனர். அம்முதியோர்கள் அந்நாள் விரும்பிய சுயராஜ்யம் பரராஜ்யமேயாகும். நாட்டுக்கலைகளைக் கொலை செய்து அந்நியக் கலைகட்கு ஆக்கந்தேடுவதாலும், நாட்டு உடைகளை நீக்கி அந்நிய உடைகளை அணிவதாலும், நாட்டுத் தொழில்களை விடுத்து அந்நிய ஆட்சி முறையில் பதவி பெறுவதாலும் சுயராஜ்யம் பெறலாம் என்று அவர்கள் கண்ட கனவு, நாளடைவில் நினைவாய் வினையாய் நாட்டை இந்நிலைக்குக் கொணர்ந்து நிறுத்தியிருக்கிறது. அப்பெரியோர்கள் மீது குற்றஞ் சுமத்த யான் அருகனல்லன். அவர்களுக்கு அந்நாளில் சுயராஜ்யப் பொருள் அவ்வாறு தோன்றிற்று. என் செய்வது? அந்நியம் என்னும் மதுவுண்ட வெறியால் எல்லாவற்றையும் இந்திய மயமாக்க வேண்டுமென்று கல்லூரிகளில்பயின்று, நீதிமன்றங்களையும், உத்தியோகசாலைகளையும், சட்ட சபைகளையும் நிரப்பி அதிகாரவர்க்க ஆட்சிக்கு ஆக்கம் நம்மவர்களே தேடினார்கள். நம்மவர்கள் துணையால் இதுபோழ்து அதிகாரவர்க்கம் இந்திய நிலத்தில் வீழ்த்து முற்றிய வேர்கொண்டு, காழ்த்த மரமாய்க் கவடுகோடு விடுத்து, இலையுந் தளிருஞ் செழித்துக் கொழித்து அரும்புமலர் காய்கனி பொதுள நிழல் தந்து நிற்கிறது. அந்நிழலில் பாரதமக்கள் என்னும் பைங்கூழ் உரிமை எனும் ஞாயிறொளி பெறாது வாட்டமுற்றுக் கிடக்கிறது. பிரிட்டிஷார் இந்தியர் விரும்புமாறு சில பெரும் பதவிகள் ஆங்காங்கே வழங்கத் தயங்குவதில்லை. கரும்பு தின்னக் கூலி வேண்டுமோ? காங்கிரஸ் மிதவாத வழி நின்று செய்த கிளர்ச்சியின் பயன் இதுவே.

1906-ம் ஆண்டு காங்கிரஸில் ஒருணர்வு பிறந்தது. "பிறர் காலில் வீழ்ந்து விண்ணப்பஞ் செய்வதாலும், சிற்சில பதவிகளை இந்தியர் பெறுவதாலும் நாடு விடுதலையடையாது. உரிமை என்பது நமது முயற்சியில் - நமது உழைப்பிலிருப்பது" என்னும் உணர்வு பாலகங்காதர திலகர் பெருமான், அரவிந்த

களுக்கு முன்னர்க் கடலால் கொள்ளப்பட்டது. இப்பொழுதுள்ள இந்துமகாசமுத்திரமெனும் பெருநீர்ப்பரப்பு நிலப்பரப்பாயிருந்ததென்றும், ஆண்டே மக்கள் தோற்றம் முதன் முதல் உற்றதென்றும், அந்நிலம் பின்னைக் கடலால் விழுங்கப்பட்டதென்றும் [illegible]சிரியர் எர்னஸ்ட் ஹேக்கல், ஸ்காட் எலியட் உள்ளிட்ட அறிஞர் பலர் தமது ஆராய்ச்சியிற் கண்ட உண்மையை உலகுக்குணர்த்தியிருக்கிறார். இதனை இவ்வறிஞர்கள் எழுதிய "ஹிஸ்டொரி ஆப் கிரியேஷன்" (History of Creation - படைப்பு வரலாறு) "லாஸ்ட் லெமூரியா" (Lost Lemuria - மறைந்த லெமூரியா) முதலிய நூல்களிற்காண்க. லெமூரியா என்னும் நிலப்பரப்பே தமிழ் நூல்கள் கூறுங் குமரி நாடு.

இத்தொன்னிலப் பரப்பின் அழிவுபோக எஞ்சி நிற்பதே இதுபோழ்து நாம் வாழுந் தமிழ்த்தாயகம். இத்தமிழகத்தின் தொன்மையை எக்கால அளவுகொண்டு கூறுவது? அது சரித்திரகாலத்தையுங் கடந்து நிற்பது. இத்தொன்மை வாய்ந்த நாட்டிற் பிறந்த[illegible] [illegible]ரும் சீர்[illegible] என்று சொல்லும்போது எதிர்த்து ஒரு[illegible]யாது என்பால் இருமாப்[illegible]யில் பிரதிநிதிக வந்தன[illegible] [illegible]ளுக்குள் [illegible] மக்கள் வழக்கின் ஒரு கட்சியும், அதை எதி[illegible]அரசு வீரம் எ[illegible]யென மற்றொரு கட்சியும் பிரிதலா[illegible] பிரதிநிதிகளுக்குள் ஒற்றுமை குலைந்து விடுகிறது. அரசியல் ஞானப்பெருக்கால் தலை வீங்கப்பெற்றிருக்குஞ் சிலர் "இது பார்லிமெண்ட் முறைதானே" என்று சொல்லுவர். பார்லிமெண்ட்முறை என்பதை மறப்பாரில்லை. அப்பார்லிமெண்டில் வீற்றிருக்கும் பிரதிநிதிகள் உரிமை மணங்கமழும் நாட்டுப் பிரதிநிதிகள் என்பதையும், நமது பிரதிநிதிகள் உரிமைபெறாத நாட்டுப்பிரதிநிதிகள் என்பதையும் அரசியல் ஞானிகள் சிறிதுநேரஞ் சிந்தித்துப் பார்ப்பார்களாக. உரிமை பெறாத நாட்டில் மந்திரிக்கட்சி என்றும் மறுக்கட்சி என்றும் பிரிக்கும் சீர்திருத்தம் ஆள்வோர்க்கு நலந்தந்து ஆளப்படுவோர்க்குள் பிணக்கை விளைப்பதாகும்.

இவ்விரட்டையாட்சி மீதுள்ள உள்ளக் கோட்டமும், பாஞ்சாலப் படுகொலையும், கிலாபத்துக்கு நியாயம் பிறவாமையும் ஆக மூன்றும் ஒன்றுபட்டு அஹிம்சாதர்ம ஒத்துழையா இயக்கத்தோற்றத்துக்குக் கருவிகளாக நின்றன. இவ்வியக்கம் ஆள்வோர் ஆளப்படுவோர் என்னும் இருசாராரையுந் தூய்மைப் படுத்த வல்லது. இவ்வியக்கத்துக்குத் தலைமை பூண்டு நடாத்திய பெரியார் புத்தர் கிறிஸ்து போன்றவர். இவ்வற இயக்கத்தை ஒடுக்க அடக்கு முறை ஏன் எழல் வேண்டும்? இவ்வறிய இயக்கத்தில் கொடுமையுண்டா? கொலையுண்டா? அன்பை அடிப்படையாகக் கொண்ட இயக்கமன்றோ இவ்வியக்கம்? இத்தகை இயக்கத்தையும் வீழ்த்த முயன்ற அரசாங்கத்தின் மனப்பான்மையை என்னென்று கூறுவது?

ஒத்துழையா இயக்கம் நாட்டில் செல்வாக்கு பெறாது வீழ்ந்து பட்டது என்று சில

[illegible]ளாட்ட நீட்டுமாபோல், அம்மலைக்கோணங்களின்றுங் கவடுங் கோடும் அரும்பினுலெனச் சுருள் சுருளாகவும் திரள் திரளாகவும் இவர்ந்தும் இழிந்தும் விட்டுக் தொட்டுங் கருலங்களை யொத்து நிற்கும் வரைக்குலங்களின் அமைவும், அவைகளின் துணைபெறாசிற்றிலைகளென ஆங்காங்கே சிதறிச் சிதறித் திகழுங் குன்றச் சூழல்களின் பொலிவும் கண்ணையும் மனதையுங் கவர்வனவாம். இயற்கையோடியைந்த இன்பவாழ் வளிக்கும் இயற்கை நிலையங்களாய திருக்கழுக்குன்றம், திரிசிராப்பள்ளி, பழனி, சென்னிமலை, திருச்செங்கோடு, கொல்லிமலை, பச்சைமலை, திருவண்ணாமலை, கோடைக்கானல், நீலகிரி, சேர்வராயன் முதலிய மலைகள் உயிர்களை ஓம்பி வருகின்றன.

வாழ்வுக்கியைந்த காடுகளும் தமிழ் நாட்டில் அமைந்திருக்கின்றன. மலைகளோடுமிடைந்தும் தனியே சிறந்துஞ் செறியுங் காடுகள் வெயில் தகைந்தளிக்குங் காரிருள் நிழலும், வண்டு துவைப்பத் தேன்பிலிற்றும் பூங்காவனங்களினின்றுங் கமழும் கமழ்நற்றமும், வான்பாந்த பொழில்களின் நிரையும், [illegible] தாறுகளின் [illegible]வும், பசுஞ்செடிகளினிட்டமும், [illegible]டிகளின் பின்னலும் [illegible]ப்பனவல்லவோ? வான்முகடுகளின் [illegible] மூடுகி இடியென எழுந்து வீழுஞ் ச[illegible]ளின் விரைவும், பாலையும் அறலையும் அரித்தரித்துப் பனிக்குருகி பாயுமாபோல் இழிதரும் அருவிகளின் முழவும், பாட்டெனப் பாந்து செல்லும் ஆறுகளின் அணியும், வேறு பல நீர் நிலைகளின் பரவலும் உரைகடந்த அகச்செவிக்கு இன்பூட்டுவன வல்லவோ? பா[illegible] ணையும் காவிரியும் கொள்ளிடமும் [illegible]யும் பொருநையும் அகில்யார் வாயிலாகப் கொழித்து அதிர்க்கேரலில்லை. அறிக்கும் தால் எழுத மு[illegible] பாய்ந்து,-[illegible]லும் பிரிட்டிஷ் அரசின் [illegible]ரிபாக இந்தியா மந்திரியாரும் முதன் மந்திரியாரும் என்ன சொல்கிறார்? "முட்டுக்கட்டை விடுத்து ஒத்துழையுங்கள்; பார்ப்போம்" என்றே சொல்கிறார். அவ்வுரையே இந்திய அரசாங்கத்திலும் எதிரொலி செய்கிறது. மட்டிமன் குழுவின் அறிக்கையை யொட்டிய அரசாங்கத் தீர்மானத்தை இந்திய சட்டசபையில் சாய்த்துப் பண்டிதநேரு கிளத்திய திட்டம் மேல் வீடெனும் இராஜாங்க சபையில் காற்றிற் பறந்து போயிற்று. ஒத்துழையாமை யுள்ள மட்டும் அரசாங்கத்தார் ஒத்துழைப்புப் பாட்டுப் பாடிக்கொண்டே யிருப்பர்; ஒத்துழையாமை யொடுங்கினால் "சுய ஆட்சிக்கு நாடு இன்னுந் தகுதி பெறவில்லை" என்பர். ஒத்துழைத்தகாலத்தில் மாத்திரம் நாம் என்ன பெற்று விட்டோம்? ஓராண்டா ஈராண்டா நாம் ஒத்துழைத்தது? பற்பல ஆண்டு ஒத்துழைத்து ஒத்துழைத்து விரும்பிய தொன்றும் பெற்றோமில்லை. இன்னுமா ஒத்துழைப்பு? ஒத்துழைப்பு நமக்குப் பழம்பாடம். அப்பாடம் இனி நமக்கு வேண்டாம்.

"இந்தியா மந்திரி சொல்கிறார்; [illegible] சொல்கிறார்; இவர் சொல்கிறார்; ஒத்துழைத்துப் பார்க்கலாமே" என[illegible] ஒத்துழைக்கப் புகுதல் வகுப்புப் [illegible] வளர்ப்பதாக முடியும். லார்டு பர்[illegible] கூறும் "ஒத்துழைக்க வாருங்க[illegible] "வகுப்புப்பிணக்கை வளரும்[illegible] பொருள் கூறுவேன். போது ஒரு சோதனைக்[illegible] சோதனைகளுள் அச[illegible] ளே! தலைவர்களுக்[illegible] பரித்பூரில் தேசப[illegible] டத்துக்காதல் [illegible] மட்டும் ஒத்[illegible] லாகாது.

நாட்டி[illegible] கிளர்ச்சி[illegible] கருத்[illegible] வே[illegible]

யாண்டுப் போதல் வேண்டும்? தமிழ்த் தாயிடஞ் செல்வோமாக. அவள் சேவையில் உரிமையுணர்வு பெறலாம். தமிழ் மக்களே! அச்சேவைக்கு எழுங்கள்! எழுங்கள்!

பழந் தமிழ்மக்கள் தங்கள் வாழ்வை இரு கூறாகப் பிரித்து வாழ்ந்தார்கள். அவை அகவாழ்வு புறவாழ்வு என்பன. அகவாழ்வாவது, ஒத்த நலன் ஒத்த குணன் ஒத்த கல்வி முதலியவுடைய ஒருத்தியும் ஒருவனுங் கூடி நடாத்தும் இல்லற வாழ்வு. அவ்வாழ்வு இன்பவாழ்வாக இயங்கவேண்டுமேல் அதற்குப் பொருள் இன்றியமையாது வேண்டற்பாலது. "பொருளில்லார்க்கு இவ்வுலகமில்" என்றார் பொய்யாமொழியாரும். அப்பொருள் எவ்வாறு கிடைக்கும்?

பொருட்பேற்றிற்குக் கல்வியுந் தொழிலுந் தேவை. கல்விப்பயிற்சியுந்தொழிற் பயிற்சியும் பெறுதற்குச் சிறந்த அமைப்புக்கள் இன்றியமையாதன. அவ்வமைப்புக்கள் செவ்வனே இடையூறின்றி இயங்க நாட்டில் அமைதி நிலவல்வேண்டும். மாற்றார் பகைகடிந்து அமைதி காக்க நல்லரசு வேண்டும். நல்லரசில்லையேல் நாடு காடாகும். ஒழுங்குபட்ட அரசிருந்தாலன்றி அகவாழ்வெனும் இல்லறம் ஒழுங்குபட நடைபெறலரிது. இவ்வரசு கல்வி பொருள் முதலியன கொண்டதே புறவாழ்வென்பது. இதனால் அகவாழ்விற்கும் புறவாழ்விற்குமுள்ள தொடர்பு நோக்கற்பாலது. அவையிரண்டும் உடல் உயிர்போன்றன. அகவாழ்வு அவ்வந்நாட்டு இயல்புக்கேற்றவாறு அமைந்து கிடப்பது. அவ்வாழ்விற்கரணமாறு அவ்வந்நாட்டு இயல்புக்கேற்ற வண்ணம் புறவாழ்வும் அமைதல் வேண்டும். அகமும் புறமும் ஒன்றுபட்ட வாழ்வே இயற்கை வாழ்வாகும். பழந் தமிழ்மக்கள் கோலிய முறை வழி எங்கணும் வாழ்வு நடைபெற்றவரின் உலகில் போரேது? அடக்கு முறை ஏது? ஒரு நாட்டார் இன்னொரு நாட்டாரை ஆள்வதேது? இப்பொழுது அகம் நம்முடையதாகவும் புறம் மற்றவருடையதாகவுமிருத்தலால் நாட்டில் இன்பமில்லை. அவ்வின்ப உரிமை பெறும் வழி யாது என்று ஆராயவன்றோ நாமனைவரும் இங்கே கூடியிருக்கிறோம்? பழந்தமிழ் நூல்கள் வழி காட்டுகின்றன. அவ்வழியைப் புதுக் கண்கொண்டு நோக்குவோமாக.

பண்டைத் தமிழ்நாட்டில் பிறப்பால் சாதி பாகுபாடிருந்ததாகத் தெரியவில்லை. நிலப் பாகுபாடொன்றே அந்நாட்டில் நிலவியிருந்தது. "பிறப்பொக்கும் எல்லா உயிர்க்குஞ் சிறப்பொவ்வா - செய்தொழில் வேற்றுமையான்" என்றார் நந்தமிழ்ப் பொய்யாரும். இடைக்காலத்தில் முளைத்த, பிறப்பு உயர்வு தாழ்வும், தீண்டாமை என்னுங் கொடுமையும் நாட்டை அடிமைக் குழியில் வீழ்த்திவிட்டன. அக்கொடுமையினின்றும் நாட்டை விடுவிக்க இதுபோழ்து அன்பர் பலர் முயன்று வருகிறார். அம்முயற்சிக்குப் பழந்தமிழ் நூலாராய்ச்சி பெருந்துணை செய்யும் என்று நான் விரித்து[illegible]றவேண்டுவதில்லை.

பழந்தமிழ் நாட்டில் பெண்மக்கள் நிலை எவ்வாறிருந்தது என்பதும் ஆராயற் பாலதே. அதுகுறித்தென[illegible]ளத்தெழும் அவாவினைக் காலத்தின் அருமை நோக்கி அடக்கி இரண்டோர் உரைகூறப் புகுகிறேன். [illegible] நலவியும் ஒத்த கல்வியுடையரா[illegible] என்னுங் குறிப்பும், 'பெண்மகள் தனக்கினியவொருவனைத் தனக்குரிய தலைவனாகத் தானே தெரிந்தெடுக்கும் உரிமை பெற்றிருந்தாள்' என்னுங் குறிப்பும், இன்னபிறவும் பழந்தமிழ் நாட்டுப் பெண்மக்கள் நிலையைப் புலப்படுத்தும். விரிவு களவியலிற் காண்க.

"பெண்ணை வெறுத்தல் பேரின்பம்" என்னும் பாழுங்கொள்கை இடைக்காலத்தில் தோன்றியதாகும். பெண்ணழகில் அன்புக் கடவுளுண்மைகாணும் பெருமை வாழ்வு பெற்றிருந்தார்கள் நம்பண்டைத் தமிழ் மக்கள். இறந்து படாது இன்றுமுள்ள பழந் தமிழ் நூல்கள் அறம் பொருள் இன்பம் என்னும் மூன்றையே அறிவுறுத்தல் காணலாம். ஆண்மகன் தன்னை யொத்த பெண்மகளை என்று காமப் பொருளாகக் கருதினனோ அன்றே இன்பம் சிற்றின்பம் பேரின்பமெனப் பிரியலாயிற்று. அப்பிரிவு [illegible]ன்றிய நாள்தொட்டு உலகும் கூடா[illegible]க்கத்துக்கு இரையாகித் தேய்கிறது. [illegible] பேரின்பத்தை விடெனக் கொண்ட[illegible] பின்னைய வழக்காகும்.

[illegible]ழர்கள் கடவுளுண்மையில் உறுதி[illegible]க்கள்" என்று சிலர் கடாவ[illegible]ள் கடவுள் உண்மையில் உறுதி[illegible]. ஆனால் அவர்கள் கொண்ட[illegible]வர்கள் கடவுளைக் 'கந்தழி' [illegible]ல் வழுத்தினார்கள். கட்[illegible]" எனபது. அழுக்காறு[illegible]ய கட்டுகள் கடந்து[illegible] அக் 'கந்தழி' என்[illegible] பதங்கள் யாவை [illegible]டை அன்பே" [illegible]ன்பர் - பணி[illegible]ம' என்றும் [illegible]தல் காண்க. [illegible] இயற்கை [illegible]ன்றோ? [illegible]ழுந்த அன்புக் கொழுந்தன்றோ நம் பெண்ணமிழ்தம்? அப்பெண்ணமிழ்தமா காமப் பொருள்? கொடுமை! கொடுமை!! மாசுபடர்ந்த மனத்தன்றோ பெண்ணெனும் பெருமை காமப்பொருள்? மாசிலா மனத்தார்க்கு அப் பெண்ணெனும் பெருமை காதற்கடவுளல்லவோ? அப்பெண்ணொடு கூடி வாழும் வாழ்வன்றோ இயற்கை வடிவான இறையனைக் கூட்டும் வாழ்வாகும்? இயற்கையை விடுத்து இறைவனை எவ்வாறு காணமுடியும்? இது போழ்து உலகம் போற்றுங் கவியரசர் ரவீந்திரநாத்தாகூர் கொள்கை பெரிதும் பழந் தமிழர் கொள்கைக்கு அரண்செய்வதெனச் சுருங்கச் சொல்கிறேன்.

பெண்ணுக்குரிமை நல்கிய என்னருமைத் தமிழ்நாடே! இதுபோழ்து யாண்டுளாய்யாண்டுளாய் என்று அலமருகிறேன். அவ்வுரிமை நாட்டை மீண்டுங் காண எவர் முயலல் வேண்டும்? தமிழகத்திற் பிறந்த நாமல்லவோ முயலல் வேண்டும்? என்னுடன் பிறந்த அருமைத் தமிழ் மக்களே! அந்நாட்டைக்காண வீறு கொண்டெழுங்கள்; எழுங்கள்.

இனித் தமிழ் நாட்டின் கல்வி இசை ஓவியம் மருத்துவம் வானாராய்ச்சி தொழில் வாணிபம் அரசியல் வீரம் முதலியவற்றின் மீது சிறிது கருத்துச் செலுத்துவோம். தமிழ் இயல் இசை நாடகம் என்னும் மூன்று வழியிலும் வளர்ந்து வந்தது. தமிழ்க் கல்வித்திறனை யுணர்த்தப் பழைய சங்கமருவிய நூல்களும், பெரிய புராணம், கம்பராமாயணம், தேவார திருவாசகம், நாலாயிரப் பிரபந்தம் முதலிய நூல்களும் கருவிகளாகத் துணைபுரிகின்றன. பன்னூறு ஆண்டுகளாக நாடு உரிமையிழந்தமையானும், மக்கள் நாட்டுக் கல்வியல்லாத கல்வியை வயிற்றுப் பிழைப்பு நாடிப் பயின்று வருதலானும், நாட்டில் நல்லிலக்கியங்கள் பிற்காலத்தில் தோன்றவில்லை.

தமிழ்நாட்டுக்கெனச்சிறப்பாக இசையுண்டு. இதனை வலியுறுத்தச் சிலப்பதிகார அரங்கேற்றுகாதை ஒன்றே சாலும். தமிழ்நாட்டின் இசைச் சிறப்பைக் காலஞ்சென்ற தஞ்சை ஆபிரகாம் பண்டிதர் இயற்றிய "கருணாமிர்தசாகரம்" என்னும் விரிந்த நூலில் பரக்கக் காணலாம். தமிழ்நாட்டின் மருத்துவ மாண்பைச் சித்த நூல்கள் தெரிவிக்கின்றன. நாடிபார்த்து நோயியல்பு உணர்தலும், பாடாணங்களில் மருந்து செய்தலும் தமிழ் மருத்துவத்தின் தனிச்சிறப்பாகும். தமிழ் மக்கள் வான ஆராய்ச்சியில் வல்லுநராயிருந்தார் என்பதற்குச் "செஞ்ஞாயிற்றுச் செலவும் அஞ்ஞாயிற்றுப் - பரிப்பும் பரிப்புச் சூழ்ந்த மண்டிலமும் - வளிதிரிதரு திசையும்-வறிது நிலைஇய காயமும் என்றிவை-சென்றளந்தறிந்தோர் போல என்றும்-இனைத்தென்போருமுளரே * * *" என வரூஉம் ஒரு புறப்பாட்டை எடுத்துக் காட்டுவதோடு நின்றுவிடுகிறேன். இது குறித்து அணித்தே இவ்வுலகு நீத்த அறிஞர் சாமிகண்ணு பிள்ளை செய்த ஆராய்ச்சியைத் தொடர்ந்து பெருக்க வேண்டுவது நந்தமிழறிஞர் கடமை.

தமிழ்மக்கள் ஓவியப் பெற்றியை விரித்துக் கூறவேண்டுவதில்லை. பழைய சோழ கட்டிடங்களும், பழைய கோயில்களும், அமராவதி மாவலிபுரம் முதலிய விடங்களிலுள்ள சிற்ப நுட்பங்களும், பழந்தமிழ் மக்கள் அணிகலன்களும, அவர்கள் பாட்டுக்களும் தமிழோவியத்தின் உயர்விற்கு நிலைக்களன்களா[illegible]யிருக்கின்றன. தாகூர் முதலிய கவிவாணரும் தமிழர் ஓவியத்தைப் போற்றியிருத்தல் கவனிக்கத்தக்கது. "நெடு நிலைமாடத் திடைநிலத்திருந்துழி" என்றும், "நிரைநிலை மாடத்தரமியமேறி" என்றும், "மேல்மாடமும்" என்றும், "மான்கண்கால்அதர் மாளிகையிடங்களும்" என்றும் இளங்கோ அடிகள் தமிழ்மக்கள் கட்டிடங்களைச் சிறப்பித்திருத்தல் காண்க.

தமிழ் மக்கள் தொழின் முறைகள் சிலப்பதிகாரம் இந்திர விழவூரெடுத்த காதையிலும், மணிமேகலை கச்சிமா நகர்புக்ககாதையிலும் கடல்மடை திறந்தாலெனப் பொழியப்பட்டிருக்கின்றன. "பட்டினும் மயிரினும் பருத்தி நூலினும்-கட்டுநுண் வினை" கண்டவர்கள் நந்தமிழ் மக்கள்; "கிழியினுங் கிடையினுந் தொழில்பல பெருக்கிய"வர்கள் நந்தமிழ் மக்கள். "பாலாவி யன்ன" மிகமெல்லிய ஆடை நெய்தவர்கள் நந்தமிழ்மக்கள். இயற்கையின்ப வாழ்விற்கு இன்றியமையாத தொழில் பல தமிழ்நாட்டிலிருந்தன.

தமிழ் நாட்டின் வாணிபத் தொழின் முறைகளும் இந்நாட்டார் பண்டை நாளில் பிற நாட்டாரோடு செய்து வந்த வாணிபப் பெருக்கை நோக்குழி நன்கு புலனாகும். அந்நாளில் தமிழ்மக்கள் காலிற் பிரிவோடு கலத்திற்பிரிந்து கடல் கடந்து வாணிபஞ் செய்தார்கள். 'காலிற்பிரிதல்' 'கலத்திற்பிரிதல்' என வரூஉம் பழந்தமிழ் நூல்களின் வழக்கும், "திரைகடலோடியுந் திரவியந்தேடு" என்னும் பழமொழியும் தமிழ்மக்கள் கடல் கடந்து செய்த வாணிபப் பெருக்கைக் குறித்தல் காண்க. பண்டைத் தமிழ்நாடு கிறிஸ்து பிறப்பதற்குப் பன்னூறு ஆண்டுகளுக்கு முன்னரே பாபிலோன் எகிப்து ரோம் கிரீஸ் சிரியா முதலிய நாடுகளோடு வாணிபஞ் செய்ததைத் தற்காலச் சரித்திரக்காரர்கள் நன்கு ஆராய்ந்து பல நூல்கள் எழுதியுள்ளார்கள். அந்நாடுகளுக்குத் தேக்கு சந்தனம் தந்தம், தோகை மிளகு ஏலம் முதலியன தமிழ்நாட்டினின்றும் அனுப்பப்பட்டன என்பதற்குப் பல அகச்சான்றுகளிருக்கின்றன. யவனர்க்கும் தமிழ்மன்னர்க்குமிருந்த உறவும், அங்கும் இங்கும் ஒற்றர்களும் மெய்காப்பாளர்களும் நடமாடியதும் தமிழ் நூல்களில் வெள்ளிடைமலைபோல் அறியக்கிடக்கின்றன. யவனர் முதலிய சொற்கள் தமிழ் நூல்களில் நுழைந்ததும் தோகை முதலிய தமிழ்ச்சொற்கள் தூகி முதலிய சொற்களாக மருவி ஹீப்ரு முதலிய மொழிகளில் நுழைந்ததும் ஆராயற்பாலன. இவ்வுண்மைகளைத் திரட்டிச் சரித்திர வடிவாக உலகுக்கீந்த கனகசபை பிள்ளை, சவரிராய பிள்ளை, நல்லசாமி பிள்ளை, சூரியநாராயண சாஸ்திரியார், சீநிவாச பிள்ளை முதலிய தமிழ்மக்கள் நன்றி என்றும் மறக்கற்பாலதன்று.

இவ்வுலகியற்றுறைகள் யாவும் நேர்பட இயங்குதற்கு அந்நாளில் நிலைக்களனாக நின்றது அரசியலேயாகும். நல்லரசியல் இல்லா நாட்டில் அமைப்பேது? வாழ்வேது? அறவொழுக்கமேது? ஒருநாட்டின் நாகரிகமோ அநாகரிகமோ அந்நாட்டின் அரசியலையன்றோ பொறுத்து நிற்கும்? அரசியல் என்பது உலகிடை மறவினை மலியாது அறவினை மலியுமாறு செய்தற்கு ஏற்பட்ட ஓர் அமைப்பு. அது குடியாட்சியோ கோனாட்சியோ குடிக்கோனாட்சியோ எவ்வாட்சியோ பற்றி யியங்கினும் இயங்க. அதனால் குடிமக்கட்குக் கேடு விளைதலாகாது என்பதொன்றே கவனிக்கற்பாற்று. பெயருக்குக் குடியாட்சி யென்றோர் ஆட்சி வகுத்துச் செல்வாக்குடைய சில்லோர் ஒன்று கூடி நாட்டை வருத்துவதால் என்னபயன்? எவ்வாட்சி ஆயினும் அதன் அடியில் அறமும் அன்பும் அருளுங் கால் கொண்டு நிற்றல் வேண்டும். இவையில்லா அரசியல் அரசியலாமோ? பழந்தமிழ் நாட்டில் வளர்ந்த அரசியல் பெரிதும் அறத்தையும் அன்பையும் அருளையும் அடிப்படையாகக்கொண்டு நிலவியது என்பதற்குச் சான்றுகள் பலவுள. "நெல்லும் உயிரன்றே நீரும் உயிரன்றே - மன்னன் உயிர்த்தே மலர்தலை யுலகம்" என்று புறநானூறு உலகத்துக்கு உயிர் அரசு என்பதைத் தெரித்தல் காண்க. உயிரனைய அரசு கோல் கோடி மறவினை பெருக்கின் நாட்டுநிலை என்னாம்? அந்நாட்டினுங் கடும்புலிவாழுங் காடே நன்று. ஒரு நாட்டார் தந்நிறை காக்கவேண்டுமேல் முதலாவது அவர் நல்லரசு கோலிக் கொள்ளல் வேண்டும். தமிழ்மக்கள் அரசின் பெற்றி யுணர்ந்த முதியவர்களாகலான் அவர்கள் அரசை உயிரெனக் கொண்டார்கள். அம்மக்கள் நிலைக்கேற்ற முறையில் அரசு அந்நாள் அமைந்திருந்தது. பழந்தமிழ் அரசின் நடுநிலையும் அருட்டன்மையும் ஈண்டு விரிக்கிற் பெருகும். "அறநெறி முதற்றே அரசின் கொற்றம் - அதனால் நமரெனக் கோல் கோடாது - பிறரெனக்குணங்கொல்லாது-ஞாயிறன்ன வெந்திறல் ஆண்மையும் - திங்களன்ன தண்பெருஞ் சாயலும் - வானத்தன்ன வண்மையும் மூன்றும் - உடையையாகி * * *" என்றும், "சோறு படக்குந் தீயொடு - செஞ்ஞாயிற்றுத் தெறல் அல்லது - பிறிதுதெறல் அறியார் நின்னிழல் வாழ்வோரே-திருவில் அல்லது கொலைவில் அறியார் - ஞாஞ்சில் அல்லது படையும் அறியார்" என்றும்வரும் புறப்பாக்களையோர்க. கண்ணகியின் வீரச்செயலால் அவளது கொழுநனாகிய கோவலனைக் கொன்றது தவறு என்று பாண்டி மன்னன் உணர்ந்ததும் "யானோ அரசன் யானே கள்வன்" என்று மண்ணில் வீழ்ந்து உயிர்துறந்த ஒன்று தமிழரசின் பண்புரைக்குமன்றோ?

பழந்தமிழரசின் அமைப்பு முறைகளை விரித்தற்கு அஞ்சுகிறேன். "படைகுடிகூழ் அமைச்சு நட்பு அரண்ஆறும் - உடையான் அரசருள் ஏறு" என்னுந் திருக்குறளால் அரச அங்கமும், "குடிதழீஇக் கோலோச்சு மாநில மன்னன் - அடிதழீஇ நிற்கும் உலகு" என்னுந் திருக்குறளான் அரசியல்பும் விளங்கப் பெறுகிறோம். 'ஐம்பெருங்குழு' வொடு 'எண்பேராய'முங் கொண்டது நந்தமிழரசு என்று சுருங்கச் சொல்கிறேன். தமிழ் அரசின் போர முறைகள் தொல்காப்பியம் முதலிய விரிந்த நூல்களிற் காண்க. அக்காலக் கடற்போர் முதலியவற்றைப் பதிற்றுப்பத்து முதலிய நூல்களிற் காண்க.

இருபதாம் நூற்றாண்டு நாகரிகத்தில் முதிர்ந்தநூற்றாண்டு என்று சொல்லப்படுகிறது. இந்நாகரிக நூற்றாண்டில் ஐரோப்பாவில் நடைபெற்ற பெரும்போரில் ஜெர்மானியர் பெல்ஜியத்தில் நிகழ்த்திய கொடுமைக்கோர் அளவுமுண்டோ? நிலத்திலிருப்போர் இன்னாரெனவுங் கருதாது ஆகாயவிமானத்தினின்று குண்டெறிதலும் நச்சுக்காற்று விடுதலும் என்ன நாகரிகம்? இதுபோழ்து பிரஞ்சுக்காரர் சிரியாவில் குழந்தை பெண் நோயாளி என்றும் உன்னாது ஆயிரக் கணக்கான மக்களை வதைத்த இருபதாவது நூற்றாண்டின் நாகரிகம் என்னே! கிறித்தவ நூற்றாண்டு தொடங்குதற்கு முன்னரே நந்தமிழ் மக்கள் போர் முறைகளை ஒழுங்குபடக் கோலியிருந்தார்கள். அம்முறைகள் தமிழ்மக்கள் நாகரிகத்தைப் புலப்படுத்துகின்றன. மாற்றார்மீது அறப்போர் தொடங்குதற்கு முன் தமிழ் வீரர்கள் ஆன் ஆன்அனைய அந்தணர் குழந்தை பெண் முதலியோரைப் போர் நிலத்தினின்றும் விலகுமாறு அறிவுறுத்தி அன்னார் அவணிருந்து விலகிய பின்னர் அம்பு சொரிவார்கள். இதனை "ஆவும் ஆனியற் பார்ப்பன மாக்களும் - பெண்டிரும் பிணியுடையீரும் பேணித் - தென்புல வாழ்நர்க் கருங்கடன் இறுக்கும்-பொன்போற் புதல்வர்ப் பெறாஅதீரும்-எம்மம்பு கடிவிடுதும் நும்மரண் சேர்மின் என-அறத்தாறு நுவலும் பூட்கை***" என வரூஉம் புறப்பாட்டானுணர்க. போரினும் அறநெறிகாத்த அருள்நாடு நந்தமிழ் நாடு.

பழந்தமிழ் மக்கள் வீரம் அளந்துரைக்கற்பாலதன்று. விரிவு புறநூல்களிற் காண்க. முதியோள் ஒருத்தி தன்மகன் செருக்களத்தில் புறமுதுகிட்டான் என்று கேட்டதும், அஃதுண்மையானால் அவனுக்குப் பாலூட்டிய என் மார்பை அரிந்தெறிவேன் என்று வாள்தாங்கிப் போர்க்களம் புக்குப் பார்த்த போது அவன் இறந்து பட்டிருப்பது கண்டு அவனை ஈன்ற பொழுதினும் பெரிதுவந்த வரலாறும், மற்றொரு வீரத்தாய் தன் தலைவன் போர்க் களத்தில் உயிர்துறந்த அடுத்த நாள் செருப்பறை கேட்டுத் தன்னொரு புதல்வனை அகமலர்ச்சியோடு போருக்கனுப்பிய வரலாறும் இத்தமிழ் நாட்டில் நிகழ்ந்தன. "நரம்பெழுந் துலறிய நிரம்பா மென்றோள்-முளரி மருங்கின் முதியோள் சிறுவன்-படையழிந்து மாறினனென்று பலர் கூற-மண்டமர்க் குடைந்தனனாயின் உண்ட என்-முலையறுத்திடுவென் யானெனச் சினைஇக்-கொண்ட வாளொடு படுபிணம் பெயராச்-செங்களந் துழவுவோள் சிதைந்து வேறாகிய-படுமகன் கிடக்கை காணூஉ-ஈன்ற ஞான்றினும் பெரிதுவந்தனளே." "கெடுக சிந்தை கடிதிவள் துணிவே-மூதின் மகளிர் ஆதல் தகுமே-மேனாள் உற்ற செருவிற்கு இவள் தன்னை-யானை எறிந்து களத்து ஒழிந்தனனே-நெருநல் உற்ற செருவிற்கிவள் கொழுநன்-பெருநிரை விலங்கி ஆண்டுப் பட்டனனே-இன்றும், செருப்பறை கேட்டு விருப்புற்று மயங்கி-வேல்கைக் கொடுத்து வெளிது விரித்து உடீஇப்-பாறு மயிர்க் குடுமி எண்ணெய் நீவி-ஒருமக னல்லது இல்லோள்-செருமுக நோக்கிச் செல்கென விடுமே" என வரூஉம் புறப்பாக்களில் அவ்வரலாறு காண்க.

ஒரு முதியவள் வீரமும் கொழுநனை யிழந்த [illegible]கியின் வீரமும் இத்தகைத்தெனில் அந்நாள் இளைஞர் வீரம் எத்தகைத்தா யிலங்கியிருக்க வேண்டும் என்பதை நீங்களே ஊகித்துக்கொள்ளலாம். வீரம் என்பது தாய்க்கருவினின்றும் அரும்புதல் வேண்டும். வீரக்குழந்தைகளைப் பெறுந் தாய், கல்வியறிவிற் சிறந்தவளாய் உரிமையுணர்வு உடையவளாயிருத்தல் வேண்டும். முன்னாளில் பெண்மக்கள் இவைகளைப் பெற்று வீரஞ்செறிந்த தாய்மார்களாக வாழ்ந்தமையான் அவர்கள் வயிற்றில் வீரப்பிள்ளைகள் பிறந்தார்கள். இந்நாளிலோ? வெட்கம்! வெட்கம்!!

பழந்தமிழ்நாட்டு நிலையை விளக்க ஈண்டொன்று எடுத்துக்காட்ட விரும்புகிறேன். ஒருவர் ஒரு கிழவனை நோக்கி "ஆண்டு பலவாயினும் நரையில்லாமலிருப்பதென்னை?" என்று வினவினர். அதற்கு அம்முதியோன் இறுத்த விடை வருமாறு:—"யாண்டுபலவாக நரையிலவாகுதல் - யாங்காகியரென வினவுதிராயின் - மாண்டஎன் மனைவியொடு மக்களு நிரம்பினர் - யான்கண்டனையர்என் இளையரும் வேந்தனும்-அல்லவை செய்யான் காக்கு மதன்றலை-ஆன்றவிந்தடங்கிய கொள்கைச்-சான்றோர் பலர்யான் வாழும் ஊரே." இப்பாவான் பண்டைக்கால மனைவிமக்கள் நிலை, ஆட்கள் நிலை, அரசுநிலை, ஊரார் நிலை முதலியன விளங்குதல் காண்க. நீண்ட நாள் வாழ்விற்கு அல்லவை செய்யா அரசு வேண்டற்பாலது என்பதற்கு விரிவுரை வேண்டுங்கொல்!

பழந்தமிழரசு அறத்தை - அன்பை - அருளை அடிப்படையாகக்கொண்டு நிலவியதென்புதற்குத் தாலிபுலாக நியாயம்பற்றி ஈண்டெடுத்துக்காட்டிய சில காட்டுகளே சாலும். இன்னும் விரிக்கிற் பெருகும்.

முன்னை நாளில் இசைபட வாழ்ந்த தமிழ் மக்கள் குண நலன்கள் பலபல. அவைகளுள் ஒன்றைச் சிறப்பாக ஈண்டுக் குறிக்கிறேன். அதாவது விருந்தோம்பல். விருந்தோம்பலில் தமிழ்மக்கள் பேர்பெற்றவர்கள் என்பது எவரும் அறிந்ததொன்று. வாழ்க்கையே விருந்தோம்பலுக்கென்று திருவள்ளுவனார் கூறியுள்ளார். "இருந்தோம்பி இல்வாழ்வதெல்லாம் விருந்தோம்பி-வேளாண்மை செய்தற்பொருட்டு" என வரூஉந் திருக்குறளை நோக்குக. பாரதப் போருக்கு அழைக்கப்பட்ட தமிழ் மன்னன் போர்ற் கலவாது போரில் தலைப்பட்டவர்க்குச் சோறூட்டும் அறத்தொண்டேற்றது ஈங்கு நினைவிற்கு வருகிறது. "வலங்குளைப் புரவி யைவரொடு சினைஇ - நிலந்தலைக் கொண்ட பொலம்பூந் தும்பை-ஈரைம் பதின்மரும் பொருதுகளத் தொழியப்-பெருஞ்சோற்று மிகுபதம் வரையாது கொடுத்தோய்" என வரூஉம் மு[illegible]

ராயர் பாட்டைப்பார்க்க. இவ்விருந்தோம்பும் நீர்மை இக்காலத்தமிழ்நாட்டில் அருகிவருதல் காணக் கண்ணீர் பெருகுகிறது. காரணம் என்னை? வறுமையா? அன்று; அன்று. தற்கால நாகரிகக்கல்வியால் ஏற்பட்டுள்ள ஆன்மநேயஒருமைப்பாட்டழிவே யாகும். மீண்டும் அந்நேயம்பெற நாம்பழந்தமிழ் நாட்டைப்புது முறையில் காண்டல்வேண்டும். அதன்பொருட்டே தமிழ்நாட்டின் பெயரால் நாம் அனைவரும் இங்கே கூடியிருக்கிறோம்.

இத்துணைச்சிறப்பு வாய்ந்த நமது அருமைத் தமிழ் நாடெங்கே? தமிழ்நாட்டின் வழக்க ஒழுக்கமெங்கே? அன்பெங்கே? அரசெங்கே? வீரத்தாய்மார்களெங்கே? தமிழ்த்தாயெங்கே? தமிழர்களே! உங்கள் தொன்மை என்ன? உங்கள் பெருமை என்ன? உங்கள் ஆண்மை என்ன? உங்களுக்குள் இதுபோழ்து எத்துணைப்பிளவு? எத்துணைப்பிரிவு? நந்தமிழ்த் தாய் கால்வேறு கைவேறு தலை வேறு வேறாகக் கூறுபட்டுக் கிடப்பதைக்காண உங்கட்குக் கண்ணில்லையா? மனமில்லையா? மீண்டும் நீங்கள் பண்டை நிலை எய்த வேண்டாமா? வேண்டுமேல் பழந்தமிழ் நூல்களை ஆராய்ந்து உண்மைத் தமிழ்நாட்டைக் க[illegible] எழுங்கள்! எழுங்கள்!!

"இத்தமிழ் நாட்டவ[illegible] நாம் பலப்பல சாதியினராய்ப் பலப்பல சமயத்தவராய்ப் பிரிந்து பிளவுபட்டுக் கிடக்கின்றோமே; ஒருமைப்பாட்டுக்கு வழியும் உண்டோ" என்று சிலர் வினவலாம்; சிலர் கருதலாம். சாதி சமய வேறுபாடுகளைக் கடந்து நின்று நம்மனைவரையும் ஒருமைப்படுத்தி நிற்பது ஒன்றுளது. அதன்மீது நாம் கவலை செலுத்துவமேல் அது வேறுபாடுகளை வீழ்த்தி ஒருமைப்பாட்டை யுண்டுபண்ணும். அஃது எது? அதுதான் நமது அருமைத்தமிழ். தமிழ்நாட்டிற் பிறந்து தமிழ்நாட்டில் வளர்ந்து தமிழ்நாட்டைத் தாய்நாடாகக்கொண்ட எல்லாரும் பெரிதுந் தமிழே பேசுகிறார். பிறநாட்டினின்றுந் தமிழ்நாட்டிற் குடிபுகுந்தோர்சிலரே. அவருந் தமிழகத்தைத் தாயகமாகக்கொண்டிருத்தல் கண்கூடு. அச்சிலரது வழக்க ஒழுக்கங்களையும் வழிபாடு முதலியவைகளையுங் கொண்ட பலருந் தமிழரேயாவர். பழைமையில் பற்றுடைய மற்றவர் தமிழரென்பதை விளக்க வேண்டுவதில்லை. இவ்வனைவரும் தமிழ் என்னும் அமிழ்தை நாடோறும் வாழ்வில் பருகுஞ் சகோதரர்களே யாவர். இவர்கள் தமக்குள் ஒருமை காட்டுந் தமிழ்மொழியிற் பற்றுக்கொண்டு உழைப்பார்களாயின் தமிழ்நாட்டில் ஒருமைப் பாடு நிகழும் என்பது திண்ணம். சமயவேற்றுமை கடைச்சங்கப் புலவர்கள் காலத்திலேயே தலைகாட்டிற்று. அன்னுஞ் சமயவழி பாட்டிற் பன்மைப்பட்டு நின்றும் தமிழ் வளர்ப்பதில் ஒருமைப்பட்டு நின்றமையான் இவ்வொருமை அப்பன்மையை விழுங்கி நாட்டை யோம்பியதை ஆராய்ந்து உண்மைகண்டு ஒருமைப்படுவோமாக. ஆதலால் நம்மை ஒருமைப்படுத்த வல்ல தமிழை வளர்க்க முயல்வோமாக.

பிரிட்டிஷ் ஆட்சி

இத்தமிழ் நாட்டைப் போன்ற பல பெரும் நாடுகளைக் கொண்டது நமது பரத கண்டம். பாரத பூமிக்குக் கண்டம் என்னும் பெயர் பண்டை நாளில் நம்மவர்களாலேயே நிறுவப்பட்டது. பலதிற வழக்க ஒழுக்கம் மொழி முதலியவற்றைக் கொண்ட பல நாடுகளை உறுப்பாகப் பெற்ற பெருநிலம் கண்டம் என்பது எவரும் அறிந்த தொன்று. நாடுகளின் பன்மையால் பரத கண்டம் ஆக்கப்பட்டாலும் அப்பன்மையில் ஒருமையை அது வழங்காமலில்லை. பரதகண்டம் வடமொழியைப் பொது மொழியாகவும் வேதாந்தத்தைப் பொதுக்கொள்கையாகவுங் கொண்டிருந்த காலமுண்டு. இன்னும் ஹிந்துக்களுக்குள் அவ்வொற்றுமை காணலாம். இவ்வொற்றுமைக்குக் கால் கொண்டவர்கள் பாரத நாட்டின் பழங்குடி மக்களும், பல்லாயிரம் ஆண்டுகளுக்கு முன்னர்ப் பரதகண்டத்திற் குடிபுகுந்த ஆரிய மக்களுமாவார்கள். இவ்விருவருங் கலந்த ஓரினமே ஹிந்துசமூகம் என்பது. இவர்கள் ஆட்சியில் இந்தியாவின் பொருள் இந்திய மக்கட்கே பயன்பட்டு வந்தது. அப்பொருட் பேற்றால் அந்நாளில் இந்தியாவில் வளர்ந்த கலைஞானத்திற்கோர் அளவுமுண்டோ? வடமொழியில் கடல்போலக் கிடக்கும் நூல்களெல்லாம் அக்காலத்தில் எழுதப்பட்டனவேயாகும். பின்னைப் போந்த முஸ்லீம்களும் இந்தியாவைத் தாய் நாடாகவே கொண்டு ஆட்சி புரிந்தமையால் இந்தியாவின் வளஞ் சுருங்காதிருந்தது. இந்நாளில் நடைபெறும் பிரிட்டிஷ் ஆட்சியில் இந்தியா உற்றுள்ள நிலையை விரித்துரைக்க வேண்டுவதில்லை.

பிரிட்டிஷார் இந்தியாவைத் தாய்நாடாகக் கொண்டவரல்லர். ஒரு நாட்டைத் தாய்நாடாகக் கொண்ட ஓரினத்தவரால், அவரது வழக்க ஒழுக்கத்தினின்றும் முற்றும் மாறுபட்ட மற்றொரு நாட்டார் ஆளப்படுதல் இயற்கைக்கு மாறுபட்ட செயலாகும். தொழிலின் பொருட்டோ வாணிபத்தின் பொருட்டோ எதன்பொருட்டோ சில ஆண்டு தங்கி மீண்டும் தாயகம் புகுவோர் சார்பு நாட்டின் நலம் நாடுதல் அரிதே. இது மக்கள் இயல்பு. இந்தியாவின் நிலை இவ்வாறிருக்கிறது! முப்பது கோடி மக்களைக் கொண்ட இந்தியாவின் தலை எழுத்து நாலுகோடி மக்களால் தெரிந்தெடுக்கப்படும் பிரதிநிதிகளைக் கொண்ட பாராளுமன்றத்தால் எழுதப்படுகிறது. இம்முறையுள்ள மட்டும் இந்தியா இந்தியருடையதாமோ? இந்தியா இங்கிலாந்தின் நலத்துக்காகவா படைக்கப் பட்டது?

பிரிட்டிஷ் ஆட்சி முதல் முதல் இந்தியாவில் வாணிபஞ் செய்யப் போந்த ஒரு கூட்டத்தவரால் தொடங்கப்பட்டது. இந்தியா, அவ்வாணிபக் கூட்டத்தார் வயப்பட்டிருந்த போது அதன் உயிர் நாடியை அவர் குலைத்து விட்டனர். ஒரு நாட்டின் உயிர்நாடி எது? அந்நாட்டின் தொழின்முறையன்றோ? கிழக்கிந்திய வாணிபக் கூட்டத்தார் பொதுவாக நமது நாட்டுத் தொழின் முறைகட்கும், சிறப்பாக நமது நாட்டு நெய்தற்றொழில் முறைக்குஞ் சூழ்ந்த கேடுகளைச் சரித்திரத்திற் காணலாம். வறுமை கண்டறியா நமது வளநாடு வறுமையையும், பஞ்சங் கண்டறியா நமது பாரத நாடு பஞ்சத்தையும் பிரிட்டிஷ் ஆட்சியின் தொடக்கத்திலேயே கண்டது. அந்நாளில் நம்மக்கள் உற்ற துன்பத்தை ஆண்டவனே அறிவன். சரித்திரங்களில் படிக்கும்போது மனங் குழைந்து குழைந்துருகுகிறது. வறுமையையும் பஞ்சத்தையுங் கேட்டுமறியா மக்கள் திடீரென வறுமையிலும் பஞ்சத்திலும் வீழ நேர்ந்தால் எவ்வளவு இடர்ப்பட்டிருப்பார்கள் என்பதைச் சொல்லவும் வேண்டுமோ? நாளடைவில் அவ்வறுமையும் பஞ்சமும் நாட்டில் நிலை பெற்றமையால் அத்துன்பம் பொறுத்தல் இயல்பாகி விட்டது. அந்நாளில் துன்பம் பொறுது ஆங்காங்கே மக்கள் கலாம் விளைத்தார்கள். கலகமுங் குழப்பமுங் கொள்ளையும் எங்கணுந் தாண்டவம் புரிந்தன. நாடோறுந் தொழில் புரிந்து வாழ்வு நடாத்திய மக்களின் தொழில்கள் வீழ்த்தப்பட்டால் அவர்கள் என் செய்வார்கள்? வயிற்றின் கொடுமை அவர்களைக் கொள்ளைக்காரராகவும் கொலைஞராகவும் மாற்றுதல் இயல்பே.

ஒரு பெரும் நாட்டை இந்நிலைக்குக் கொணர்ந்த கிழக்கிந்திய வாணிபக் கூட்டத்தார்க்குப் பிரிட்டிஷ் பார்லிமெண்ட் என்ன தண்டனை விதித்தது? அவர்கள் வயப்பட்டுக்கிடந்த இந்தியா, இங்கிலாந்து அரசியாராக அந்நாளிருந்த விக்டோரியா மகாராணியார் நேர் பார்வைக்கு மாற்றப்பட்டது. இஃது அறவினையாகத் தோன்றவில்லை. பின்னைப் பாராளுமன்றம் என் செய்திருத்தல் வேண்டும்? அவ்வாணிபக் கூட்டத்தாரை இந்தியாவினின்றும் இங்கிலாந்துக் கழைப்பித்து, இந்தியாவை இந்தியர் வயம் ஒப்புவித்திருத்தல் வேண்டும். வாணிபக்கூட்டத்தார் ஆட்சியில் இடுக்கணுற்றுக் காய்ந்து வாடி வதங்கிக்கொண்டிருந்த இந்தியாவிற்கு மகாராணியார் அதுபோழ்து பிறப்பித்த அறிக்கை விண்ணினின்று பொழிந்த மழைபோலிருந்தது. மகாராணியார் ஆட்சியை இந்தியா மகிழ்ச்சியோடு ஏற்றுக்கொண்டது.

அவ்வாட்சியில் பின்னை ஏற்பட்ட கல்லூரிகளில் ஆங்கிலம் பயின்ற நம்மவர்களிற் சிலர் ஒருங்கு கூடி நியாய வரம்புக்கு உட்பட்ட கிளர்ச்சி செய்து சுயராஜ்யம் பெற்றுக் கொள்ளலாமெனக் கனவுகண்டு காங்கரஸ் மகாசபை கண்டனர். அம்முதியோர்கள் அந்நாள் விரும்பிய சுயராஜ்யம் பரராஜ்யமேயாகும். நாட்டுக்கலைகளைக் கொலை செய்து அந்நியக் கலைகட்கு ஆக்கந்தேடுவதாலும், நாட்டு உடைகளை நீக்கி அந்நிய உடைகளை அணிவதாலும், நாட்டுத் தொழில்களை விடுத்து அந்நிய ஆட்சி முறையில் பதவி பெறுவதாலும் சுயராஜ்யம் பெறலாம் என்று அவர்கள் கண்ட கனவு, நாளடைவில் நினைவாய் வினையாய் நாட்டை இந்நிலைக்குக் கொணர்ந்து நிறுத்தியிருக்கிறது. அப்பெரியோர்கள் மீது குற்றஞ் சுமத்த யான் அருகனல்லேன். அவர்களுக்கு அந்நாளில் சுயராஜ்யப் பொருள் அவ்வாறு தோன்றிற்று. என் செய்வது? அந்நியம் என்னும் மதுவுண்ட வெறியால் எல்லாவற்றையும் இந்திய மயமாக்க வேண்டுமென்று கல்லூரிகளில்பயின்று, நீதிமன்றங்களையும், உத்தியோகசாலைகளையும், சட்ட சபைகளையும் நிரப்பி அதிகாரவர்க்க ஆட்சிக்கு ஆக்கம் நம்மவர்களே தேடினார்கள். நம்மவர்கள் துணையால் இதுபோழ்து அதிகாரவர்க்கம் இந்திய நிலத்தில் வீழ்தது முற்றிய வேர்கொண்டு, காழ்த்த மரமாய்க் கவடுகோடு விடுத்து, இலையுந் தளிருஞ் செழித்துக் கொழித்து அரும்புமலர் காய்கனி பொதுள நிழல் தந்து நிற்கிறது. அந்நிழலில் பாரதமக்கள் என்னும் பைங்கூழ் உரிமை எனும் ஞாயிற்றொளி பெறாது வாட்டமுற்றுக் கிடக்கிறது. பிரிட்டிஷார் இந்தியர் விரும்புமாறு சில பெரும் பதவிகள் ஆங்காங்கே வழங்கத் தயங்குவதில்லை. கரும்பு தின்னக் கூலி வேண்டுமோ? காங்கிரஸ் மிதவாத வழி நின்று செய்த கிளர்ச்சியின் பயன் இதுவே.

1906-ம் ஆண்டு காங்கிரஸில் ஒருணர்வு பிறந்தது. "பிறர் காலில் வீழ்ந்து விண்ணப்பஞ் செய்வதாலும், சிற்சில பதவிகளை இந்தியர் பெறுவதாலும் நாடு விடுதலையடையாது. உரிமை என்பது நமது முயற்சியில் - நமது உழைப்பிலிருப்பது" என்னும் உணர்வு பாலகங்காதர திலகர் பெருமான், அரவிந்த கோஷ் முதலிய சில்லோர் பால் அரும்பிற்று. இவ்வுணர்வு காங்கிரஸுக்குள் பிளவு உண்டு பண்ணிற்று. இவ்வுணர்வினின்றும் மலர்ந்த இயக்கமே சுதேசிய இயக்க மென்று சொல்லப்படுவது. அவ்வியக்கம் சுதேசிய உணர்விற்கு விதை விதைத்தாலும், அதில் தலைப்பட்ட இளைஞர்கள் நாட்டின் இயல்புக்கும் அறத்துக்கும் மாறுபட்ட ஒரு முறையைக் கைக்கொண்டமையால் அவ்வியக்கம் வீழ்ந்து படலாயிற்று. அம்முறை போற்றத் தக்கதன்றாயினும் நாட்டின் உரிமை வேட்கையை அஃதுணர்த்தாமற் போகவில்லை. அவ்வேட்கையைத் தணிக்கப் பிரிட்டிஷ் அரசாங்கம் இந்தியாவிற்குச் சுயராஜ்யம் வழங்கியிருத்தல் வேண்டும். அதற்குப் பதிலாகக் கிளர்ச்சியில் தலைப்பட்ட பெரியோர்கள் சிறைக்கனுப்பப் பட்டார்கள். அதிகார வர்க்க ஆட்சிக்குத் துணைபோன மிதவாதிகளுக்கு ஒரு சிறு சீர்திருத்தம் வழங்கப்பட்டது.

1914-ம்ஆண்டு ஐரோப்பாவில் பெரும்போர் கிளம்பிற்று. அந்நேரத்தில் பிரிட்டன் இராஜதந்திரிகள் "சிறுநாடுகளின் உரிமைகாக்கும் பொருட்டுப் போரில் தலையிடுகிறோம்" என்று பாடிய பாட்டுக்கள் இன்னுஞ் செவியில் ஒலித்துக்கொண்டிருக்கின்றன. பிரிட்டன் பல வழியிலும் இந்தியாவின் துணை வேண்டிநின்றது. இந்தியா அதுபோழ்து என் செய்தது? வன்மஞ் சாதித்ததா? உதவி மறுத்ததா? இல்லையே! பொருளையும் ஆட்களையும் வாரி வாரி இந்தியா இறைத்தது. கொல்லாமையையே தமக்குரிய நோன்பாகக் கொண்ட குணமலை நமது மகாத்மாகாந்தி போருக்குச் சேனை திரட்டினாரெனில் இந்தியா மனமார்ந்து செய்த உதவியை உரைகளால் பகரவேண்டுவதில்லை அதுபோழ்து இந்தியா உதவிசெய்ய மறுத்திருக்குமாயின் போரின் வெற்றி தோல்வி நிலை மாறுபட்டிருக்கும். இந்திய வீரர்கள் போர்க்களத்தில் சிந்திய இரத்தமே பிரிட்டனுக்கு வெற்றி கூட்டிற்று என்பதை [illegible] மறுத்துக் கூறுவார் எவர்?

அவ்வேளை[illegible]யில் அன்னிபெஸண்ட் அம்மையாரால் சு[illegible] ஆட்சிக் கிளர்ச்சி தோற்றுவிக்கப்பட்டது. [illegible]அக் கிளர்ச்சி நியாய வரம்புக்கு உட்பட்ட [illegible] கிளர்ச்சி என்பதை [illegible] தலைவர்கள் உலகறியும். அக்கிளர்ச்சித் [illegible]வேண்டும்? ஏன் காப்பில் வைக்கப்படல் [illegible]ற்று ஆனால் 1917-ம் ஆண்டில் இந்தியா[illegible] ஜனப்பொறுப்பாட்சி நல்கப்படும் என்னும் உறுதி மொழி இந்தியா மந்திரியினிடமிருந்து பிறந்தது. அவ்வுறுதி மொழியின் பயனாக இந்தியாவில் இரட்டை ஆட்சி முளைத்தது. நூற்றைம்பது ஆண்டுகளாக உரிமையிழந்து வருந்தியும் பெரும்போரில் துணை புரிந்த இந்தியாவிற்கு ஏன் முழுஜனப் பொறுப்பாட்சி வழங்கலாகாது? இந்திய மக்களுக்குள் பிரிவை உண்டுபண்ணும் ஓர் ஆட்சி முறையையா வழங்குவது?

இரட்டை ஆட்சியிலுள்ள குறைகள் இன்ன இன்ன என்று சொல்லிச் சொல்லி நாவும் தழும்பேறிவிட்டது; எழுதி எழுதிக் கையும் மரத்துவிட்டது. அவ்வாட்சி நடாத்திய மந்திரிமார்கள் மட்டிமான் குழு முன்னர்க் கூறிய சான்றுகளே சாலும். மிண்டோமார்லி சீர்திருத்தத்தினும் இச்சீர்திருத்தம் பிரதிநிதி தொகையைப் பெருக்கியிருப்பினும், இயல்பில் அதினினும் இது சிறுமையுடையதேயாகும். மிண்டோ மார்லி சீர்திருத்தத்தில் ஜனப்பிரதிநிதிகளெல்லாரும் ஒரு சார்பாக நின்று அரசாங்கத்தை எதிர்த்து வந்தனர். இவ்விரட்டையாட்சியில் பிரதிநிதிகளுக்குள் மந்திரிக் கட்சியென ஒரு கட்சியும், அதை எதிர்க்குங் கட்சியென மற்றொரு கட்சியும் பிரிதலால் பிரதிநிதிகளுக்குள் ஒற்றுமை குலைந்து விடுகிறது. அரசியல் ஞானப்பெருங்கால் தலை விசுப்பெற்றிருக்குஞ் சிலர் "இது பார்லிமெண்ட் முறைதானே" என்று சொல்லுவர். பார்லிமெண்ட்முறை என்பதை மறப்பாரில்லை. அப்பார்லிமெண்டில் வீற்றிருக்கும் பிரதிநிதிகள் உரிமை மணங்கமழும் நாட்டுப் பிரதிநிதிகள் என்பதையும், நமது பிரதிநிதிகள் உரிமைபெறாத நாட்டுப்பிரதிநிதிகள் என்பதையும் அரசியல் ஞானிகள் சிறிதுநேரஞ் சிந்தித்துப் பார்ப்பார்களாக. உரிமை பெறாத நாட்டில் மந்திரிக்கட்சி என்றும் மற்றக்கட்சி என்றும் பிரிக்கும் சீர்திருத்தம் ஆள்வோர்க்கு நலந்தந்து ஆளப்படுவோர்க்குள் பிணக்கை விளைப்பதாகும்.

இவ்விரட்டையாட்சி மீதுள்ள உள்ளக் கோட்டமும், பாஞ்சாலப் படுகொலையும், கிலாபத்துக்கு நியாயம் பிறவாமையும் ஆக மூன்றும் ஒன்றுபட்டு அஹிம்சாதர்ம ஒத்துழையா இயக்கத்தோற்றத்துக்குக் கருவிகளாக நின்றன. இவ்வியக்கம் ஆள்வோர் ஆளப்படுவோர் என்னும் இருசாராரையுந் தூய்மைப் படுத்த வல்லது. இவ்வியக்கத்துக்குத் தலைமை பூண்டு நடாத்திய பெரியார் புத்தர் கிறிஸ்து போன்றவர். இவ்வற இயக்கத்தை ஒடுக்க அடக்கு முறை என் எழல் வேண்டும்? இவ்வரிய இயக்கத்தில் கொடுமையுண்டா? கொலையுண்டா? அன்பை அடிப்படையாகக் கொண்ட இயக்கமன்றோ இவ்வியக்கம்? இத்தகை இயக்கத்தையும் வீழ்த்த முயன்ற அரசாங்கத்தின் மனப்பான்மையை என்னென்று கூறுவது?

ஒத்துழையா இயக்கம் நாட்டில் செல்வாக்கு பெறாது வீழ்ந்து பட்டது என்று சிலவிடங்களிற் சொல்லப்படுகிறது. இது முழுப்பூசினிக்காயைச் சோற்றூடு மறைப்பதையொக்கும். ஒத்துழையா இயக்கத்துக்கு நாட்டில் ஏற்பட்ட செல்வாக்கைப் போல வேறு எவ்வியக்கத்துக்கும் ஏற்படவில்லை. இவ்வியக்கமே ஆள்வோர் மீது நாட்டார்க்குள்ள மனக்குறையை உள்ளங்கை நெல்லிக்கனி போல விளங்கச் செய்தது. பழிக்குப்பழி நினையாது, வன்மங் கொள்ளாது, பிறர் உறத்தந் துன்பத்தையும் அன்போடேற்றுப் பொறுத்து உவப்புடன் சிறைபுகல் எளிதோ? எளிதோ? அன்பர்களே! சிந்தித்துப் பாருங்கள். இச்செயற் கருந் தொண்டாற்றக் கல்வியால் செல்வத்தால் ஒழுக்கத்தால் சிறந்த பல்லாயிரவர் புறப்பட்டதை எவரே அறியார்? ஆறுமாத காலத்துக்குள் சத்தியாக்கிரக முறைபற்றி இருபத்தையாயிரவர் சிறைபுக ஒருப்பட்டதொன்றே ஒத்துழையாமைக்கு நாட்டில் ஏற்பட்ட செல்வாக்கை இனிது புலப்படுத்தும். இவ்வறப்போரில் தலைப்பட்டுச் சிறைபுகுந்த இருபத்தையாயிரம் பேர் உறுதிக்குக் கொலைப்போரில் தலைப்பட்டு உயிர்துறக்கும் இருபத்தைந்து கோடி பேர் உறுதியும் ஈடாகாது. ஒத்துழையாக் காலத்தில் பல்லாயிரம் பேர் தேசத்தின் பொருட்டு உடல் பொருள் ஆவி மூன்றையுந் தியாகஞ் செய்து நாட்டின் உரிமை வேட்கையை விளங்கச் செய்தமை கண்டும் பிரிட்டிஷ் அரசு என்ன செய்து விட்டது?

இவ்வொத்துழையாமையில் தலைப்பட்ட பலரும் அரசியல் கிளர்ச்சிக்காரரென்றும், ஆவேசத்தால் வேறு சிலரும் அக்கிளர்ச்சியில் சேர்ந்தனரென்றும், தேசத்தின் ஆதரவு அதற்கில்லையென்றுஞ் சிலவிடங்களில் சொல்லப்பட்டன. ஒத்துழையாமைக்குத் தேசத்தின் ஆதரவு உண்டு என்பதை அவ்வொத்துழையாமையினின்றும் பிறந்த சுயராஜ்யக் கட்சி வலியுறுத்திக் காட்டிற்று. சுயராஜ்யக் கட்சி தோன்றிய அவ்வாண்டே முதன் முறையிலேயே தேர்தலில் அக்கட்சியினர் வெற்றி பெற்று இரண்டு மாகாணங்களில் இரட்டையாட்சியைக் கொன்று, இந்திய சட்டசபையிலும் பலமுறை அரசாங்கத்தைத் தோல்வியுறச் செய்தது உலகறியும். ஆங்காங்கே நடைபெற்று வரும் நகரசபை முதலிய அமைப்புக்களின் தேர்தலிலும் வெற்றி அக்கட்சியினர்க்கு நிகழ்ந்து வருவதும், பல நகரசபைகள் அக்கட்சியினர் வயப்[illegible]டுக் கிடப்பதுங் கண்கூடாம். எதன் பட[illegible]டுத் தேசம் அக்கட்சிக்குத் துணைநிற்[illegible] பொருட்[illegible]த்துழையாமையை அக்கட்சி தன் [illegible]கிறது? ஒ[illegible]கையாகக் கொண்டுள்ளமையா[illegible] மூலக் கொள்[illegible]ாள்கையை இன்று சுயராஜ்[illegible]லன்றோ? அக்[illegible]மேல் காலை அது தேசத்[illegible]யக் கட்சி செகிழவி[illegible]தவிடுமென்பது திண்[illegible]தின் ஆதரவை ய[illegible]றைகளைப் பற்றிய[illegible]ணம். அக்கட்சியின் [illegible]த்தை இக்கே செ[illegible] வேற்றுமைகளில் என் [illegible]ழையாமைக்குத் [illegible]துகின்றேனில்லை. ஒத்[illegible]ப தொண்டை தேசத்தில் செல்வாக்குண்டு என்[illegible]. தேசத்[illegible]யே ஈண்டு வலியுறுத்தப் புகுந்[illegible] படித்[illegible]தார் மனம் ஒத்துழையாமையில் [illegible] கிடப்பதைச் சுயராஜ்யக் கட்சியார் வாயிலாகப் பிரிட்டிஷ் அரசு அறியாமலில்லை. அறிந்தும் என்ன செய்கிறது?

இவ்வேளையிலும் பிரிட்டிஷ் அரசின் சார்பாக இந்தியா மந்திரியாரும் முதன் மந்திரியாரும் என்ன சொல்கிறார்? "முட்டுக்கட்டை விடுத்து ஒத்துழையுங்கள்; பார்ப்போம்" என்றே சொல்கிறார். அவ்வுரையே இந்திய அரசாங்கத்திலும் எதிரொலி செய்கிறது. மட்டிமன் குழுவின் அறிக்கையை யொட்டிய அரசாங்கத் தீர்மானத்தை இந்திய சட்டசபையில் சாய்த்துப் பண்டிதநேரு கிளத்திய திட்டம் மேல் வீட்டினும் இராஜாங்க சபையில் காற்றிற் பறந்து போயிற்று. ஒத்துழையாமை யுள்ளமட்டும் அரசாங்கத்தார் ஒத்துழைப்புப் பாட்டுப் பாடிக்கொண்டே யிருப்பர்; ஒத்துழையாமை யொடுங்கினால் "சுய ஆட்சிக்கு நாடு இன்னுந் தகுதி பெறவில்லை" என்பர். ஒத்துழைத்தகாலத்தில் மாத்திரம் நாம் என்ன பெற்று விட்டோம்? ஓராண்டா ஈராண்டா நாம் ஒத்துழைத்தது? பற்பல ஆண்டு ஒத்துழைத்து ஒத்துழைத்து விரும்பிய தொன்று பெற்றோமில்லை. இன்னுமா ஒத்துழைப்பு! ஒத்துழைப்பு நமக்குப் பழம்பாடம். அப்பாடம் இனி நமக்கு வேண்டாம்.

"இந்தியா மந்திரி சொல்கிறார்; [illegible] சொல்கிறார்; இவர் சொல்கிறார்; ஒத்துழைத்துப் பார்க்கலாமே" என[illegible] ஒத்துழைக்கப் புகுதல் வகுப்புப் [illegible] வளர்ப்பதாக முடியும். லார்டு பர்[illegible] கூறும் "ஒத்துழைக்க வாருங்க[illegible]" "வகுப்புப்பிணக்கை வளரும்[illegible]" பொருள் கூடிவேன். போது ஒரு சோதனைக்க[illegible] சோதனைக்குள் அக[illegible]னே! தலைவர்களுக்[illegible] பரித்பூரில் தேசப[illegible] டத்தக்காதல் [illegible] மட்டும் ஒத்த[illegible] லாகாது.

நாட்டில்[illegible] கிளர்ச்சி[illegible] சருத்[illegible] வேல[illegible]

வப்போது சிலபோலிச் சீர்திருத்த மெனுந் தண்டெறிந்தும், ஆட்சி புரிந்து வரும் அரசாங்கத்தின் போக்கைப் பலப்பல ஆண்டுகளாக அநுபவத்திற் கண்டும் தெளிந்தும் இன்னும் அதன் மாட்டு நம்பிக்கை கொள்வதும், இங்கிலாந்து சென்று காலில்விழுவதும், இன்ன பிற ஆற்றப் புகுவதுங் காலத்தை வீண் வழியில் கழிப்பதாகும்.

தொழிற் கட்சிப் பித்து நம்மவருட் சிலருக்குண்டு. இங்கிலாந்தின் நலத்துக்காக ஆங்கு ஏற்பட்டுள்ள கட்சிகளுள் அக்கட்சியுமொன்று. அக்கட்சித் துணையால் இந்தியா "பேரின்பம்" பெற்று விடுமென எவருங் கருத வேண்டுவதில்லை. அங்ஙனங் கருதுவது கனவாகவே முடியும். அக்கட்சி ஆட்சியிலிருந்த போது இந்தியாவிற்குஎன்னவழங்கிவிட்டது? அக்கட்சி ஆட்சியில் இந்தியா மந்திரியாகவிருந்த லார்ட் ஒலிவியர் பேச்சுக்கும், அவ்வாட்சிக்கு முன்னிருந்த ஆட்சியில் இந்திய மந்திரியாயிருந்த லார்ட்பீல் பேச்சுக்கும், இப்பொழுது இந்தியா மந்திரியாயுள்ள லார்ட் பார்க்கன் ஹெட் பேச்சுக்கும் பொருளில் ஏதாவது வேற்றுமையுண்டோ? ஒரே பொருளைப் பலதிறச் சொற்களால் அவரவர் வெளியிடுகிறார். லாயிட் ஜார்ஜ் முதல் அமைச்சராயிருந்தபோது, பார்லிமெண்டில் "எஃகுச் சட்ட" விழா நடாத்திய வேளையில், "இந்தியாவைப்பற்றி எக்கட்சியும் (தொழிற்கட்சியும் உள்பட) ஒரே கருத்தையே கொண்டிருக்கிறது" என்னும் பொருள்படப் பேசியதைக் கருத்திலிருத்தி நமது கடனை நாம் ஆற்றல் வேண்டும். இன்று இந்தியா சுயராஜ்யம்பெற்று விடின் நாளை எத்தனையோ கோடி கோடிப் பொருள் இங்கிலாந்து செல்லாது இந்தியாவிலேயே நின்றுவிடும். இந்நிலையை இங்கிலாந்துக்குக் கூட்டத்தொழிற்கட்சி உடன்படுமோ? எவரேனுந் தாஞ்சாக மருந்துண்பரோ?

காலத்தின் கோலத்திற்கேற்பப் பதவி பட்டம் முதலியவற்றைக் குறிக்கொண்டு ஒத்துழைத்து ஒத்துழைத்துத் தமது நலத்தை எவ்வழியிலாதல் முற்றுவித்துக் கொள்ளும் முயற்சிக்கென ஒரு கூட்டம் நாட்டில் திரண்டிருக்கிறது. அக்கூட்டத்திற் சேர்ந்தவர்கள் எல்லா வகுப்பிலும் எம்மூலையிலுமிருக்கிறார்கள். இவர்கள் எப்படியாதல் தேசத்தைப் பழைய ஒத்துழைப்புச் சேற்றில் தள்ள முயன்று வருகிறார்கள். அவர்கள் முயற்சிக்கு எக்காரணம் பற்றியும் தேசபக்தர்கள் துணை போதலாகாதென எச்சரிக்கை செய்கிறேன்.

வழி என்ன?

"நியாய வரம்புக்கிளர்ச்சி செய்து பார்த்தோம். வெறுக்கத்தக்க மூர்க்க நெறியையுங் கடைப்பிடித்துப் பார்த்தோம்; அஹிம்சா தர்ம வழி நின்றும் போராடிப் பார்த்தோம்; ஒன்று சட்டசபைகளைக் குலைத்தும் பார்த்தோம்; ஒன்றானும் நமது நோக்கம் நிறைவேறவில்லை; மீண்டும் ஒத்துழைத்தலுங் கூடாதெனில் வேறு வழி என்ன" என்று வினவுவோர் தொகை நாளுக்கு நாள் பெருகி வருகிறது. உரிமையில்லா நாட்டில் வாழும் நாம் வெற்றி தோல்வி குறித்து எவ்வியக்கத்திலுந் தலைப்படலாகாது. நேர்மையாகக் கடனாற்றுவதிலேயே கருத்தைச் செலுத்தல் வேண்டும். பயன் கருதாது வினையாற்றல் வேண்டுமென்பது கீதையின் உள்ளக்கிடக்கை. இதுகாறும் நாட்டிலெழுந்த இயக்கங்களுள் எவ்வியக்கத்தால் நாட்டில் உரிமை யுணர்வு அரும்பிற்று என்பதை யோர்ந்து உண்மைதேறி அவ்வியக்கம் முற்றும் தோல்வியுற்று அறவே மாய்ந்திருப்பினும் அதை மீண்டும் உயிர்ப்பிக்க முயலவேண்டுவது அறிஞர் கடமை.

நம்மவர்கள் உள்ளத்தில் தோன்றி உருக்கொண்டெழுந்த கருத்துக்களும் கொள்கைகளும் பலப்பல. அவைகள் எல்லாவற்றையுந் திரட்டிக் கூறிட்டுப் பார்த்தால் அவைகளை ஐந்து பகுதிகளாகப் பிரிக்கலாம். நியாய வரம்புக் கிளர்ச்சியொன்று; கருவி தாங்கிப் போர்புரிதல் மற்றொன்று; இன்னொன்று சட்டசபைகளில் நுழைந்து அரசினர் நல்வினைக்கு இணங்கியும் மற்றதற்குப் பிணங்கியும் நிற்றல்; வேறொன்று ஆட்சிக்குரிய சட்டசபை முதலிய எல்லா அமைப்புக்களை கட்டும் பற்றி அரசாங்க இயக்கத்தையே குலைத்தல்; பிறிதொன்று அரசாங்கம் ஒன்றிருப்ப… வும் நினையாமல், அரசாங்கத் தொடர்… எதன் மாட்டும் அணுகாது, நமது முயற்சி… ட்டுக்களுள்ள குறைகளைக் களைந்து, …றைகளைப் புதுக்க வேண்டுமென் …ழுவர்களினின்றும் பிரியுங் கிளைகளை …க்கிற் பெருகும்.

…வது நியாய வரம்புக் கிளர்ச் … கொள்வோம். இக்கிளர்ச்சி … உரிமை பெற்றதுண்டா? … இங்ஙனம் அறைகிறதா? … கிளர்ச்சியில் தலைப்பட்டு … ந்துவிட்டோம். அத … நலனும் நமக்குக் … அநுபவத்திற் கண்டு … நாட்டிலுள்ள …ன் யன்றி நாடு …ம். மேலும் …ல் இல்லை என் … இய…ரம்புக் …ள்ள …மூந,

சிற்சில குறைகளைக்களைய வேண்டித்தமது நாட்டிடை நிகழ்த்தற் குரியதன்றி உரிமையிழந்த நாட்டார் உரிமை குறித்து நிகழ்த்தும் உரிமைப் போருக்குரிய கருவியன்று. அத்தகைக் கிளர்ச்சியைப்பற்றி நாம் நினைப்பதும் ஆராய்வதும் வீண் முயற்சியாகும்.

(உ) கருவி தாங்கிப் போர்புரிதல் நாட்டுக்கு உரிமை அளிக்கவல்ல முறையேயாகும். இதுகாறும் உலகிடை நாட்டப்பட்ட உரிமைகள் யாவும் கத்திமுனையில் நாட்டப்பட்டனவேயாம். சரித்திரங்களில் இப்போரைப் பெரிதுங் காணலாம். கருவி தாங்கிப் போர்புரிதல் நமது நாட்டுக்கு இனி உரியதாகுமா? அஃது ஓர் உருப்பட்ட இயக்கமாக நாட்டில் கால் கொள்ளுமா? முயன்று முயன்று அதைக் கால் கொள்ளுமாறு செய்யினும் அதனால் பிரிட்டிஷாரை வெல்ல முடியுமா? நேயர்களே! நமது நிலையைக் கூர்ந்து கூர்ந்து ஆராயுங்கள். கொலைப்போர் வாயிலாக உரிமைபெறும் நிலையை இந்தியா கடந்து விட்டது. அவ்வியக்கத்தைப் பற்றிச் சிலர் மூலை முடுக்குகளில் பேசி இன்புறலாமேயன்றிச் செயலிற்கொணர இயலாது. இயலாமை ஒருபால் கிடக்க. அக்கிளர்ச்சி அறக்கிளர்ச்சியன்றாகலான் அதை நினைத்தலும் பாவம். இந்திய மக்களாய நாம் கொல்லாமையோம்பப் பிறந்தோமேயன்றிக் கொலையோம்பப் பிறந்தோமில்லை.

(ங) சட்டசபைகளைப்பற்றி நலத்திற் கலந்தும், கேட்டில் விலகியுமிருத்தல் என்பது ஆட்சி முறையைக் குலைப்பதாகாது. ஜனப்பிரதிநிதிகள் தீர்மானத்துக்கு மாறுபட்டு வினையாற்றும் உரிமை இராஜப் பிரதிநிதியினிடம் உள்ள வரை நலத்திற் கலந்தாலென்ன? கேட்டில் விலகினலென்ன? நியாயவரம்பு வழி நிற்கும் மிதவாதிகளும் தங்களுக்கு நலமெனத் தோன்றுதற்குத் துணை நின்றும் பிறவற்றிற்குத் துணை நில்லாமலுமே தங்கள் கடனாற்றி வருகிறார்கள். நமது சீநிவாச சாஸ்திரியார் எத்தனையோ அரசாங்கத் தீர்மானங்களையும் மசோதாக்களையும் எதிர்த்துமிருக்கிறார்; மாறுபட்டு வாக்குமளித்திருக்கிறார். சட்டசபை நுழையும் நியாய வரம்பினர் அனைவராலுஞ் செய்யப்படும் ஒன்று எவ்வாறு தனிக்கிளர்ச்சியாகும்? இப்பொழுதியங்குவது இரட்டையாட்சியாகலான், மந்திரி பதவிகளை ஏற்று மாற்றப்பட்ட இலாக்காக்களை இயக்கியும் மற்ற இலாக்காக்கள் இயங்காதவாறு அவைகளைத் தடுத்தும் வருமுறை கொள்வதும் நலத்துக்கிணங்கிக் கேட்டுக்கு விலக்கலின்பாற் பட்டதெனச் சொல்வோருமுளர். பண உரிமை பெறாத இரட்டையாட்சியில் இப்போலிப் போரெலாம் என்செய்யும்?

(ச) சட்ட சபைகளையும் பிறவற்றையும் பற்றி நலந் தீங்கு எல்லாவற்றையும் எதிர்த்து ஆட்சி முறையைக் குலைக்க வேண்டுமென்னுங் கொள்கை மேற்போந்த எல்லாவற்றினுஞ் சீரியதே. இவ்வியக்கம் வங்காளம் மத்திய மாகாணம் என்னும் இரண்டிடங்களில் வெற்றியுமளித்திருக்கிறது. ஆனால் அவ்வெற்றியால் ஆட்சி முறை யியங்காமலொழிந்ததோ? இல்லையே. "நமது செயலால் நமது மனோ நிலையைப் புலப்படுத்தலாமேயன்றி இப்பொழுதுள்ள நிலையில் ஆட்சி முறையை எவ்வழியிலுங் குலைத்தல் அரிது" என்று நண்பர்கள் நவில்கிறார்கள். நமது மனோ நிலை ஆள்வோருக்கு விளங்காமலா இருக்கிறது? இரண்டு மாகாண சபைகள் குலைக்கப்பட்டது கண்டும் பிரிட்டிஷ் அரசாங்கம் என்ன செய்ய முற்பட்டது? சட்ட சபைகளும் பிற அமைப்புக்களு மின்றியும் பிரிட்டிஷ் ஆட்சி இந்தியாவில் நடைபெறு நிலையிலிருத்தலால், சட்டசபை முதலியவற்றில் நுழைந்து தடைகிளத்துவதாலும் நமது நோக்கம் நிறைவேறாது.

(இ) முடிவாக நிற்பது ஒன்றே. அஃது எது? அரசாங்க அமைப்புக்களில் எவ்வித தொடர்புங் கொள்ளாது நாட்டின் குறைகளைக் களைந்து நாட்டுக்கல்வி தொழில் முதலியவற்றை வளர்ப்பதிற்கருத்துச்செலுத்துவது. நமது துணையின்றிப் பிரிட்டிஷ் ஆட்சி இங்கு நடைபெறலரிது. அத்துணையைச் சிறிது சிறிதாக மறுத்துக் கொண்டேவரின் அவ்வாட்சிநிலை என்னும் என்பதைச் சொல்ல வேண்டுவதில்லை. இவ்வியக்கத்தில் ஒருபால் அழிவு வேலையும் மற்றொருபால் ஆக்க வேலையும் நிகழ்ந்து வரலால் நாட்டின் உரிமை நாட்டினின்றும் அரும்புவதாகும். இவ் வழியும் ஆக்கமும் ஒருங்கே குறைவற நடைபெற்றுவரின் பின்னை அவை சட்டமீறல் வரிகொடாமை என்னுஞ் சத்தியாக் கிரகப் போருக்குந் துணை புரிவனவாகும். இவ்வறப் போருக்கு வேண்டப்படுங் கருவிகள் உள்ள நிறை, உண்மை, பொறுமை, அஹிம்சை, தியாகம் முதலியன. இவை தாங்க ஒருப்படாத நாட்டில் இப்போர் கேட்டையே விளைத்துச் செல்லும்.

மகாத்மாகாந்தி நமது நிலை ஆள்வோர் நிலை முதலியவற்றைக் கூர்ந்து கூர்ந்து உன்னி உன்னி ஆய்ந்தாய்ந்தே இவ்வொத்துழையா இயக்கத்தைத் தோற்றுவித்தார். இவ்வியக்கம் நாட்டில் எத்தகைப் புத்துயிர் அளித்தது என்பதை நாம் அறிவோம். இவ்வியக்கம் நாட்டார் நாட்டத்தை நாட்டின் மீது திருப்பிற்று; அதிகாரவர்க்க அமைப்புக்களைப் புல்லென மதிக்குமாறு செய்தது; நாட்டிலுள்ள குறைகளையெல்லாங் கல்விக் கல்விக் களைந்து வந்தது உரிமைக்குரிய இயக்கம் இஃதே இஃதே என நாடுங் கொண்டது. நாட்டின் மனதைக் கவர்ந்த இவ்வியக்கமுஞ் சாய்வுற்றது. காரணம் பலபடக் கூறலாம். நமது நாட்டில் நாம் பெண்மணிகளையும் ஏழைமக்களையும் பன்னெடு நாளாக வருத்திவந்த பழவினைகள் திரண்டு சௌரி சௌராவில் கொலையாயெழுந்து பார்த்தோலியிலெழவிருந்த சத்தியாக்கிரகப்போருக்குத் தடை நிகழ்த்தியவொன்றையே சிறந்த காரணமாகக் குறிப்பிடலாம். சத்தியாக்கிரக இயக்கம் ஓரிடத்தில் உருக்கொண்டு முதிர்ந்தெழும்போது ஏதாயினும் இடையூறு அதற்கு நிகழுமாயின் மீண்டும்அஃது அங்கெழநீண்டகாலமாகும் இஃது அவ்வியக்கத்தின் இயல்பு. பார்த்தோலியில் நேர்ந்த முட்டினால் ஒத்துழையாமை ஒடுங்கிவிட்டது மீண்டும் பழையபடி அவ்வியக்கத்தை உயிர்ப்பிக்க நாடு தற்போதுள்ள நிலையில் இடந்தாராது. ஆனால் அவ்வியக்கத்தைப் பற்றுக்கோடாகக் கொண்டு முறைகளைக் காலநிலைக்கேற்றவாறு மாற்றிக்கொண்டே போகலாம். காந்தியடிகள் காட்டிய அஹிம்சா தர்ம ஒத்துழையா வழியே நமது நாட்டு உரிமைக்குரிய வழி என்பதை மாத்திரம் நாம் மறத்தலாகாது

ஒரே கட்சி வேண்டும்

காந்தியடிகள் கோலிய சத்தியாக்கிரக முறைப்படி ஒத்துழையாமை இயங்காது ஒடுங்கினும், வேறு முறை பற்றியேனும் அதை உணர்வளவிலாதல் காத்து வரத்தேசத்தார் உறுதி கொள்ளலவேண்டும். மாறுதல் வேண்டாதாரும் சுயராஜ்யக் கட்சியாரும் பிணக்கின்றித் தத்தங் கடனாற்றி வருவரேல் மிக விரைவில் அணித்தே பழைய ஒத்துழையாமை காணக்கூடும். ஒத்துழையாமையில் இரண்டு திட்டங்களிருந்தன. ஒன்று அழிவுத் திட்டம்; மற்றொன்று ஆக்கத் திட்டம். அழிவுத் திட்டம் ஒத்துழையாமையோடு ஒடுங்கினும், அது வேறுவழியில் புது முறையில் நாட்டில் நிலவி வருகிறது. பள்ளி விலக்கு, நீதிமன்ற விலக்கு, சட்டசபை விலக்கு என்னும் மூன்றனுள் முதலிரண்டும் அறவே மாய்ந்தன. மூன்றாவதாய சட்ட சபையை வெளியே யிருந்து விலக்கற்குப் பதிலாக அதனுள் நுழைந்து அதைத் தகர்க்கும் முறை கையாளப்பட்டு வருகிறது. இம்முறை அழிவுத் திட்டத்தின் ஒருகூறாகும். இம்முறையில் கருத்து வேற்றுமையுண்டு என்பதை நான் மறக்கவில்லை. அழிவு வேலை அறவே இறந்துபடவில்லை என்பதொன்றே ஈண்டுக் கவனிக்கற்பாற்று. ஆக்கவேலையைப்பற்றிக் கருத்து வேற்றுமையில்லை. அஃது எல்லார்க்கும் உரியது. சட்ட சபை நுழைவில் விருப்பமில்லாத மாறுதல் வேண்டாதார் அச்சபை நுழைவோர் முயற்சிற்கு எவ்வழியிலும் இடையூறு நிகழ்த்தாது ஆக்கத் திட்டத்தில கவலை செலுத்தி வரலாம். சட்ட சபை நேயர்களும் இவ்வேலைக்குத் துணைபுரிந்து வரலாம். இவ்வாறு இருவர்க்குள்ளும் ஒத்துழைப்பு நேருமேல் பிணக்கு யாண்டிருந்து முளைக்கும்? இவ்வொற்றுமை நேயம் வங்காளத்தில் காந்தி - தாஸ் - நேரு ஒப்பந்த அறிக்கையில் முகிழ்த்தது; சமீபத்தில் பாடலிபுரத்தில் கூடிய அகில இந்திய காங்கிரஸ் கூட்டத்தில் அரும்பிற்று; கான்பூரில் அது மலர்ந்து மணம் வீசுமாறு தேசத்தார் முயலல் வேண்டும்.

கான்பூருக்குப் பாடலிபுரம் வழிகாட்டியிருக்கிறது. ஆனால் அவ்வழியில் சில காடு முரடான கோணல்களிருக்கின்றன. அவைகளை ஒழுங்குபடுத்தினால் அப்பாதை எல்லாரும் நடக்கும் ராஜபாதையாக விரிந்து நிற்கும். அவ்வொழுங்கு முறைகளில் சில குறிக்க விரும்புகிறேன்.

(க) முதலாவது காங்கிரஸுக்குள் சுயராஜ்யக் கட்சியென்றும், மற்றக் கட்சிகளென்றும் இருத்தல் கூடாது. காங்கிரஸ் கட்சியென ஒரே கட்சியிருத்தல் வேண்டும். கடவுளிடத்திருந்து பிரியும் உலகுயிர்போலக் காங்கரஸினின்றும் பிரிந்த சுயராஜ்யக் கட்சி இனித் தனித்து நில்லாது காங்கிரஸோடு ஒன்றுதல் வேண்டும். பழைய ஒத்துழையாமையில் உறுதி கொண்டுள்ள மாறுதல் வேண்டாதார் இராட்டை சங்கத்தில் சேர்ந்து தொண்டு செய்துவரலாம். இராட்டின சங்கத்துக்குக் காந்தியடிகள் விரும்பும் எல்லா வழிகளிலும் காங்கரஸ் துணைபுரிந்தே தீரல் வேண்டும்.

(உ) தேசத்திலுள்ள மற்ற அரசியல் கட்சியினருங் காங்கிரஸில் சேர மனங்கொள்ளல் வேண்டும். சேர்ந்தபின் அவரவர்கள் தங்கள் தங்கள் திட்டங்களை வலியுறுத்திக் காங்கிரஸில் கலாம் விளையாதிருத்தல் நாட்டின் நலன் நாடுவதாகும். நாடு முழு உரிமை பெறும் வரை நாட்டில் பலகட்சிகள் நிலவல் நாட்டின் ஆக்கத்தைக் குலைப்பதென்பதை எவ்வறிஞரும் ஒப்புவர். உரிமை பெற்றபின்னர்ப் புற்றீசல்போலப் பல கட்சிகள் புறப்படலாம். கட்சிப் பிணக்கிற்கு இடமளிப்பன சட்டசபை நுழைவு முதலியன. அப்பிணக்கெழா முறையில் திட்டங் கோலப்படல் வேண்டும்.

(ங) சுயராஜ்யக்கட்சித் திட்டத்தில் ஒத்துழையாக் குறி உண்மையான் அதை முதலாக்கொண்டு அதன்கண் பிணக்குக்கு மூலமாகவுள்ள சில முறைகளை மாற்றல்வேண்டும். சுயராஜ்யக்கட்சியார் சட்டசபையில் நுழைந்து உறுதிமொழி கூறிப் பீடத்தில் அமர்தலால் அவர்மாட்டுப் பலதிற ஐயங்கள் மற்றக் கட்சியார்க்கு நிகழ்கின்றன. மற்றக் கட்சியார் ஐயம் ஒருபால் கிடக்க சுயராஜ்யக் கட்சியில் சில வேடதாரிகள் சேர அக்கட்சி இடந்தருவதாகிறது. "உத்தியோகம் ஏற்கலாமா? ஏற்றாலென்ன" என்னும் பேய்ச்சோதனை சிலரையாதல் அலைக்கும். ஆதலால் சட்டசபை பற்றலைப்பற்றிய விதியில் சில மாறுதல் செய்யவேண்டும். கயையில் ஸ்ரீமான் ஸ்ரீநிவாச ஐயங்கார் கொணர்ந்த தீர்மானத்தை யொட்டி விதிசெய்வது நலம். சட்டசபையை வெட்ட வெளியாக்கி நாட்டிற்போந்து ஆக்க வேலைக்குத் துணைநின்று, வேறுநாட்டுப் பொருள் மறியல், கள்ளுக்கடை மறியல் முதலிய தடை வேலைகள் செய்து, சட்ட மீறலுக்கும் வரிகொடாமைக்கும் நாட்டைப் பண்படுத்தலாம். இவ்வாறு செய்யாது சட்டசபைக்குள் நுழைந்து போராடுவது வீண்பொழுது போக்குவதாகும். அவ்வழியிலும் இரண்டாண்டு கழித்தும் பார்த்தோம். மீண்டும் அந்நெறிபுக் குழலாது ஒருபடியேறிச் சட்டசபையை வெட்டவெளியாக்கும் முறைபற்றுவது நாட்டுக்குப் புத்துயிர் அளிப்பதாகும். மற்றக் கட்சியாரும் இதற்கு உடன்படுவது நலம். இப்போரில் தலைப்பட விருப்பமில்லாதார் எதிர் கட்சிகளை உண்டுபண்ணாமல் ஒதுங்கி நிற்றல் ஒழுங்கு.

(ச) காங்கரஸில் சேரும் ஒவ்வொருவரும் என்றும் எவ்வேளையிலுங் கதர் தரித்தே தீரல் வேண்டும் என்னும் விதியிருத்தல் வேண்டும். குறிப்பிட்ட சிலபோழ்து கதர் தரித்தல் என்னும் விதி நீக்கப்படல் வேண்டும்.

(இ) சட்டசபைத் தலைவர்பதவி வகித்தல், அரசாங்கத் தொடர்புடைய கூட்டங்களில் கலத்தல், பட்டமேற்றல், இன்னோரன்னபிற விலக்கப்படல் வேண்டும். இப்பதவிகளேற்றுள்ள அன்பர்கள் உடனே அவைகளினின்றும் விலகி விடல் வேண்டும்.

(சு) தேர்தல் காலங்களில் நாட்டுக்குரிய அறநெறி கடைப்பிடித் தொழுகுதல் வேண்டும்.

இத் திட்டங் கொண்ட ஒரே கட்சி காங்கரஸினின்றுங் கிளம்பினால் நாட்டில் எழுச்சியும் அதிகார வர்க்கத்துக்கு அச்சமும் நிகழும். சுயராஜ்யக்கட்சியார் ஒருபடி முன்னேற வேண்டுமே யொழிய ஒருபடியுங் கீழிறங்கலாகாது. முன்னேற்ற முறை நாட ஒருப்படாது இப்பொழுதுள்ள வண்ணமோ அல்லது கீழிறங்கவோ சுயராஜ்யக் கட்சி உளங்கொள்ளுமாயின், அதுவும் மற்றக் கட்சிகளுள் ஒன்றாகக் கருதப்படும். எம்முறையிலோ ஒத்துழையாமையை அடிப்படையாகக் கொள்ளும் ஓரியக்கத்துக்கே நாடு துணை செய்யும். வருந் திங்கள் முடிவில் கான்பூரில் கூடப் போகுங் காங்கரஸில் எல்லாக் கட்சிகளும் ஒன்றிக் காங்கரஸ் கட்சியெனும் ஒரே கட்சியாகப் பரிணமிக்க வேண்டுமென்று எல்லாம் வல்ல ஆண்டவனை வழுத்துகிறேன்.

வகுப்புப் பிணக்கு

எல்லாருங் காங்கரஸில் ஒரு கட்சியினராக ஒன்றிவிட்டால் வகுப்பு நலத்தை எவ்வாறு காப்பது என்று வகுப்பு நலன் நாடுவோர் கேளாதிரார். முதன்மை வகுப்புக் களித்தல் வேண்டுமா அல்லது நாட்டுக் களித்தல் வேண்டுமா என்பதைச் சகோதரர்கள் சிந்திப்பார்களாக. நாடு இல்லையேல் வகுப்பேது! பிற எது? சுவரை வைத்தன்றோ சித்திரம் எழுதல் வேண்டும்? வகுப்பு வகுப்பென்று எத்துணை நாள் அந்நிய ஆட்சி நிழலில் நின்று கொண்டிருப்பது? வகுப்பு நலன் நாடாது நாட்டு நலன் ஒன்றே நாடி உழைப்பது போற்றற்குரியது. நாட்டு நலனோடு வகுப்பு நலனையும் நாடிப் பிணக்கின்றி உழைக்கவுங் கூடும். அதிகார வர்க்கத்தோடு போர்புரிவதில் எக்காரணம் பற்றியும் எவ்வகுப்பாரும் பிணங்காது போர் முனையில் இணங்கி நிற்றல் வேண்டும். வகுப்புவாரிப் பிரதிநிதித்துவமோ எதுவோ எல்லாப் பிணக்குகளையுங்காங்கரஸுக்குள்ளே முட்டி மோதிக்கொள்ள வேண்டுமேயன்றிக் காங்கரஸை விடுத்து அப்பிணக்குகளைப் போக்கமற்றவிடம்நண்ணல் வினையைவிலக்கு வாங்குவதாக முடியும். நாம் அனைவரும் ஒருமுகமாக நின்று அறப்போர் புரிவமேல், உரிமைபெறல் உறுதி; உறுதி. நாட்டில் உரிமை மணங் கமழும்போது வகுப்புப் பிணக்குத் தணியும் என்பது எனது உள்ளக்கிடக்கை.

ஹிந்து முஸ்லீம்—ஹிந்து முஸ்லீம் ஒற்றுமை உரிமைப்போருக்கு எவ்வளவு இன்றியமையாததென்பதை அறியாதாரில்லை. ஒத்துழையாஇயக்கத்தின்போது அவ்வொற்றுமை நாட்டில் எவ்வாறு நிலைபெற்றிருந்தது என்பதும் நாட்டார்க்குத் தெரியும். அதுபோழ்து ஹிந்துக்களும் முஸ்லீம்களும் இந்தியரெனும் உணர்வோடு சிறைக் கோட்டம் நண்ணியது சரித்திரத்தில் பதியத் தக்கதாகும். அத்தகை ஒற்றுமைக்கும் குலைவு இதுபோழ்து நேர்ந்திருக்கிறது. வடநாட்டில் ஹிந்து முஸ்லீம் குழப்பம் இல்லாதவிடமில்லைஎன்றே சொல்லலாம். அந்நாட்டில் இரு வகுப்பாருள்ளும் …ண் …ரை

டெழும் அனல் காந்தியடிகள் அன்புப்புனலாலுந் தணியவில்லையெனில், அதன் கொதிப்பின் வேகத்தைக் கூறவும் வேண்டுமோ? அக்கொதிப்படங்க வேண்டுமேல், ஒத்துழையாமை போன்ற ஓர் இயக்கம் நாட்டில் தோன்றுதல் வேண்டும். தமிழ் நாட்டில் ஹிந்து முஸ்லீம் பிணக்கெனும் அனல் மூளாதிருப்பது குறித்து ஆண்டவனை வாழ்த்துகிறேன்.

பிராமணர் பிராமணரல்லாதார்—ஆனால் அவ்விடத்தில்பிராமணர் பிராமணரல்லாதார்க்குள்ளெழும் அனல்கொழுந்துவிட்டெரிகிறது. அவ்வெரியை எப்படித் தணிப்பது? வகுப்புவாரிப் பிரதிநிதித்தும் அதைத் தணிக்குமென்று சொல்லப்படுகிறது. இஃது ஒரோவழியில் அவ்வெரியைத் தணிக்கவல்லதேயன்றி முற்றும் அதைத்தணிப்பதாகாது.

பிராமணர் பிராமணரல்லாதார் பிணக்குக்கு முதற்காரணமெது என்பது கவனிக்கப்படல் வேண்டும். வயிற்றுக்கென ஆங்கிலம் பயில்வதே முதற்காரணம். அக்கல்வி பயின்றார் தொகைக்கேற்ப உத்தியோக பீடங்களில்லை. உத்தியோகம் பெறாத வருத்தம் வகுப்புப் பூசலை உண்டுபண்ணுகிறது; வகுப்புப் பிரதிநிதித்துவப் போராட்டத்தை எழுப்புகிறது. இப்பூசல் பொன்றவேண்டுமானால் வயிற்றுப் படிப்பு நாட்டம் நாட்டுத் தொழின் முறைகள்மீது திரும்பல்வேண்டும். பூசல் முதன் முதல் ஆங்கிலம் பயின்றவரிடத்திருந் தெழுகிறதா மற்றவரிடத்திருந் தெழுகிறதா என்பதை. ஆராய்ந்தால் உண்மை காணக்கூடும். இன்னும் வயிற்றுப்படிப்புப் பெருகப் பெருக நமது நாடு சுடுகாடாகுமென்பது திண்ணம்.

உத்தியோக அளவில்-அரசியல் கட்சியளவில் கட்டுப்பட்டுக்கிடந்த பிராமணர் பிராமணரல்லாதார் பிணக்கு இதுபோழ்து எல்லாத் துறைகளிலும் நண்ணி நண்ணித் திருவிளையாடல் புரிந்துவருகிறது. இப்பிணக்கு ஆரியர்திராவிடர்கிளர்ச்சி, வடமொழிதென்மொழிக் கிளர்ச்சி முதலிய கிளர்ச்சிகளையும் எழுப்பிவருகிறது. அஃது இவ்வளவோடு நின்றிருக்கிறதோ? இல்லையே. அது பெரியோர் வழிபாட்டிலுங் குறுக்கிட்டு நிற்கிறது.

ஆரியர் திராவிடர் கிளர்ச்சியைச் சிறிது கவனிப்போம். இக்கிளர்ச்சி பொருளுடையதா என்பது ஆராயற்பாலது. தென்னாட்டிலுள்ள மக்களுள் ஆரியர் இன்னார் திராவிடர் இன்னார் எனப் பகுத்துக்கூற எவரால் இயலும்? ஆரியர் தென்னாடுபோந்த காலம் ஐயாயிரம் ஆண்டுகளுக்குமேற் கடந்து நிற்பதென்று சரித்திரஞ்சொல்கிறது. இவ்வையாயிரம் ஆண்டுகளாக ஈங்கு நிலைத்து வாழ்ந்து வரும் மக்களாகிய ஆரியர்க்கும் இந்நாட்டுப் பழங்குடிகளாகிய திராவிடர்க்கும் கலப்பு நிகழாதிருக்க முடியுங்கொல்! சில நூற்றாண்டுகளுக்கு முன்னர் நமது நாடு …பாந்த ஐரோப்பியர்க்கும், நமது நாட்டார்க்…ம் கலப்பு நேர்ந்து, அதன் பயனாக ஒரு …தனி வகுப்பும் நமது நாட்டில் தோன்றியிருக்கிறதெனில் பல ஆயிரம் ஆயிரம் ஆண்டுகளாக் இந்நாட்டில் நிலைத்து, வழக்க ஒழுக்கங்களிலும் கடவுள் வழிபாட்டிலும் பிறவற்றிலும்ஒன்றுபட்டுவாழும் ஆரியர் திராவிடருள் கலப்பு ஏற்பட்டிராது என்று எவரால் கூறக்கூடும்? இப்பொழுது தம்மைத் தூய ஆரியரெனக் கருதுவோர் உடலில் திராவிடருதிரமும், அவ்வாறே தம்மைச் சுத்ததிராவிடரென எண்ணியிருப்போர் உடலில் ஆரிய இரத்தமும் பாய்ந்துகொண்டிருப்பதைக் கவனிக்க அன்பர்கட்கு நேரமில்லை போலும்!

வடநாட்டிருந்து தென்னாடு போந்த ஆரியர் ஒரு சிலரே. அன்னார் வழக்க ஒழுக்கங்களை மேற்கொண்டு ஆரியரான திராவிடரே பலர். அவ்வாரியருந் திராவிடருங் கலந்து ஓரினமாகியும் பின்னை வந்த பற்பல இனத்தவரோடுங்கூடிக் கலந்தும் வாழ்ந்தும் வருகிறார். இக்குலப்புடையார் பல சாதியினராய்ப் பல சமயத்தவராய் வதிகிறார். இக்காலத்தில் தமிழ் நாட்டிலுள்ள அனைவரையுந் தமிழரெனச் சொல்வதே சிறப்பு. இந்நாளில் பிராமணர் ஆரியரென்றும் பிராமணரல்லாதார் திராவிடரென்று முரைத்தல் புனைந்துரையேயாகும். இவ்வாறுகூறுவோர் இன்னுஞ் சின்னாள் கடந்தால் இப்பொழுது ஹிந்து மதம்விடுத்துக் கிறிஸ்துவமதம் புகுந்துள்ள அன்பர்கள் எருசலேமிலிருந்து போந்தவர்களெனப் புகன்று பிணக்குறுவர்போலும்! சரித்திரக்காரர் தமக்கு அவ்வப்போது கிடைக்கும் அகச்சான்று புறச்சான்றுகளைக் கொண்டு எழுதும் நூல்களை ஆராய்ச்சிக் குரியனவாகக் கொள்ள வேண்டுமேயன்றி அவைகளை மறைமொழியாகக் கோடலாகாது. இன்று காணப்படும் உண்மை நாளை மறுக்கப்படுவதைக் கண்டுங் கேட்டும் வருகிறோம். ஆரியர் பிற நாட்டிருந்து போந்தவரா திராவிடர் இந்நாட்டிலேயே தோன்றினவரா என்னும் ஆராய்ச்சி இன்னும் முற்றுப்பெற்றதாகத் தெரியவில்லை. முற்றுப்பெறாத ஒன்றை ஆராய்ச்சியளவில் வைத்துக் கொள்ளுதலே அறிவுடைமை. அவரவர் தத்தம் ஆராய்ச்சியிற்கண்ட சில உண்மைகளைப் போருக்குக் கருவிகளாகக்கொள்ளுதல் அறியாமை. பண்டைநாளில் ஆரியர்க்கும் திராவிடர்க்கும் பெரும்பூசல் நடந்துமிருக்கலாம். அதைஇந்நாளில் ஏன் பாராட்டி இடர்ப்படல் வேண்டும்? ஒரு …ங்களாய் அந்நாட்டின் நலன் தீங்கிற் குரியராய் வாழ்வோர் தமக்குள் சில போலிக் காரணங்களால் பிணங்குவது நாட்டைச் சிறுமைப்படுத்துவதாகும். அன்பிற் சிறந்த அறிஞர்கள் இத்தகைப் பிணக்குகளெழாதவாறு காத்துவரல்வேண்டும்.

இதையொட்டி நமது தென்னாட்டில் வடமொழி தென்மொழிப் போரும் புகைந்தெழுகிறது. வடமொழி நமது பாதகண்டத்துக்குரிய மொழியென்றும் தென்மொழி இத் தென்னாட்டுக்குரிய மொழியென்றும் மேலே கூறியிருக்கிறேன். வடமொழி பிராமணர் மொழியென்றும் தமிழ் மற்றவர்மொழியென்றுஞ் சொல்லப்படுவதை யான் மிக உரமாக மறுக்கிறேன். வடமொழி பிராமணர்க்கும் மற்றவர்க்குமுரிய மொழியாகவேவளர்ந்து வருகிறது. வடமொழியிலுள்ள பல நூல்கள் பிராமணரல்லாதாரால் யாக்கப்பட்டிருத்தலை உணர்வோர் அம்மொழி ஒரு கூட்டத்தார்க்குரியதெனக்கூறார். அருகர்கள் வடமொழியில் எழுதியுள்ள நூல்கள் பலப்பல. வடமொழி பாதகண்டத்துக்குரிய மொழியேயன்றி ஒரு கூட்டத்தார்க்குரிய மொழியன்று. தென்மொழியும் அவ்வாறே தென்னாட்டுக்குரிய மொழியேயன்றி குறிப்பிட்ட ஒரு வகுப்பார்க் குரியதன்று. முன்னை நாளில் புலவர்கள் இருமொழியையும் இரு கண்ணெனப் போற்றிவந்தார்கள். நச்சினார்க்கினியர் பரிமேலழகர்முதலியமறையோரதுதமிழ்ப்புலமையையும் சிவஞானமுனிவர் முதலியோரது வடமொழிப் புலமையையுங்கண்ட தமிழ்நாட்டில் மொழிச் சண்டையும் ஒருபால் மூண்டு நிற்கிறது. இச்சண்டை அயல்நாட்டுமொழி வளர்ச்சிக்குத் துணை நில்லாது வேறென் செய்யும்? தமிழ்நாட்டிற் பிறந்த ஒருவன் முதலில் தனது தாய் மொழியாகிய தமிழ்பயின்று புலமைபெற்றுப் பின்னை எம்மொழியும் பயிலலாம். தமிழைத் தாய்மொழியாகக் கொள்ளாதான் தன்னைத் தமிழ் நாட்டான் என்று எங்ஙனங் கூறிக்கொள்வன்?

சில விடங்களில் பெரியோர் வழிபாட்டிலும் வகுப்புக் காழ்ப்புத் தலைகாட்டுகிறது. ஆண்டவன் அருள்பெற்ற சில பெரியோர்களைச் சூத்திரரெனச் சில பிராமணர் வந்தனை வழிபாடுசெய்ய மறுக்கிறார். அதைக் காணும் பிராமணரல்லாதார் வருந்துகிறார். சில பிராமணரல்லாதார் வன்மங்கொண்டு மறையோர்குலத்திற் பிறந்த சில அடியார்களை வழுத்தாதொழிகிறார். இஃதென்ன? காலத்தின் கோலமா? கலியின் கொடுமையா? அந்தோ! பிராமணர் பிராமணரல்லாதார் பிணக்கு இதுபோழ்து சமய உலகையும் முற்றுகை செய்திருக்கிறது. இதை யாரிடத்தில் முறையிடுவது? எல்லாம் வல்ல ஆண்டவனே! உன்னையே நோக்கி முறையிடுகிறேன்; வேறு வழி காண்கிலேன். இப்பிணக்கு அணித்தே அடங்குமென்று எனக்குத் தோன்றவில்லை. இருவகுப்பிலுள்ள நன்மக்கள் ஒன்று சேர்ந்து பிணக்கை ஒழிக்க முயல்வார்களாக. இரண்டொரு வாரங்கட்கு முன்னர்ச் சென்னையில் காணப்பட்ட ஹிந்து சமாஜத்தின் உழைப்பால் இப்பிணக்கொழியுமென்று நம்புகிறேன்.

தீண்டாமை.—தீண்டாமை என்பது ஹிந்து மதத்திலுள்ள ஒருபெரும்நோய். தீண்டாமை ஹிந்து மதத்திலுள்ள ஒருகறை என்று மகாத்மா காந்தி அடிக்கடி அறைந்து வருவது அன்பர்கட்குத்தெரியும். இதைப்பற்றி யான் பன்முறை எழுதியிருக்கிறேன்; பேசியிருக்கிறேன்.

கடவுள் படைப்புக்கு உட்பட்ட மக்களுள் ஒரு கூட்டத்தாரைத்தீண்டாதாரென விலக்கி வருத்துவதினுங் கொடுமை வேறொன்றுண்டோ? இக்கொடுமை மக்கள் கூட்டத்துக்கே உய்யுநெறி காட்டும் உயர் கொள்கையுடைய ஹிந்துமதத்தைப் பரவாதவாறு தகைந்து சிறைப்படுத்தி யிருக்கிறது. ஹிந்து மதத்திலுள்ள இக்கொடுமை அம்மதத்தை மாத்திரமா சிறைப்படுத்தி யிருக்கிறது? அந்தோ! என்னருமைப் பாரத நாட்டையே சிறைப்படுத்தியிருக்கிறது. ஹிந்து மதத்திலுள்ள இக்குறை மற்ற இந்தியரையும் வருத்தி நிற்கிறது. இவ்வேளையில் தீண்டாமை இருந்தே தீரல் வேண்டும் என்று சில நூல்களைக்காட்டிப்போராடுவோரில்லாமலில்லை. தீண்டாமை வேண்டும் என்னும் நோக்கோடு எழுதப்பட்ட நூல்களில் தீண்டாமை திகழாதிருக்குமோ? உரிமை வடிவான ஆண்டவன் அருள்பெற்ற மெய்யடியார்கள் நூல்களில் தீண்டாமை என்னும் நாற்றம் வீசவே வீசாது. ஹிந்து வேதத்தில் தீண்டாமையுண்டா இல்லையா என்று சிலர் வினவுகிறார். வேதம் தீண்டாமை உண்டு என்றால் தீண்டாமை கோடலும் இல்லையென்று கூறினால் அதை விடலும் செவ்விய அறமாகத் தோன்றவில்லை. வேதத்தில் தீண்டாமை சொல்லப்பட்டில்லை என்று வேதத்தில் வல்ல தயானந்தர், சிரத்தானந்தர், காவ்யகண்ட கணபதி சாஸ்திரியார் முதலியோர் கூறியிருக்கிறார். வேதம் தீண்டாமை வேண்டும் என்று விளம்பினும் யான் அத் தீண்டாமையைத் தொலைக்கவே முயல்வேன். பண்டை நாளில் வைதிகர்கள் சில கருமங்களில் உயிர்ப் பலியிட்டுக் கொண்டிருந்தார்கள். இப்பொழுது ஏன் அவ்வழக்கம் விடப்பட்டது? புத்தமதம் உயிர்ப் பலியிடல் தவறு என்று அறிவுறுத்திற்று. வைதிகர்களும் அந்நலத்தைக் கொண்டார்கள். வேதம் வேதம் என்று ஒரு கொடிய வழக்கத்தைப் போற்றிக் காத்து வர வேண்டுமோ?

மக்களுள் தீண்டாமை பாராட்டுவோன் எப்பொழுது அம் மக்கள் உள்ளத்தில் ஒளிரும் இறைவனைக் காணவல்லான்? தீண்டாமை என்னுங் குற்றம் யாரிடத்திலிருக்கிறது? ஏழை மக்களிடத்திலா? இல்லை! இல்லை! தீண்டாதாரெனப் பிறரைக் கொண்டு உயர்ந்த வகுப்பாரெனத் தம்மைக் கருதுவோர் உள்ளத்திலேயே அம்மாசு படிந்திருக்கிறது. அம்மாசுடை மனம் மாறினால் தீண்டாமை நூலிலிராது; மதத்திலிராது; நாட்டிலிராது. அம்மனம் மாற்றமுறாது பேசுவதால், எழுதுவதால், தேர்தல் காலங்களில் ஏழை மக்கள் துணைபெறவேண்டி உடனுண்ணலால் தீண்டாமை யொழியாது.

தீண்டாதாரெனச் சொல்லப்படுவோர் தொகையில் ஏறக்குறைய எழுகோடிபேரிருக்கிறார். இத்தொகை நம்மை ஆள்வோர் தொகையினும் பெரிது. அவ்வேழுகோடி மக்கள், தங்களைத் தங்கள் நாட்டிற்பிறந்தமற்றவர்கள் தீண்டாதார்களெனக் கழித்தலால், அதிகார வர்க்கத்தினர்பால் அடைக்கலம் புகுந்து நிற்கிறார்கள். நாட்டிற் பிறந்த ஒரு கூட்டத்தார் நாட்டிலெழும் உரிமைப்போரில் கலவாது மாற்றார் பக்கல் நிற்குமாறு செய்துள்ள தீண்டாமையை உடனே களைய முற்படுவதன்றோ உரிமை வேட்கைக்கு அறிகுறியாகும்?

தீண்டாமையை யொழிக்க முன்னே சிலர் முயன்றனர். அன்னார் முயற்சி ஓர் இயக்கமாக உருக்கொள்ளா தொழிந்தது. காந்தியடிகள் முயற்சியால் அவ்வியக்கம் ஓருருக் கொண்டு நாட்டில் நிற்கிறது. அவ்வியக்கந் தோன்றி நான்காண்டுகளாகியும், இன்னும் அது வெற்றியளிக்கவில்லை. நம்மால் நிகழ்த்தவல்ல ஒன்றை நிகழ்த்த இயலாது உரிமை உரிமை என்று கூச்சலிட்டால் உரிமை முளைத்துவிடுமோ? தேசபக்தர்கள் முதல் கடமை தீண்டாமை என்னும் பேயை நாட்டினின்றும் ஓட்டமுயல்வதே. தீண்டாமையைப்பற்றி எழுந்த பேச்சும் எழுத்துஞ் சாலும். இனி வேண்டற்பாலது செயலே. தீண்டாமை போக்கச் சத்தியாக்கிரகப் போரன்றி வேறு வழியில்லை. வைக்கத்தில் நடைபெற்ற சத்தியாக்கிரகப் போர் பயனளித்தது; கல்பாதி அப்போரை இப்பொழுது வேண்டியழைக்கிறது. மனித உடல் தாங்கிய உயிர்கள் தெருவில் கூடவா உலவுதல் கூடாது? கொடுமை! கொடுமை!!

பெண்மக்கள்—மற்றமொரு கொடுமை நமது நாட்டில்உலவிக்கொண்டிருக்கிறது. அஃது என்னை? பெண்மக்களை அடிமைக்குழியில் வீழ்த்தியிருப்பது. பாரதமாதாவின் முகங்கள் முப்பது கோடியென்றுங் கரங்கள் அறுபது கோடி என்றுஞ் சொல்லப்படுகின்றன. அவைகளுள் ஒருபாதி பக்கவாய்வுற்றுக் குருதியோட்டங் குன்றிச் செயலற்றுக் கிடத்தலைக்காண்கிறோம். நமது நாட்டுப் பெண்மக்கள்எந்நிலை யுற்றிருக்கிறார்கள்? நம் பெண்மக்கட்குப் போதிய கல்வியுண்டோ? உரிமையுண்டோ? வீரமுண்டோ? இவர்கள் வயிற்றிற்பிறக்கும் பிள்ளைகள் எத்தன்மையினராயிருப்பார்கள்? பெண்மக்களை அடிமைப்படுத்திய ஆண்மக்கள் அடிமைப்படுதல் இயல்பன்றோ? ஒரு சீதைக்காக ஸ்ரீராமபிரானும் ஒரு பாஞ்சாலிக்காகப் பாண்டவரும் எவ்வளவு பாடுபட்டனர்? அத்தகை ஆண்மக்களை யீன்ற இந்நாட்டில் இதுபோழ்து எத்துணைச் சீதைகள் எத்துணைத் திரௌபதிகள் கண்ணீர் உகுக்கிறார்கள்? அவர்கள் உகுக்குங் கண்ணீர் வீண்போமோ? அது கூரிய வாளாய் உரிமையை வெட்டிச் சாய்த்திருக்கிறது. ஆதலால் பெண்மக்கட்கு உரிமை நல்கி உரிமைப் போராட்டத்தில் அவர்களையுந் தலைப்படுமாறு செய்யவேண்டுவது நம்மனோர் கடன்களுள் ஒன்று.

தொழிலாளர்.—இவ்வகுப்பினர்க்கும் முதலாளிகட்கும் உற்றுள்ளபிணக்கு உலகப்பிணக்காகும். ஐரோப்பா பெரும் போருக்குப் பின்னர் மேல்நாட்டுத் தொழிலாளர்கள், உலகில் முதலாளி இயக்கம் உள்ளவரை உலகம் போருக்கும் புன்மைக்கும் இரையாகுமென்றும், ஆதலால் உலகிலே முதலாளி வகுப்பே யிருத்தல் கூடாதென்றும் நல்லுணர்வு பெற்று, உலக உரிமை குறிக்கொண்டு போராடி வருகிறார்கள். இப்போராட்டம் இரண்டு வழியில் இதுபோழ்து மேல்நாட்டில் இயங்கி வருகிறது. ஒன்று கருவிதாங்கிப் போர் புரிந்து முதலாளிகூட்டத்தை அழிக்கவேண்டுமென்பது; இன்னொன்று நியாயவழியில் அரசாங்க அமைப்புகளைப்பற்றி ஆட்சிகளை வயப்படுத்த வேண்டுமென்பது. இவ்விரு கூட்டத்தாரும் முறைகளில் வேறுபட்டாலும் நோக்கத்தில் வேறுபடுவதில்லை. எம்முறையோ ஒருமுறை தொழிலாளர் நோக்கத்தை நிறைவேற்றும் என்பது ஒருதலை.

இந்நிலையில் இந்தியத் தொழிலாளர் என் செயல் வேண்டும்? இந்தியா மூன்றாவது மனிதரால் ஆளப்படும் நாடாயிருப்பதால் அதன் கண் வாழுந் தொழிலாளர் மனம் பெரிதும் இந்திய முதலாளிகள்மீது செல்வதில்லை. காங்கரஸில் சேர்ந்த இந்திய முதலாளிகள் வெற்றிபெற இந்தியத் தொழிலாளர்கள் துணைசெய்து வருகிறார்கள். இந்தியத் தொழிலாளர் முதலாவது நமது நாடு அந்நிய ஆட்சியினின்றும் விடுதலை யடைந்தால் போதுமென்று எண்ணியே இந்திய முதலாளிகளுக்கு உதவிபுரிந்து வருகிறார். இந்தியாவில் மேல்நாட்டு முறைப்படி ஏற்பட்ட தொழிலாளர் இயக்கம் இன்னும் பண்படவில்லை. தொழிலாளர் சங்க அமைப்புக்கெனத் தனிச் சட்டம் இன்னும் உண்டாகவில்லை.

இந்தியாவில் தொழிற் சாலைகளில் வேலை செய்யுந் தொழிலாளர் ஒருசிலரே. வயல்களில் வேலை செய்யுந் தொழிலாளரே பலர். இவர்கட்குள்ள துன்பம் அளவிடற் பாலதன்று. இச்சகோதரர்கள் துன்பத்தின் இயல்பு இத்தகைத்து என்றறியும் உணர்வையும் இழந்து கிடக்கிறார்கள். நமது நாடு என்னுஞ் சொல் அத்தொழிலாளரையே குறிப்பதாகும். அவ்வேழை மக்கள் நிலையை ஈண்டு விரிக்கிற் பெருகும். அவருள்ளிட்ட எல்லாத் தொழிலாளருஞ் சேர்ந்து ஓர் இயக்கம் உலகத்தொழிலாளர் இயக்கத்துக் காணுமாறு நமதுநாட்டில் தோற்றுவித்தல் வேண்டும். அவ்வியக்கந் தோன்றுமாறு காங்கரஸ் தலைவர்கள் முயன்றால் விரைவில் நாடும் உலகமும் உய்யும். காங்கரஸ் தலைவர்கள் தொழிலாளர் நலன் நாடாது தங்கள் நலத்துக்கு அவர்களைப் பயன்படுத்தல் பாவம்.

பலதிற வகுப்புப் பிணக்குகள் நாட்டில் உலவுமட்டும் சுயராஜ்யக் கிளர்ச்சியால் பயன் விளையாது. ஒருபுறம் வகுப்புப் பிணக்கு நீக்கத்துக்கும், மற்றொருபக்கம் உரிமை யுணர்விற்கும் தேசபக்தர்கள் உழைத்தல்வேண்டும்.

சுயராஜ்ய சேவை

சுயராஜ்யம் என்பது ஒருவரளிக்க மற்றொருவர் பெறுவதன்று. சுயராஜ்யமென்பது "பூவினில் கந்தம் பொருந்தியவாறு போல்" அவரவர்பால் மருவிவிளங்குவது. பாரதமாதா வயிற்றில் பிறந்த நாம் தொகையில் முப்பதுகோடி யிருக்கிறோம். இம்முப்பதுகோடி பேரும் ஒரு தனி மனிதனைப்போல் வினையாற்றின், அவ்வினையினின்றும் சுயராஜ்யம் அரும்பும். முப்பது கோடி மக்களுள் எத்துணைபேர் சுயராஜ்யப் போரில் தலைப்படுகின்றனர்? முப்பது கோடியில் ஒரு பாதி பெண்மக்கள் தொகை. அக்கூட்டம்போக எஞ்சிநிற்கும் ஆடவர் தொகை பதினைந்து கோடி. இப்பதினைந்து கோடியில் எழுகோடி பேர் தீண்டாதாரென ஒதுக்கப்பட்டிருக்கிறார். இவ்விரு கூட்ட… …ற்றி மேலே சொல்லியிருக்கிறேன். மிகுதியுள்ள… எட்டு கோடி பேர். இவ் … வெட்டுக்கோ… பூபாரமாகவுள்ள சந்நியாசி கூட்டம், … வழியர், நோயாளிகள், குழந்தை… …ப்பற்றிக் கவலையில் …ாதார் பே… …க நிற்போர் இலட்சக் …ந்தில் … விடுவர். அவர்களிற் … கண… …னை…, பிராமணர் பலரை ஹிந்து மு… பிராமணரல்லாதார் பிணக்… முதலிய நோய்கள் பீடித்துவிடுகின்றன. இவை…யினின்றும் பிழைத்துத் தேசசேவையிலிறங்குவோர் தொகை ஆயிரத்தில் சுருங்கி நிற்கிறது. ஒத்துழையாக் காலத்தில் எவ்வேற்றுமையுங் கருதாது சிறைபுகுந்த இருபத்தையாயிரவரை உரிமைப்போர் வீரர் என்று ஒருவாறு தொகுத்துக்கூறலாம். அவரனையார் சில ஆயிரவரிருக்கலாம். இதுபோழ்து இவர்களிலும் பலரை அரசியல் கட்சி அரவந்தீண்டியிருக்கிறது. அதனால் மயக்குண்டோர் போக மிகுதியுள்ளவர் நூற்றுவராகவேயிருப்பர். தொகையில் முப்பது கோடி செயலில் மூந்நூறாகச் சுருங்குகிறது என்று சொல்வது மிகையாகாது. இத்தகை இந்தியாவை ஒற்றுமையும் ஒழுங்குமுடைய ஒருலட்சம் போர்வீரரைக் கொண்டே ஒரு சிற்றரசும் எளிதில் ஆளலாமன்றோ? ஆதலால் முப்பது கோடி மக்களும் இந்தியர் என்று கொள்ளும் ஒன்றிய உணர்வில் அரும்புவது நமக்குரியசுயராஜ்யம்.

அவ்வுணர்வை ஒத்துழையா இயக்கம் அளித்தது வளர்த்தது. அவ்வியக்கம் ஒடுங்கினும் அதன்முறைகள் பல கிராமங்களில் பரவி வேரூன்றல்வேண்டும். அச் சுயராஜ்ய முயற்சி நகரங்களில் அந்நியநடைக் கலப்பால் செய்யப்படுவது விழலுக்கிறைத்… நீராகும். நகர வாசிகள் நாள்தோறும் … கில மொழியில் வெளிவரும் பத்திரி… களைப் படித்து, ஓய்ந்த வேளைகளில் கிலமொழியில் பெயர்த்தெழுதப் … நமது நூல்களிற் சில பயின்… நிய மொழியிலேயே எல்லாக் … களையும் நிகழ்த்தி "தேசியம் … சதறுந் தேசபக்தர்களாக … அவர்களால் வளர்க்கப்படு… சுதேசியமாகாது. அஃது … தேசியமாகும். தாய் மொ… தக்க விடங்களிலும் அ… விடுவது அந்நிய ஆட்… முயற்சி என்று கூ… ஆதலால் நகரத்தி… டுக்குரியதாதல் … எழுங்கிளர்ச்சி… தாகும். ஆ… உழைப்ப… ஒத்… கள்

கரஸ்வாயிலாகப் பலதிறத் தொண்டாற்றி வரலாம். பயிர்த்தொழிலும் நெய்தற்றொழிலும் நமதுநாட்டின் வல இடநுரையீரலாக இலங்குகின்றன. அதில் ஒன்று முற்றும் ஊறுற்றுக் காச நோய் கிளப்பியிருக்கிறது. அந்நோய் போக்கும் வயித்திய நாதராக மகாத்மாகாந்தி தோன்றியிருக்கிறார். அவர் வழி நின்று கிராமந்தோறும் ராட்டை சங்கம் அமைத்து நூற்றற்றொழிலைப்பெருக்கி வரல் வேண்டும். இந்தியாவில் விளையும் பருத்தி இந்தியாவிலேயே நூற்கப்பட்டால் இந்தியத்தாயின்ஈரல் நோய் இரிந்தோடும். பயிர்த்தொழிலில்பெருங்கவலை செலுத்தல் வேண்டும். அதைப் பெருக்கப் புது புது முறைகள் காணப்படல் வேண்டும். ஓர் அரிசியிலிருந்து நூற்றுக்கணக்கான அரிசிகள் கண்டவர் நம் முன்னோர். அம்முயற்சி அவ்வளவிலேயே நின்றுவிட்டது. விவசாயத்தில் பேர்பெற்ற இந்தியா அத்துறையில் கைபோய ஒருவரை மேல் நாட்டினின்றும் எதிர்நோக்கும் நிலையடைந்திருக்கிறது. இந்தியாவில் எவ்வளவோ நிலங்கள் பசும் புற்றரையாயிருக்கின்றன. அவைகளை யெல்லாம் பண்படுத்தி விளை நிலமாக்க முயலல் வேண்டும். விவசாய வளர்ச்சிக்குப் புது முறையில் முயற்சி செய்யப்படின் நாட்டு மக்கள் வெளிநாடுகளுக்குக் கூலிகளாகப் போய் வருந்துவார்களோ? விவசாய வளர்ச்சி நாடியுழைக்க வேண்டுவது நம் பெருங்கடமை.

பழைய காலங்களில் கிராமந்தோறும் திண்ணைப் பள்ளிக்கூடங்களிருந்தன. அவைகளில் குழந்தைகட்கு ஔவை நூல்கள், சதகங்கள் எண் சுவடி முதலியன போதிக்கப் பட்டு வந்தன. அக்கல்வியே இப்போழ்து கிராமங்களில் மாய்ந்து விட்டது. அரசாங்க உதவி யெனும் பொருள் நசையும், நகர சபை அமைப்பும், பிறவும் நமது நாட்டுக் கல்வி முறையைக் குலைத்து விட்டன. நாட்டுக் கல்வி நாட்டுக் கல்வியெனப் பெருங் கல்லூரிகள் அமைத்து அதிகாரவர்க்கத்தைத் தாங்கத்தொண்டர்களை அனுப்பிவருவது நாட்டுக் கல்வியாகாது. தற்போது பழைய முறைப்படி திண்ணைப்பள்ளிக் கூடங்களைப் புதுக்கி வருதலே போதும். கிராமங்களிலுள்ள தொழிலாளர்களை நகரங்களிலுள்ள தொழிற்சாலைகளை நாடி ஓடாதவாறு இன்சொல்லால் தடுத்து அவரவர்தொழில் முறையைப்புதுக்குமாறு ஊக்கமூட்டல் வேண்டும். அவர்களால் செய்யப்படும் பொருளைக் கிராமத்தாரை வாங்குமாறு குறையிரந்து கேட்டல் வேண்டும். நாட்டு மருத்துவம் முதலிய எல்லாத் துறைகளையும் புதுக்க முயலல்வேண்டுமென்று சுருங்கச்சொல்கிறேன்.

கிராமத்தாரை எக்காரணம்பற்
களிலுள்ள நீதி மன்றங்கள்
கேட்டுக்கொள்ளல்வேண்டு
களைப் பஞ்சாயத்து
கொள்ளும் பழைய
வேண்டும். மா...க்
தார்க்குச் சுத... ...னைய முதலி
யன பே... ...செய்யலாம். நீதி ஒழுக்க
...டகங்க ...நடாத்திக் காட்டலாம். இன்னோரன்ன அறத்தொண்டுகள் பல ஆற்றலாம். காங்கரஸ் தொண்டர்கள் நகரங்களில் தேர்தல்களில் உழல்வதைப் பார்க்கிலும் கிராமம் போந்து ஒவ்வொரு கிராமத்துக்கு ஒவ்வொரு சிற்றரசர்போல வீற்றிருந்து அறத்தொண்டாற்றலாம். இவையே சுயராஜ்ஜிய சேவை. இன்னும் பேசிப்பேசி உங்கள் அரிய காலத்தைக் கொள்ளை கொள்ள விரும்புகிறேனில்லை.

இறுவாய்

சகோதரிகளே ! சகோதரர்களே !!

இதுகாறும் எனது புன்மொழியைப் பொறுமையோடு செவிமடுத்த உங்கள் பெருந் தகைமைக்கு எனது அன்பார்ந்த வணக்கஞ் செலுத்துகிறேன். நமது நாட்டின் தொன்மையை நினையுங்கள் ; பிரிட்டிஷ் ஆட்சி நிலையை ஆராயுங்கள் ; எவ்வியக்கத்தால் உரிமை மணங் கமழும் என்பதை யோருங்கள். பாரத நாட்டின் நிலையை யுன்னி யுன்னி உரிமை வேட்கை கொள்ளுங்கள்; உலகிலுள்ள மற்ற நாடுகளை நோக்குங்கள்; உங்கள் நாட்டையும் நோக்குங்கள். மற்ற நாட்டவரெல்லாங் காடுகளில் திரிந்து மரங்களிற் சுழன்று
ரக்குவாழ்வு நடாத்தியபோது, நாம் நாடு
...டு அரசியலுணர்ந்து செங்கோ லோச்சி
... ; இலக்கியங்கள் எழுதினோம் ; இலக்
...ணெழுதினோம் ; வாழ்விற்குரிய
துறைகளையும் பெற்றிருந்தோம்.
...பெற்றிருந்த நாம் இது போழ்து
...விருக்கிறோம்? நமது அர
...லகளெங்கே? வாழ்வெங்கே?
...ல்லாம் போயின; போயின.
...ருந்துகிறோம் ; பிணியால்
...லகில் பிறந்தும் பிறவாதா
...காட்டிற் பிழைக்கவழி
...து கூலிகளாய் அடி
...றோம் ; அங்கே நம்
...ழந்து சாவதையும்
...மயத்தை முடி
...மதை கோதா
...ளை ஆரமா
... அளிக்
... ...காய்

வயிற்றிற்பிறந்த நாமா இப்பாடு படுவது? மானமழிந்து வாழும் வாழ்வு ஒரு வாழ்வா? இவ்வாழ்வுற்றுள்ள நமக்குள் சாதிச் சண்டையா? சமயச்சண்டையா? தலைமைப் போரா? பதவி வேட்கையா? வெட்கம்! வெட்கம்! பாரதமக்களே! உட்பொறாமை பூசல் பிணக்கு முதலியவற்றை உதறிஉரிமை வேட்கை கொண்டெழுங்கள்! உரிமையை நினைந்து, உரிமையைப்பேசி, உரிமைக்குப் போராடி உயிர் துறக்க எழுங்கள்! "அஞ்சுவது யாதொன்றுமில்லை அஞ்ச வருவதுமில்லை" என்று அஞ்சா நெஞ்சங்கொண்டு, "நாமார்க்குங் குடியல்லோம் நமனையஞ்சோம் நரகத்தி லிடர்ப்படோம்" "என்று நாம் யாவர்க்கும் இடைவே மல்லோம் இருநிலத்தில் எமக்கெதிராவார் யாருமில்லை" என்னும் வீரமொழியை முழக்கி எழுங்கள்! இவ்வெழுச்சி முன்னே உங்கள் சாதிச்சண்டையும் சமயச்சண்டையும் நில்லாதோடும்.

தலைவர்களே! உங்கள் பொறுப்பை உணருங்கள். நீங்கள் உரிமையில்லா நாட்டுத் தலைவர்கள் என்பதை மறவாதேயுங்கள்; உரிமை பெறும் வரை ஒத்துழையாப் போர் முனையில்நின்றே தீரல்வேண்டும் என்னும் உறுதியினின்றும் பிறழாதேயுங்கள். உங்கள்உறையுள் பொறுமையாகவும், பொருள் அருளாகவும், போர்வை தியாகமாகவும், போர்க்கருவிகள் உண்மை அஞ்சாமையாகவும்,பகை தன்னலம் தற்பெருமையாகவும் ஒளிரல்வேண்டும்.ஒத்துழைப்பு நாட்டங்கொள்வீரேல் அஃது இவ்வியல்புகளை மாற்றிக் கட்சிப் பிணக்குகளை எழுப்பும். ஆதலால் பொறுப்புணர்ந்து வினையாற்றுங்கள். இல்லையேல் முப்பது கோடி மக்கள் சாபம் உங்களைச் சூழும். நல்லுளங்கொண்டு உரிமைப் போர்புரிந்து பாரதநாடிழந்த ஆண்மையையும் பெண்மையையும் அழகையும் மீண்டும் பெறுமாறு செய்யுங்கள். வந்தே மாதரம்.

மணித்திரள்

பிரிட்டிஷ் அரசாங்கத்தாரிடம் ஒரு விநாடிக்குள் 5000 தனித்தனி படம் எடுக்கக் கூடிய புகைப்படமெடுக்கும் கருவி ஒன்றிருக்கிறது. இதைச் செய்து முடிக்க நான்கு வருஷங்கள் பிடித்தன. மொத்தம் 15,000 பவுன் செலவாயிற்று. இம்மாதிரி கருவி உலகத்திலேயே இஃது ஒன்று தான் இருக்கிறதாம்.

* * *

மேற்கு பசிபிக் சமுத்திரத்தில் 'மெழுகுவத்தி மீன்' என்ற ஒருவகை மீன் இருக்கிறது. இதைச் சமையல் செய்ய முடிவதில்லையாம். ஏனெனில் காய்ந்த எண்ணெயில் இதைப் போட்டதும் கரைந்து எண்ணெயோடு கலந்து ஒன்றாய் விடுமாம். எனவே இந்த மீன் உலர்ந்து காய்ந்து விட்டால் அதன் நுனியைக் கொளுத்தி விட்டு ஒரு மெழுகுவத்தியைப்போல் உபயோகிக்கலாமாம். செடிகளில் 'புஷ்மான் வத்தி' என்ற செடி இவ்வாறே உபயோகப்படுகிறது. இச்செடியின் தண்டுகள் பச்சையாயிருக்கும்போது கொளுத்தப்பட்டால் நின்று நெடு நேரம் எரியும்.

* * *

கிரேட் பிரிட்டனுக்கும், ஐரோப்பா கண்டத்துக்கு மிடையே இங்கிலீஷ் சானல் என்ற கடல் இருக்கிறது. எனவே, தற்போது கப்பல் மூலமாகவே போக்குவரவு நடந்து வருகிறது. இவ்வாறன்றி இக்கடல் மீது கரைகள் கட்டி ரயில்பாதை போடுவதற்கு மிஸ்டர் ஜூல்ஸ் ஜேகார் என்ற ஸ்விட்ஜர்லாந்து நாட்டு என்ஜினியர் ஒரு திட்டம் போட்டிருக்கிறார். இத்திட்டத்தை இங்கிலாந்திலும் ஐரோப்பாவிலுமுள்ள பிரபல வியாபாரச் சங்கங்கள் எல்லாவற்றிற்கும் அனுப்பியிருக்கிறார். இத்திட்டத்திற்கு 7 கோடி பவுன் செலவாகும் என்று அவர் மதிப்பிட்டுள்ளார்.

* * *

அமெரிக்காவில் பிட்ஸ்பர்க் என்னும் நகரத்திலுள்ள பல்கலைக் கழகத்தார் தங்களுக் குட்பட்ட எல்லா ஸ்தாபனங்களும் ஒரே கட்டிடத்தில் நடைபெறும் பொருட்டாக 52 மாடியுள்ள ஒரு பெரும் மாளிகையை நிர்மாணிக்கத் திட்டம் போட்டிருக்கிறார்கள். இக்கட்டிடம் தரையில் 360 அடி நீளம் 260 அடி அகலம் உள்ளதாயும் 680 அடி உயரமானதாயு மிருக்கும். இதைக் கட்டி முடிக்க ஒரு கோடி டாலர் அதாவது கிட்டத்தட்ட 4 கோடி ரூபாசெல்லுமாம். 12,000 மாணவர்களுக்கு வகுப்பு அறைகள், புத்தகசாலைகள், சோதனை மண்டபங்கள், விளையாடுமிடங்கள் முதலியவை இதில் ஏற்படுத்தப்படும்.

* * *

ஸ்யூயஸ் கால்வாயைப் பெரிதாக்க வேலை நடந்துவருகிறதாம். ஆரம்பத்தில் இக்கால்வாய் 26 அடி ஆழமிருந்தது. பின்னர் 36அடி ஆழமாகத் தோண்டப் பட்டது. இப்போது நடக்கும் வேலை முடிந்தால் சராசரி 40 அடிக்குக் குறையாத ஆழமிருக்குமாம். ஆரம்பத்தில் இக்கால்வாயின் அடித்தரை அகலம் 73 அடியாயிருந்தது. பின்னர் 150 அடி அகலமாகச் செய்யப்பட்டது. இப்போது அடித்தரை அகலம் 300 அடி இருக்கும்படி செய்ய வேலை நடக்கிறது. மேற்புற அகலம் இப்போது 310 அடியிலிருந்து 525 அடிவரையில் உண்டு. இனி எந்த விடத்திலும் 440 அடிக்குக் குறையாமல் செய்யப்படும். இக்கால்வாயின் மொத்த நீளம் $104\frac{1}{2}$ மைல் ஆகும்.

* * *

டாக்டர் சி. ஜீ. ஆபட் என்னும் வான சாஸ்திரி சென்ற பல ஆண்டுகளாகப் பற்பல நட்சத்திரங்களின் உஷ்ணத்தையும், ஒளியையும் அளந்து வருகிறார். சூரியனை விட உஷ்ணமான நட்சத்திரங்கள் பல இருப்பதாக அவர் கண்டுபிடித்துள்ளார். சிரியஸ் என்ற நட்சத்திரம் சூரியனை விட இரண்டு மடங்கு உஷ்ணமானதாம். வீகா, ரைஜல் என்னும் நட்சத்திரங்கள் இன்னும் அதிக உஷ்ணமானவை. இப்போது நமது பூமியிலிருந்து சூரியன் உள்ள தூரத்துக்கு ரைஜல் வந்தால் நமது பூமி பற்றி எரிய ஆரம்பித்து விடுமாம். சூரியனுடைய உஷ்ணம் சென்டிகிரேட் அளவில் 6000 டிக்ரியென்று கணக்கிடப்பட்டிருக்கிறது. சிரியஸின் உஷ்ண நிலை 11,000 டிக்ரியாகும். வீகா 14,000 டிக்ரி உஷ்ண முள்ளது. ரைஜல் நட்சத்திரத்தின் வெப்பம் 16,000 டிக்ரியாகும். இந்நட்சத்திரம் சூரியனை விடக் கிட்டத்தட்ட மூன்று பங்கு உஷ்ணங் கொண்டது. ஆனால் இதன் குறுக்களவு சூரியனுடையதைப்போல் இருபது மடங்கு. ஆதலின் இந்நட்சத்திரம் இப்போது சூரியனிருக்கும் இடத்திற்குவந்தால் நமது பூமி இப்போதைவிடப் பல ஆயிரமடங்கு வெப்பமுள்ளதாயிருக்கும். நட்சத்திரங்களின் ஒளியை அளப்பதற்கு மிகநுண்ணிய கருவி ஒன்று புதிதாகக்கண்டு பிடிக்கப்பட்டிருக்கிறதாம். இதன் மூலம் சில நட்சத்திரங்கள் சூரியனுடைய ஒளியைவிட 10,000 மடங்கு அதிக ஒளியுள்ளன எனக்கண்டு பிடித்திருக்கிறார்கள்.

கௌண்ட் காப்லெட்டீ அல்வியலா என்னும் பெல்ஜிய நாட்டுப் பிரமுகர் சிறந்த நூலாசிரியர். சர்வ சமய ஆராய்ச்சியில் தலை சிறந்தவர். உலகிலுள்ள பற்பல மதங்களையும் பற்றி அவர் பல நூல்கள் இயற்றி யுள்ளார். பெல்ஜிய அரசாங்கத்தின் மந்திரியாகவும் அவர் நீண்டகாலம் இருந்திருக்கிறார். இவர் சமீபத்தில் பிரஸ்ஸல்ஸ் நகரில் ஒரு வீதியில் போய்க் கொண்டிருந்தபோது ஒரு மோடார் வண்டியினால் தாக்கப்பட்டு இரண்டு தினங்களுக்குள் உயிர்துறந்தாராம். அவரைக் கொன்ற மோட்டார் வண்டியில் சென்றவர்கள் அநேகமாக நாடகம் பார்க்கவோ, வேறு களியாட்டத்துக்கோ செல்வோரா'யிருந்திருக்கலாம்! மோட்டார் வண்டியினால் கொல்லப்படுவோரின் உயிர்களுக் கெல்லாம் அவ்வண்டியைக் கண்டு பிடித்தோனைப் பொறுப்பாளியாக்குவதென்று ஏற்பட்டால், அந்தோ! அவனுடைய ஆத்மா எக்கதியுறுமோ? இறைவனே அறிவான்.

* * *

உலகில் பெரிய தூரதரிசினிக் கண்ணாடி அமெரிக்கா வாஷிங்டன் மாகாணத்தில் வீடில் என்னுமிடத்தில் சமீபத்தில் ஸ்தாபிக்கப்படும். இந்தக் கண்ணாடியின் குறுக்களவு 120 அங்குலமாம். இத்தூர தரிசினியும், இது வைக்கப்படப்போகும் நட்சத்திர ஆராய்ச்சி மண்டபமும் சார்லஸ் எச். பைர் என்னும் அமெரிக்கரால் பொது ஜனங்களின் நன்மைக்காக நன்கொடையாக அளிக்கப்பட்டிருக்கின்றன. ஆகையால் இது பைர் அப்ஸர்வேடரி (Fyre observatory)என்ற பெயர் பெறும். தற்போதுள்ள தூரதரிசினிகளுக்குள் மௌண்ட் வில்ஸன் நட்சத்திர மண்டபத்திலுள்ள தூரதரிசினிதான் பெரியதாம். இதன் குறுக்களவு 100 அங்குலம். ஆகாயத்தில் மேகங்கள் இல்லாதிருக்கும் ஓர் இரவில் வெறுங்கண்களுக்குக்கிட்டத்தட்ட 5000 நட்சத்திரங்கள் காணப்படுகின்றனவாம். 60 அங்குலம் குறுக்களவுள்ள தூரதரிசினி மூலம் பார்த்தால் 219,000,000 நட்சத்திரங்கள் தெரியுமாம். மௌண்ட் வில்ஸனிலுள்ள தூரதரிசினி 320,000,000 விண் மீன்களைக் கண்களுக்குப் புலப்படுத்துகிறதாம். ஆனால் இப்போது புதிதாக வைக்கப்போகும் பைர் தூரதரிசினி மூலம் 400,000,000 நட்சத்திரங்களைப் பார்க்கலாம்.

* * *

சமீபத்தில், பிரான்சு தேசத்தில் 'மின்சாரத்தபால்' ஏற்படுமென்று தெரிய வருகிறது. இந்த ஏற்பாட்டின் விவரம் பின்வருமாறு :— உருண்டை வடிவான பெட்டியைப் போன்ற சிறு ஆகாய விமானங்கள் செய்யப்படும். இப்பெட்டி உள்ளே அறை அறையாகத் தடுக்கப்பட்டிருக்கும். ஒவ்வொரு அறையிலும் ஒவ்வொரு ஊருக்குப் போகவேண்டிய தபால்கள் இருக்கும். இந்த ஆகாய விமானத்தை ஓட்டுவதற்கு அதில் ஆள் இருக்கமாட்டார். மத்தியஸ்தலம் ஒன்றில் உள்ள மண்டபத்திலிருந்து மின்சார சக்தியின் மூலமாக இந்த ஆகாயத்தபால் விமானங்கள் இயக்கப்படும். விமானம் ஒவ்வொரு நிமிஷமும் எங்கெங்கே செல்கிறதென்பது அம்மண்டபத்தில் உள்ள திரையின் மீது விழும் சாயைகளால் தெரியவரும். எனவே, ஓர் ஊருக்கு நேரே விமானம் சென்றதாகத் தெரிந்ததும், மண்டபத்தில் உள்ள ஒரு விசையை அமுக்கினால் அவ்வூரின் தபால் அறை திறக்கப்பட்டு, தபால் கட்டுகள் மெதுவாகக் கீழே வந்துவிழும். இதன் பொருட்டு விமானம் கீழே இறங்கி வருதலாவது, தாமதித்து நிற்பதாவது அவசியமிரா. இந்த ஏற்பாட்டின் பலனாக இதுவரை இல்லாத அவ்வளவு விரைவில் தபால்கள் பட்வாடா செய்யப்படுமாம்.

நமது துட்டிக்கதை:—பிஏ. (ஆனர்ஸ்) பட்டம்பெற்று அப்போதுதான் கலாசாலையிலிருந்து வெளிக்கிளம்பியவர். தமது நாட்டுப்பாமர ஜனங்களின் அறிவீனத்தில் அவருக்கு ஆழ்ந்த நம்பிக்கையுண்டு. பௌர்ணமி தினத்திரவு, வெள்ளிய நிலவு பளிச்சென்று பிரகாசிக்க, தெளிநீர் ஓடையொன்றில் படகு விட்டு இன்பந்துய்த்துக் கொண்டிருந்தார். ஏதோ நினைவு வந்தது. படகுக்காரனைப்பார்த்து "நீவிஞ்ஞான சாஸ்திரம் படித்ததுண்டா?" என்று கேட்டார். அப்பெயரையே கேட்டறியாத படகோட்டி "இல்லை" யென்று பதிலளித்தான். "அப்படியானால் உனது வாழ்நாளில் கால்பங்கு வீணாயிற்று. தத்வநூல் பயின்றதுண்டா?" "இல்லை, ஐயா." "பாவம்! உன் வாழ்நாளில் மற்றொரு காற்பகுதி வீண். போகட்டும்! நியாயம், தர்க்கம் இவைகளிலேனும் பயிற்சிஉண்டா?" இதற்கும் "இல்லை" என்ற பதில்வரவே "ஓ! நீ துர்ப்பாக்கியன்! உன் வாழ்நாளில் மற்றொருகாற் பகுதியும்வீணாயிற்றே!" என்றார் புதியபட்டதாரி. இதற்கிடையில் படகில் இருந்த ஒரு துவாரத்தின் வழியாகத் தண்ணீர் "குபுகுபு" என்றுமேலே வர ஆரம்பித்துவிட்டது. "ஐயா, தங்களுக்கு நீந்தத் தெரியுமா?" என்று கேட்டான் படகோட்டி. "தெரியாது. என்?" படகோட்டி சொன்னான்:-"அப்படியானால் தங்கள் வாழ்நாள் முழுதும் வீணாயிற்றே! படகு தண்ணீருக்குள் அமிழ்கின்றது! ஆண்டவனை நினைத்துக் கொண்டு நிம்மதியாக உயிர் விடுங்கள்."

ஈயத்தை தேகத்திற்குள் ஊசியின்வாயிலாக விடுவதால் பிளவை நோய் தீருமென ஒரு வைத்தியர் கண்டு பிடித்திருக்கிறார்.

* * *

லோ கொர்னே உடன்படிக்கையில் எல்லா தேசத்தாரும் டிசம்பர் முதல் தேதி கைச்சாத்திடும் போது அரசர் விருந்திடுவாராம்.

* * *

நூற்றுரூபா கள்ளநோட்டுகள் தயார் செய்து வருவதாக சென்ட்ரல் ஸ்டேஷனில் மூவரும் காளஹஸ்தியில் இருவரும் கைது செய்யப்பட்டனர்.

* * *

ஸ்பானிஷ் அரசர் அரண்மனையில் தீப்பற்றி மொராகோ தஸ்தவேஜிகளிருந்த யிடமும் சிப்பந்திகள் இருந்த அறைகளும் எரிந்து போயின.

* * *

இந்திய கலாசாலைகளிலும் பள்ளிக்கூடங்களிலும் கட்டாய இராணுவப் பயிற்சியளிக்க வேண்டு மென நாகபுரியில் ஒரு தீர்மானம் நிறை வேறியிருக்கிறது.

* * *

மலாய் நாடுகளின் உயர்தர நீதிபதியாக ஹாங்காங் சுப்ரீம் கோர்ட்டு நீதிபதியாயிருந்த மிஸ்டர் எச். எச். ஜே. காம்பர்ட்ஸ் நியமிக்கப் பட்டிருக்கிறார்.

* * *

பிரட்டனில் இவ்வாண்டு 4 லட்சம் பவுனுக்குப் "பாப்பி"ப்பூ விற்பனையாயிற்று. கடந்த ஆண்டை விட இவ்வாண்டு 50,000 பவுன் இதில் அதிக வசூலாயிற்றாம்.

* * *

ஸ்ரீமான் சக்ரவர்த்தி இராஜகோபலாசாரியார் மகாத்மாவைக்காணும் பொருட்டும் நூற்போர்சங்க நிர்வாகக் கூட்டத்தின் பொருட்டும் ஆமதாபாத் சென்றிருக்கிறார்.

* * *

இங்கிலாந்தில் திலகர்பெருமானுக்குவக்கீலாயிருந்த சர்ஜான் சைமன் தம் மனைவி யோடு டிசம்பர் மாதம் 3-ந் தேதி லண்டனி னின்றும் இந்தியா நோக்கி வருகிறாராம்.

* * *

பீர்குலாம் முஜாதீத் என்பாருக்கு 9,30,000 சீடர்களாம். இவர்களில் கதரணியாதவர் இவர் முன்வருவதில்லையாம். இவர் கதரணியாத மத குருவிடம் தொழுகை நடத்துவதில்லையாம்.

* * *

மின்சாரசக்தியை அதிகரிக்கக் கூடிய வழிகள் பல பிரிட்டனில் இருப்பதாயும் இதனால் கரிச்செலவு குறைந்து கைத்தொழில்பெருகலாமெனவும் ஒரு மின்சார அறிஞர் கூறுகிறார்.

* * *

சிட்னி என்னுமிடத்தில் ... ... பந்தயத்தின்போது ஒரு மோடார் மணிக்கு 77 மைல் வேகத்தில் கிளம்பிக் கூட்டத்துட் புகுந்ததால் ஒருவர் இறந்ததாயும் 25 பே... காயமுற்றதாயும் ஒரு செய்தி கூறுகிறது.

* * *

இரங்கோன் நோக்கிச் சென்ற ... கப்பலும் பம்பாய் நோக்கிச் சென்ற "டிராபோர்டு ஹால்" கப்பலும் 15-ந் தேதி இரவு கிராஸ்பி கால்வாயில் மோதுண்டு பழுதுற்றனவாம்.

* * *

மருதா நல்லூரில் ஒருவர் மாற்றாந்தாயோடு வைத்திருந்த சம்பந்தத்தால் கரு உண்டாக அதைக் கலைக்கும் வழியில் ஒருமருத்துவச்சியின் மூலம் முயன்றபோது மாற்றாந்தாய் இறந்துபட்டாளாம்.

* * *

கப்பற்படைத்தலைவர் சர்எட்வர்டு ஸ்லேடின் புதல்வி மிஸ்மாடிலீன்ஸ்லேட் மகாத்மாகாந்தியின் சிஷியையாக ஆமதாபாத் சத்தியாக்கிரக ஆசிரமத்தில் தங்கிக் கதாணிந்து இராட்டையில் நூற்றுவருகிறார்.

* * *

பஞ்சாபைச் சார்ந்த சட்லஜ் ஆற்றிலிருந்து ஒரு கிளை கால்வாய் எடுக்க நவம்பர் 25-ந்தேதி பஞ்சாப் கவர்னர் கால்கோலுவார். ஆங்கே அதே வேளையில் கங்கையிலிருந்து ஒரு கால்வாய் பிரிக்க பிகானீர் மகாராஜா கால் கோலுவார்.

* * *

டோலனில், நெவிஜடு எனும் நீர் மூழ்கிப் படகில் காற்றடைக்கும்போது காற்றுப் பைகள் வெடித்துக் கப்பல் தீப்பிடித்து ஒரு உத்தியோகஸ்தர் இறந்தார். மற்றொருவர் காயமுற்றார். மாலுமிகள் கரை செல்லுமாறு கூறப்பட்டனராம்.

* * *

சிறை உத்தியோகஸ்தரைப்பற்றியும், சிப்பந்திகளைப் பற்றியும் சிறையின் மேற்பார்வை முதலியவைகளைப் பற்றியும் விசாரணை செய்து தவறான முறைகளை நீக்கி ஏற்ற முறையைக் காட்டப் பஞ்சாப் அரசாங்கத்தார் ஒரு கமிட்டி நியமித்திருக்கின்றனர்.

* * *

தூத்துக் குடியில் பெருமழை பெய், கடலில் புயலடித்ததால் முத்தெடுக்கச் சென்றவரைப் படகோடு எங்கோயோ அடித்து ஒதுக்கிவிட்டதாம். தெற்கேயிருந்து ... படகு வந்தபோது ஐவர் உடைந்தபட... பிடித்துத் தவிப்பதைக் கண்டு அன்... அப்படகிலேற்றி கரை சேர்க்க ஒருவன் ... ...த்து இறந்து போனானாம்.

கலம்பகம்

இரங்கூனுக்கு அதிக பிரயாணிகள் செல்கிறார்கள். 800 பிரயாணிகள் சென்ற வெள்ளிக்கிழமை கப்பலில் இடமில்லாமல் தங்கிவிட்டதால் இருதனிக்கப்பல்கள் விடப்பட்டன. ஒன்றில் 2000 பேரும் மற்றொன் 1400 பேரும் சென்றார்கள்.

* * *

கல்வியபிவிருத்திக்காகவும் கிராம வேலைகளுக்காகவும் கோயமுத்தூர் ஸ்ரீமான். சி. வி. வேங்கடரமணய்யங்கார் இரண்டு லட்சம் ரூபா பெறும் சொத்துக்களை எழுதிவைத்து தர்மச் சொத்துச் சட்டப்படி அதைப்பதிவு செய்ய ஏற்பாடு செய்திருக்கிறாராம்.

* * *

கள்ளிக் கோட்டையைச் சார்ந்த திக் கோட்டிக்கும் கண்ணனூருக்கு மிடையில் பெருமழையும் புயலும் கலந்து ஆயிரக்கணக்கான மரங்களை வீழ்த்திப் பலவீடுகளைத் தகர்த்தனவாம். 35 படகுகளில் மீன்பிடிக்கச் சென்ற 125 செம்படவர் என்னாயினரென்பது தெரியவில்லை.

* * *

மதுரை சௌராஷ்டிர ஸ்ரீராம் ஆலயைக் கலைக்க வேண்டு மென்று அதன் பங்குதாரர் 200 பேர் கோர்ட்டில் அறிவித்துக் கொண்டதன் பயனாக அம்மில் மூடப்பட்டு விட்டதாகத் தெரிகிறது. திடீரென இது மூடப்பட்டதால் இதில் வேலை செய்துவந்த தொழிலாளர் துன்புறுகின்றனர்.

* * *

மணிக்கு 50 மைல் வேகத்தில் நியூ யார்க்குக்குச் சென்ற ஒரு ரயில்வண்டி, இதற்முன் மூடுபனியின் காரணமாக மெதுவாக நகர்ந்து கொண்டிருந்த மற்றொரு ரயில் வண்டி மீது மோதி வண்டிகளைத் துகள் துகளாக்கியும் வீழ்த்தியும் சென்றதாம். பலர் இறந்தனர்; பலர் காயமுற்றனர்.

* * *

ஓவர்சியரை அடித்ததாக ஜஸ்டிஸ்பேஜ்மீது கல்கத்தா ஹைகோர்ட்டில் கொண்டு வந்த வழக்கை விசாரணை செய்த நீதிபதிகள் பேஜ் தமது வக்கீல் மூலம் மன்னிப்பு நாடியமையால் அதுவரை திருப்தியுற வேண்டுமென்றும் இதற்குமேல் விசாரணைபுரிய கோர்ட்டு அனுமதிக்க வில்லையென்றுங் கூறினார்கள்.

* * *

ஸ்டார் பாயிண்ட் என்னுமிடத்திற்கு 12 மைல் தூரத்தில் ஒரு நீர் மூழ்கிக் கப்பல் கடலில் முழுகிவிட்டதாம். இங்கு கடலாழம் அதிகமானதால் எவரும் எந்த வழியிலும் முழுகிப் பார்க்கக் கூடவில்லையாம். இக்கப்பலிலிருந்தவர்க்காக 17-ந்தேதி போர்ட்ஸ் மவுத் துறைமுகத்தில் பிரார்த்தனை நடைபெறும்.

* * *

சக்லுல்பாட்சா எகிப்துக்கு விடுதலை கோரிய நாளைக்கொண்டாடக் கூடுவதாயிருந்த கூட்டத்தைஉள்நாட்டு மந்திரிதடுத்தார். போலீசாரின் தடுப்பைமீறிச் சிலர்கூட்டத்திற்கலந்துகொண்டனர். இதன் பயனாக இருபாலார்க்கும் சேதமுண்டாயிற்று. சக்லுல் பாட்சா தங்கியிருந்த வீட்டைச் சூழ்ந்து போலீசார் காவல்புரிந்தனர்.

* * *

ஒன்றரை ஆண்டுகளுக்கு முன் சதியாலோசனை வழக்கு முடிந்ததும் வங்காள ரெகுலேஷன் சட்டப்படி கைது செய்யப்பட்ட உபேந்திர நாத் பானர்ஜியும், அமரேந்திர நாத் சாட்டர்ஜியும், அதுல் கிருஷ்ண கோஷும் சனிக்கிழமை விடுதலை செய்யப்பட்டனர். ஆனால் அவரவர் வீட்டில் பந்தோபஸ்திலிருக்க வேண்டுமாம்!

* * *

பெரம்பூர் ஒர்க்ஷாப்புக் கருகில் ரயில்வே அதிகாரிகள் சாமான் வைக்கும் பொருட்டு போட்டிருந்த ஐந்து கொட்டகைகளில் திடீ என்று மூன்றுவிழுந்தன. அங்கு வேலை செய்திருந்த எண்மரில் ஒரு கூலி அப்போதே உயிர் விட்டான். எழுவருக்கு பலமான காயம். இவரில் மூவர் பொது வைத்திய சாலையில் கேவல நிலையிலிருக்கிறார்.

* * *

விலியம் முல்லர் என்ற ஒரு பிரிட்டிஷ் தொழிலாளிகொலைக்குற்றஞ் செய்ததாகஆயுள் தண்டனை விதிக்கப் பட்டான். அப்போது அவன் குற்றவாளி யல்லவென்று கூறியது நம்பப்படவில்லை. 33 வருட சிறைவாசம் செய்த பின் இப்போது அவன் குற்றமற்றவன் என்பதை சாட்சிவாயிலாக நிரூபிக்கவே விடுதலை செய்யப்பட்டானாம்.

* * *

பம்பாய் வேலை நிறுத்தத்தில் சம்பந்தப்பட்ட 500 தொழிலாளர் வேலைக்குத் திரும்பிவிட்டனர். போதிய தொழிலாளர் வாராமையால் இயந்திரம் ஓட்டப் படவில்லை. மூன்றாம்முறையாக ... பவுன் ஆம்ஸ்டர்டாம் சர்வ தேசத் தொழிலாளர் சங்கத்தார் அனுப்பினர். பம்பாய நகர ... ஒரு லட்சம் உதவ வேண்டுமென அதன் ...த்தவர்கள் தீர்மானமனுப்பி யிருக்கின்...

சென்னை முனிசிபல் மகாநாடு சென்ற ஞாயிறன்று சென்னை சௌந்தரியமகாலில் ஸ்ரீமான் எஸ். ஸ்ரீநிவாச ஐயங்கார் தலைமையில் கூடி நகரவாழ்வைச் சீர்திருத்தும் திட்டங்கள் பலசெய்யப்பட்டன. பலர் அவ்வப்பகுதிகளின் குறைகளை எடுத்துரைத்தனர். இவ்வித மகாநாடு சென்னை நகரில் மாதா மாதம் ஒவ்வொரு பகுதியிலும் கூடிப்பொதுஜன அபிப்ராயத்தை யறியுமாம்.

* * *

ஏழு ஆதி திராவிடர் நிலக்கடலை திருடியதாக உடையார் பாளையம் தாலுக்கா வாரியன் கிராம முனிசீபு கருப்பன் என்ற தலையாரியைக் கொண்டு அனைவரையும் மரத்தில் கட்டி அடித்தாராம். அடியுண்ட எழுவரில் ஒருவர் இறந்துவிட்டார். முனிசீபு ஒரு வருட கடுங்காவல் தண்டனை பெற்றார். முனிசீபு சொல்படி நடக்கவேண்டிய-நடந்தகருப்பன் கோர்ட்டு கலையும் வரை காவலி லிருந்தான்.

* * *

சீகாழியில் ஸ்ரீ பக்கிரி செட்டியாரின் 8 வயதுள்ள ஒருசிறு பெண்ணை அவர்கீழ்வேலை செய்து வந்தவனும் பக்கத்து வீட்டுக் காரனுமாகிய மாணிக்கப் பத்தன் என்பான் நகைகளை அபகரிக்கும் நோக்கோடு தானுந்தன் மனைவியுமாகச் சேர்ந்து சிறுமியின் கழுத்தைப் பிடித்து நிறுத்திக் கொலை செய்து சமையலறையில் புதைத்துவிட்டார்கள். இருவரில் எவர் கொன்றார் என்பது அறியக் கூடாமையால் இருவரும் ஆயுள்வரை தீவாந்தர தண்டனையடைந்தனர்.

* * *

ராயல் ஏஷியாடிக் சங்க அங்கத்தினர் எஸ் எம். மித்ரா இறந்து விட்டார். 1856-ம் ஆண்டு பிறந்த இவர் இறக்கும் வரை பிரம்மசாரியாகவே யிருந்திருக்கிறார். இவர் ஆங்கிலம் வங்கம், உருது பாஷைப் பத்திரிகைகளில் முப்பதாண்டு இருந்திருக்கிறார்; "டெக்கான் போஸ்டு" என்னும் பத்திரிகையைப் பத்து வருடமாகத் தமது சொந்தச் செலவில் நடத்தியவர். பிரிட்டிஷ் பொருள் பகிஷ்காரத்தைப் பற்றிப் பலவியாசங்களும் மாதர்களுக்காக', பல புத்தகங்களும் எழுதியுள்ளார்.

* * *

மைக்கேல் அம்மாளெனும் கத்தோலிக்க மாது நாங்குனேரியில் மாதா கோயில் கட்டும் பொருட்டுப் பல ஊர்கள் சென்று பணம் வசூல் செய்து திருச்சி ஜில்லா லால்குடி தாலுக்கா சிறுகனூர் கிராமம் போந்த போது ஆங்கு கைலாச முத்திரிய னென்பான் தானும் உடனிருந்து பணம் வசூலித்துத் தருவதாகக் கூறி அழைத்தும் போய நடுவழியில் பணத்தையும் நகைகளையும் பிடுங்கிக் கொண்டு கொலை செய்துவிட்டான். அவன்மீது வழக்குத்தொடரப்பட்டதில் ஆயுள்வரை தீவாந்தர தண்டனை விதிக்கப்பட்டதாம்.

* * *

இரு ஐரோப்பியர்கள் அலகாபாதைச் சார்ந்த மதுரை குண்டமெனு மிடத்திலுள்ள ஒரு குளத்திலிருந்த வாத்தைச் சுட்டனர். அக்குளத் தருகிலிருக்கும் கோயிலிலிருந்த சுபாதாஸ் என்னும் சாமியார் அவ்விடத்தில் வேட்டையாடக் கூடாதெனத் தடுத்தார். இருவருக்கும் சச்சர உண்டாகிச் சாமியார், ஐரோப்பியர் ஒருவரைக் குளத்தில் தள்ளி யமிழ்த்திக் கழுத்தை யிறுக்கினாராம். இதன் மேல் வழக்குத்தொடுக்கப்பெற்று, சாமியாருக்கு ஒரு வருடக்கடுங்காவல் தண்டனையும் நூறு ரூபா அபராதமும் விதிக்கப்பட்டதுடன் ஒரு வருட நன்னடத்தை ஜாமீனும் கேட்கப்பட்டதாம்.

* * *

அஸ்ஸாம் மாகாணத்தைச் சார்ந்த திப்கோர் எனும் ஸ்டேஷனில் ஆறு ஐரோப்பிய ரயில்வே உத்தியோகஸ்தர்களைக் கொல்ல, அங்குவேலையிலிருந்து நீக்கப்பட்ட ஓர் ஆங்கிலோ இந்தியரும் இரு இந்தியரும் ஒரு சூழ்ச்சிசெய்தனர். கல்கத்தாவில் ஒரு வியாபாரக் கம்பெனியார் மாதிரிக்காக மிட்டாய் தினுசுகள் அனுப்புவதுபோல் கடிதமெழுதி மிட்டாய் தினுசுகளை அனுப்பினர். பார்சலைத்திறந்து மிட்டாயைத்தின்ற மூன்று ஐரோப்பியமாதர் மயக்க முற்று வாந்தி செய்தனர். பாரசல்மீது கல்கத்தா முத்திரையில்லாமல் திப்ருகார் ஸ்டேஷனுக்கு எட்டுமைல் தூரத்துள்ள ஓர் ஊர்பெயர் இருந்தது. சூழ்ச்சிக்காரர் கைதுசெய்யப்பட்டனர்.

* * *

மத்திய திருவாங்கூரில் அனபரம்பாவென்ற ஊரில் சீதை யென்பவளை ஒருபிராமணர், மணக்கும் போது பின்பு தருவதாக வாக்களித்த தொகையை அவள் பெற்றோர்கள் தரவில்லை யென்று சீதையைத் தன் புறத்ரியும் அவள்பெற்றோரை வற்புறுத்தியும் வந்தார். இதனிடையில் சீதையின் தந்தை இறந்து படவே தாய் வரதட்சணைப்பணம் கொடுக்க முடியா நிலையடைந்தாள். பிராமணர் வழக்கு தொடுத்தார். அது தனக்கு ... ...ாமையால் சீதையையும் தமது ...ண்டு குழந்தைகளையும் விட்டு விட்டு ஓடி... ...ார். சீ... தன் தயிடமிருந்த கோத்த... ...தை

...யையும் இரு குழந்தைகளையும் கன்றுடன்றா... துன்புறுத்தியதால் சீதை நஞ்சிட்டு உயிர் துறந்தாள். அந்தோ! வரதட்சிணையே!

* * *

ஜில்லா காங்கிரஸ் கமிட்டி கும்பகோணம்:- 1925ஹு நவம்பர்மீ 14ல மாலை $5\frac{1}{2}$ மணிக்கு மாயவரம் தாலுக்கா காங்கிரஸ் காரியாலயத்தில் M. கலியாணசுந்தர முதலியார் தலைமையில் கும்பகோணம் ஜில்லா காங்கிரஸ் கமிட்டி அங்கத்தினர்களின் பொதுக் கூட்டம் நடைபெற்றது. ஸ்ரீமான் சாமிநாத ஜோஸ்யர், ஸ்ரீமான் ஈ. வி. கலியாணசுந்தரம் பிள்ளை முதலியவர்களின் கடிதங்கள் படிக்கப்பட்டன: 1925-26ம் வருஷத்திற்கு ஜில்லா காங்கிரஸ் கமிட்டிக்கு நிர்வாகஸ்தர் தெரிந்தெடுக்கப் பட்டனர். கும்பகோணம் ஜில்லாகமிட்டி காரியாலயம் மாயவரம் பட்டமங்கலத்தெரு, 74 - ம் நெம்பர்கட்டடத்தில் இருக்கவேண்டுமெனவும் ஸ்ரீமான் மருத்துர் R. S. கந்தசாமி பிள்ளை அவர்களிடம் இருக்கும் பழைய ஜில்லா காங்கிரஸ் கமிட்டி ரிகார்டு முதலிய யாவற்றையும் காரியதரிசி V. சுப்பிரமணியனிடம் ஒப்புவிக்கும் படிக்கும் தீர்மானிக்கப்பட்டன எனக் காரியதரிசி எழுதுகிறார்.

* * *

பார்க்கவர் சங்கம்: திருச்சிஜில்லா முசிரி தாலுகா மஹாதேவிகிராமத்தில் 11-11-25ல் இக் குலத்தினரின் கூட்டம் ஒன்றுகூடியது. ஸ்ரீமான் மே. வே. துரைசாமி உடையார் அக்கிராசனம்வகித்தார்."பார்க்கவர்இனிச்செய்யவேண்டியவேலை" என்ற விஷயத்தைப்பற்றி சிறிது நேரம் பேசினார். பின்னர் திருவாளர் மா. ரா. குமாரசாமி பிள்ளை அவர்களை வரவழைத்து வேலைசெய்யத் துவக்கவேண்டிய அவசியத்தைப்பற்றி ஆலோசிக்கப்பட்டது. மஹாதேவி கிராமபார்க்கவகுல நிர்வாகிகளாகச் சிலர்தெரிந்தெடுக்கப்பட்டனர். கூடியசீக்கிரத்தில் திருவாளர் மா.ரா. குமாரசாமி பிள்ளைஅவர்களை வரவழைத்து தாலூகா மகாஜனங்களின் பொதுக் கூட்டம்கூட்டி தாலூகா நிர்வாகசங்கம் ஒன்று காணுதல் வேண்டுமென்றும் மகாநாட்டுத்தீர்மானங்களைச்செய்கையிற் செய்து காட்டவேண்டுமென்றும் கூடிய சீக்கிரத்தில் ஒரு தாலூகா மகாநாட்டைக் கூட்ட வேண்டுமென்றும் தீர்மானங்கள் செய்யப்பட்டன என ஒரு நிருபர் எழுதுகிறார்.

* * *

தமிழர் கூட்டம்—குரோதனஹு ஐப்பசிமீ ...ல தமிழர் கூட்டம் திரு. ராய சொக்கலிங்கம் அவர்கள் தலைமையில் காண்டி ...
அவர்க...
வயி.
சோம...
ஆசிரிய...
அங்கத்...
ஐப்பசி...
படிக்க...
கள் கண்டி...
குருகுலத்தை நடாத்த...
...க் கொள்ளுகிறது. அப்படி... ...ார் இக்கூட்டத்தின் அபிப்பிராயப் பிரகாரம் எவ்வித வேறுபாடு மின்றி இக்குருகுலவாயிலாகத் தமிழர்கள் முன்னேற்றத்தில் நாட்டஞ்செலுத்துவார்களென்று இக்கூட்டம் நம்புவதால் இக்கூட்டம் கலக்கப் பெறுகின்றது. மேற்கண்ட பஞ்சாயத்தாருக்குத் தக்க ஆதரவு அளிக்குமாறு மேது தமிழர்களை இக்கூட்டம் கேட்டுக் கொள்கிறது" என்று தீர்மானிக்கப் பட்டதாகக் காரியதரிசி அறிவிக்கிறார்.

* * *

சித்தாந்தப் பிரகாசசபை :— இச்சபையின் சார்பில் நிகழும் 1925ஹு நவம்பர்மீ 15ல ஞாயிற்றுக்கிழமை மாலை 4-மணிக்குச் சென்னைப் பச்சையப்பன் கல்லூரிப்பட்டி மண்டபத்தின்கண் சைவ சித்தாந்த பரமாசிரியராகிய ஸ்ரீ மெய்கண்டதேவ நாயனார் திருநாள் கொண்டாட்டம் சென்னை அரசாங்க அபிவிருத்தி இலாகா அமைச்சர் திவான்பகதூர் தி. கெ. சிவஞானம் பிள்ளை அவர்கள் தலைவராகவீற்றிருப்ப மிகச்சிறப்பாக நடைபெற்றது. முதன் முதல் திரு. பழனிசாமிப்பிள்ளை அவர்கள் (ஆதிதிராவிடர்) "மெய்கண்டார் வரலாறு" என்னும் பொருள்பற்றி ஒரு விரிவுரை நிகழ்த்தினர். பின்பு திருவாளர் தமிழ்ப் புலவர் திரு. வி. உலகநாத முதலியார் அவர்கள் "சந்தானச்சாரியர்" என்பதைப்பற்றி ஒரு பொருளுரை செய்தனர். அப்பால் பச்சையப்பன் கல்லூரிப் பேராசிரியர் திரு. மணி. திருநாவுக்கரசு முதலியார் அவர்கள் "சிவஞான போதம்" என்னும் பொருள்பற்றி ஒரு பேருரை ...தார். பின்னர்த்தலைவர் அவர்கள்
உபந்நியாசகர்கள் செய்த வி...
வெளியில் நின்ற ம...
பத்துக்குள் பொழிந்தது போ...
றம் சித்தாந்தப் பிரகாச...
சியைத் தாம் பெரிதும்
சொல்லிச் சைவ சித்தாந்...
காகத் தமிழர் இது ...
வருத்தற்பால தெ...
தமிழ் நாட்டி...
விரைவிலே...
வேண்டுமெ...
மும் தமி...
ரங்களுக்...
றம்

நாமார்க்குங் குடியல்லோம் நமனை யஞ் சோம் நரகத்தி லிடர்ப்படோம் நடலையில் லோம், ஏமாப்போம் பிணியறியோம் பணி வோமல்லோம் இன்பமே யெந்நாளுந் துன்ப மில்லை, தாமார்க்குங் குடியல்லாத் தன்மை யான சங்கரனற் சங்கவெண் குழையோர் காதிற், கோமாற்கே நாமென்றும் மீளாவா ளாய்க் கொய்ம்மலர்ச்சே வடியிணையே குறுகி னோமே.—(அப்பர்.)

சென்னை 1925ஆு நவம்பர்மீ 21உ

கல்பாதி

தீண்டாமையைத் தொலைக்கப் பல விடங்களில் பலதிற முயற்சிகள் நடை பெற்று வருகின்றன. தீண்டாமையை எப்படி ஒழிப்பது என்பதைப் பற்றி யுஞ் சில அறிஞர் ஆராய்ந்து வருகிறார். மக்களுக்குள் தீண்டாமை யிருத் ... வள் படைப்பைப் பழிப்பதா ... முய ... ன்று ... உல ... கிறார். ... கொடுமை வேமடு ... ! தெருக்களில் நாயோடலாம்; பூனை யோடலாம்; எல்லாம் ஓடலாம். ஆனால் மனித உடல் தாங்கியுள்ள உயிர்கள் உலவலாகாது! என்ன கொடுமை! அத்தெருக்களிலுள் ளவர்க்கென வேறு காற்று வேறு ஒளி ஆண்டவனால் அளிக்கப் படுகின்ற னவோ? அத்தெருவிலுள்ளோர் பிறப் பதற்கும் மற்றவர் பிறப்பதற்கும் வேற் றுமை யுண்டோ? மனிதன் தெருவில் உலவலாகாதென மற்றொரு மனிதன் தகைதலை எவ்வடக்கு முறையில் அமைத்துக் கூறுவது?

வைக்கம் மாடவீதியில் மக்களுள் சிலர் போதல் ஆகாதென முளைத்திருந்த தடையையுடைக்க ஆண்டெழுந்த சத்தியாக் கிரகம் நல்ல பாடங் கற்பித்தது. இப்பொழுது கல்பாதியில் முளைத்துள்ள அத்தடை ...டைபடுங் காலம் நெருங்கியிருக்கிறது. கல்பாதியிலுள்ள பிராமணர் தெருக்க ...ரில் ஈழுவர் புலையர் முதலியோர் நுழைய ...ுங் கூடாதென்பதைப் பற்றி எழுங் ...ள்ள கிளர்ச்சி நேயர்கட்குத் தெரியும். ...ழுவர் இதுபோழ்து உணர்வு பெற்று ...த்தெருக்களில் நுழைய முயன்று ...ருகிறார். அங்குள்ள பிராமணர்கள் ...ள் நுழையாதவாறு காத்து வரு ... ஹிந்து மதத்திலுள்ள ...க்கொடிய தடை அவர் ...கள் ஹிந்து மதம் ...துமதமோ இஸ்லாம் ...லோ புகுந்ததும் ...பாதிப்பதில்லை. ... எது? பிரா ...; அன்று; ...துள சி ...ம் - சிவ

நாமம்-அவர்களைத் தடுக்கின்றன. கிறிஸ்துவமதமும் இஸ்லாம் மதமும் ஈழுவர்களுக்கேற்பட்டுள்ள தடையைப் பிளந்தெறிகின்றன. தெருவிலும் நாடாதவாறு தூரத்தும் ஹிந்துமதத்தில் ஈழுவர்களிருக்க ஒருப்படுவார்களா? இக்காரணத்தால் சில ஈழுவர்கள் புறமதம் புகுகிறார்கள்.

ஆரிய சமாஜத்தைப் பற்றி நேயர்கள் அறிவார்கள். இச் சமாஜத்தாருக்குத் தீண்டாமையில்லை. தீண்டாதாரெனச் சொல்லப்படுவோர் தீண்டாமையைத் தொலைப்பதற்காக இச்சமாஜத்திற் சேர்ந்துவருகிறார். தெருவில் போகும் உரிமை கிறிஸ்துவர்களுக்கும் இஸ்லாமானவர்களுக்கும் இருப்பதுபோல ஆரிய சமாஜத்தார்க்குமுண்டு. அவ்வழக்கம் பல விடங்களில் செயலிலும் வந்திருக்கிறது. கல்பாதியில் அவ்வழக்கத்துக்கு ஊறு நிகழ்ந்திருக்கிறது. கிறிஸ்து மதம் புக்க ஈழுவர்களும் இஸ்லாம் மதம் புக்க ஈழுவர்களும் பிராமணர் தெருக்களில் போகலாம்; வரலாம். ஆரிய சமாஜம் புக்க ஈழுவர்கள் அத்தெருக்களில் புகாதவாறு தடுக்கப் படுகிறார்கள். கல்பாதி திருவிழாவில் ஈழுவர்களால் கலகம்விளையாதவாறு காப்பதற்கென பேர்பெற்ற 144 தோன்றி யிருக்கிறது.

ஆரிய சமாஜத்திற்புகும் ஈழுவர்கள் தடுக்கப்படுதற்கு அரசாங்கந் துணை புரியலாமா என்று அச்சமாஜத் தலைவர் சுவாமி சிரத்தானந்தர் கேட்கிறார். ஈழுவர்கள் ஆரிய சமாஜம்புகாது கிறிஸ்தவ இஸ்லாம் மதம் புக அரசாங்கந் துணை நிற்கிறது என்றும் அச்சுவாமிகள் கூறுகிறார்கள். சமய நடைமுறைகளில் அரசாங்கம் நடுநிலையன்றோ வகித்தல் வேண்டும்? சென்னை அரசாங்கம் நடுநிலை பிறழ்ந்ததை எல்லா மதத்தாரும் மறுத்தல்வேண்டும். ஹிந்து இஸ்லாம் கிறிஸ்து ஆரிய சமாஜ மதங்கள் தங்களுக்குள் எவ்வளவாயினும் வாதாடலாம். அதுவேறு. ஒரு மத உரிமையில் அரசாங்கந் தலையிடுதலை எல்லா மதத்தாரும் மறுத்தே தீரல்வேண்டும்.

தீண்டாமை மக்களைப் புறமதம் புகுமாறுந் தூண்டுகிறது. மத உண்மை கண்டு ஒருமதம் விடுத்து இன்னொரு மதம் போதலே உண்மையான மனந்திரும்பலாகும். ஒரு காரணம்பற்றி ஒருமதம் புகல் அறமாகத் தோன்றவில்லை. ஆனால் ஏழைமக்கட்கு மனித உரிமை காக்க வேறுவழியுமில்லை. சத்தியாக்கிரகப் போரால் உரிமைகாக்கமுயல்வது சிறப்பு.

நாணயச் செலாவணி கமிஷன்

சென்ற திங்கட்கிழமையன்று சென்னை நகர் விக்டோரியா மண்டபத்தில் எல்லா அரசியல் கட்சிகளைச் சேர்ந்தவர்களும், ஒரு கட்சியிலும் சேராதவர்களும் அடங்கிய ஒரு பெருங்கூட்டம் நடைபெற்றது. இக்கூட்டத்தில் நாணயச் செலாவணிக் கமிஷன் அமைப்பைப் பற்றி மூன்று பகுதிகள் அடங்கிய ஒரு மிதவாதத் தீர்மானம் நிறைவேறியது. மிதவாதத்தின் தலையாயகூறுபாடுகளான கண்டனமும் கோரிக்கையும் அத்தீர்மானத்தில் அடங்கி யிருக்கின்றன. நாடெங்குமுள்ள தேசிய வாதிகள் அனைவரும் ஒருமுகமாக இக்கமிஷனைப் பகிஷ்காரஞ் செய்வதென்று தீர்மானித்தால் மிக்க நலமாயிருக்கும். இதற்குரிய காரணங்களை இங்கு ஆராய்வோம்.

இந்தியா அரசாங்கத்தின் வரவு செலவு அங்கத்தினர் ஸர் பேசில் பிளாக்கெட் சமீபத்தில் பேசுகையில் நாணயச் செலாவணியின் தத்துவங்களை அறிந்தவர் மிகச் சிலரே என்று கூறினாராம். இது முற்றிலும் உண்மையேயாகும். இந்தியரில் பெரும்பான்மையோரைப் பற்றிய வரையில் நாணயச் செலாவணி என் ... 'மூடிமந்திர'மாகவே இருந்து வரு ... து. அரசாங்கத்தின் அதிகாரங்கள் ... ணயச் செலாவணியை விருப் பம்போல் மாற்றியமைக்க அவர்களுக்குள்ள அதிகாரத்தைப் போல் நாட்டிற்கு அபாயகரமானது வேறில்லை. மந்திரவாதியின் கையிலுள்ள மாத்திரைக் கோலைப்போல் அரசாங்கத்தாரிடம் இவ்வதிகாரம் பயன்பட்டு வருகிறது. ரூபா பதினேழு கொடுத்து வாங்கிய பவுன் இனி பத்து ரூபா தான் பெறுமென்று ஜனங்கள் திடீரென ஒருநாள் அறிவிக்கப்படுகிறார்கள். அலறிப் புடைத்துக் கொண்டு அவர்கள் பவுன்களையெல்லாம் கொண்டு கஜானாவில் செலுத்துகின்றனர். ஆனால் பவுன் விலை பத்தொன்பது ரூபாவுக்குப் போய் விடுகிறது. பவுனைச் செலுத்தியவர்களின் அதிசயமும் ஆத்திரமும் தணிந்த சில காலத்திற்குப் பின் பவுன் ஒருவரையுங் கேளாமல் பதின்மூன்றரை ரூபா விலைக்கு வந்துவிடுகிறது. எனவே உடலில் அணிந்திருக்கும் ஆபரணங்களையே சொத்தாகவுடைய ஏழை மக்கள் தங்கள் சொத்தின் மதிப்பு தங்கள் கையில் அகப்படாது ஏறியும் இறங்கியும் வருவதைக் கண்டு திகைக்கிறார்கள்.

நாணயச் செலாவணியின் இரகசியங்கள் பொது ஜனங்களுக்குத் தெரியாதிருக்கலாம். ஆனால் நம்முடைய நன்மைக்குகந்த ஏற்பாடு எதுவென்பதை இயற்கை உணர்வு தெரிவிக்கின்றது. நம் நாட்டில் தற்போதுள்ள நாணயச் செலாவணி முறை நமக்குப் பெரிதும் தீமை பயந்து வருவது எல்லாருக்கும் நன்கு தெரிகிறது. வருஷந்தோறும் கோடிக் கணக்கான ரூபா இந்நாணயச் செலாவணியினால் இந்நாடு நஷ்டமடைந்து வருகிறது. அஃது எவ்வாறு என்று ஒரு சிறிது விளக்குவோம். தற்போது பிரிட்டிஷ் ஆட்சியின் பாதுகாப்பையும், மற்றும் பல நன்மைகளையும் நாம் பெறுவதற்கு மாற்றாக இங்கிலாந்துக்கு வருஷந்தோறும் சில கோடி ரூபா கப்பஞ் செலுத்தி வருகிறோம். ஆனால் இக்கப்பம் நேராக அரசாங்கத்துக்குச் செலுத்தப் படுவதில்லை. இங்கிலாந்திலுள்ள இந்தியா காரியாலயத்தின் செலவு, மாஜி ஐ. சி. எஸ். உத்தியோகஸ்தர்களுக்குப் பென்ஷன் இவ்வாறு பல வகையில் இத்தொகை செலுத்தப் படுகிறது. இதைப் பவுன் நாணயத்தில் செலுத்த நாம் கடமைப் பட்டிருக்கிறோம். மற்றும், இந்தியாவில் இறக்குமதியாகும் பொருள்களை விட இங்கிருந்து ஏற்றுமதியாகும் உணவுப் பொருள், மூலப்பொருள் முதலியவை அதிகமாதலால் அன்னிய நாட்டு வியாபாரிகள் நமக்கு ஆண்டுதோறும் பணம் அனுப்ப வேண்டி யிருக்கிறது. வெளி நாடுகள் பலவற்றில் இருப்பதுபோல் இந்நாட்டிலும் தங்க நாணயச் செலாவணி இருந்தால், மேற்சொன்னவாறு பணம்அனுப்பிப் பணம் பெறுவதில் கஷ்டம் அதிகம் இராது. இதனால்தான் நமது நாட்டுப் பிரமுகர்களில் பலர் "தங்கத் திட்டம்" (Gold standard) வேண்டுமென்று முறையிட்டு வருகின்றனர். ஆனால் நமது அரசாங்கத்தாரும், அரசாங்க நிபுணர்களும் இது வேண்டுவதில்லையென்று கூறுகிறார்கள். உலகிலில்லாத புது ஏற்பாடு ஒன்று இப்போது இந்நாட்டில் அமுலில் இருந்து வருகிறது. இதற்குத் தங்க மாற்றுத் திட்டம் (Gold Exchange standard) என்று பெயர். இதன்படி ரூபாக்களே இந்நாட்டில் முக்கிய நாணயமாயிருக்கும். பவுனுக்கும் ரூபாவுக்குமுள்ள சம்பந்தத்தை அரசாங்கத்தார் நிர்ணயிப்பார்கள். அந்த நிர்ணயப்படி இந்தியாவில் ரூபா கொடுத்தால் இங்கிலாந்தில் பவுன் கொடுக்கவும், இங்கிலாந்தில் பவுன் கொடுத்தால் இந்தியாவில் ரூபா கொடுக்கவும் அரசாங்கத்தார் ஏற்றுக் கொள்வார்கள். இதற்குச் சாதகமாயிருக்கும் பொருட்டுக் கோடிக் கணக்கான நமது பணம் இங்கிலாந்தில் வைக்கப்பட்டிருக்கிறது. இதற்குத் "தங்கத்திட்டக் கையிருப்பு நிதி" என்று பெயர். இப்பணத்தில் பெரும்பகுதி இங்கிலாந்திலுள்ள பாங்கிகளுக்கும் வியாபாரிகளுக்குங் குறைந்த வட்டியில் கடனுகக் கொடுக்கப்பட்டிருக்கிறது.

அரசாங்கத்தார் கையிலுள்ள இவ்வதிகாரம் பிரிட்டிஷ் வியாபாரிகளுக்கும், முதலாளிகளுக்கும் அநுகூலமாய் துர்விநியோகப்படுத்தப்படுகிறதென்பது நீண்ட நாளாக உள்ளநமது குறையாகும். இவ்வதிகாரத்தை எவ்வாறு துர்விநியோகப் படுத்தலாம் என்பதற்கு ஓர் சிறு உதாரணம் கூறுவோம். ஒருவன் தன் அண்டை வீட்டானுக்கு ஆண்டுதோறும் நூறு கலம் நெல் கொடுக்கக் கடமைப்பட் டிருப்பதாக வைத்துக் கொள்வோம். அவனுடைய வயல்களில் என்ன பயிர்தான் செய்யலாம் என்று நிபந்தனை கூற அவ்வண்டை வீட்டானுக்கு அதிகாரம் இருப்பதாகவும் வைத்துக் கொள்வோம். அவ்வண்டை வீட்டான் கெட்ட எண்ணங் கொண்டவனாயிருந்தால், அவனுடைய வயல்களில் எல்லாம் நெற்பயிர் செய்யக்கூடாதென்று சொல்லிவிடலாம். அத்துடன் ஊரிலுள்ள நெல்லையெல்லாம் தான் வாங்கிக் கொண்டு தனக்குத் தரவேண்டியதை நெல்லாகத்தான் தரவேண்டுமென்று வலியுறுத்தினால், நெல்லுக்கு அவன் சொல்லும் விலை கொடுத்தாக வேண்டுமன்றோ?

1920-ம் ஆண்டில் நமது நாணயச் செலாவணியின் கேடு நன்கு புலனாயிற்று. நாணயச் செலாவணி நிபுணர்கள் அடங்கிய ஒரு கமிட்டியார் பவுன் விலை பத்து ரூபாவாக நிர்ணயித்து விட வேண்டுமென்று சிபார்சு செய்தனர். அரசாங்கத்தார் அவ்வாறே சட்டமியற்றினர். அதன் பயனாக இந்நாட்டார் அடைந்த நஷ்டத்துக்குக் கணக்கில்லை. இங்குப் பத்துரூபா கொடுப்போருக்கு இங்கிலாந்தில் ஒரு பவுன் கொடுப்பதாக அரசாங்கத்தார் ஒப்புக் கொள்ளவே, இந்நாட்டிலுள்ள பிரிட்டிஷார் அனைவரும் இதுதான் தருணமென்று தங்கள் மிச்சப் பொருளையெல்லாம் இங்கிலாந்துக்கு அனுப்பலாயினர். இவர்களுக்கெல்லாம் இங்கிலாந்திலிருந்த நமது தங்கக் கையிருப்பிலிருந்து பத்து ரூபாவுக்கு ஒருபவுன் வீதம் கொடுக்கப்பட்டது. இதன் பயனாக இந்தியா அரசாங்கத்துக்கு ... கோடி ரூபா நஷ்டம் ஏற்பட்டது. இதைக் "கட்டுப்பாடான சூறை" யென்றும், "சட்ட முறையான கொள்ளை" என் ... அப்போது ஸ்ரீமான்ஜி முதலிய இந்திய பிரமுகர்கள் கண்டித்தார்கள். முடிவில், நிபுணர்களும் தவறு செய்யக் கூடும் என்பது புலப்பட்டது. பவுன் விலை பத்து ரூபாவுக்கு வரவேயில்லை. இதனால் நமது நாட்டு வியாபாரிகள் அடைந்த நஷ்டத்திற்கு அளவில்லை.

அவ்வாண்டிலிருந்து நமது நாணயச் செலாவணி முறையைத் திருத்தியமைக்க வேண்டுமென்று நாட்டார் முறையிட்டு வருகின்றனர். இவ்வருஷ ஆரம்பத்தில் நாணயச் செலாவணிக் கமிஷன் ஒன்று நியமிக்க வேண்டுமென்று ஸ்ரீமான் வேங்கடபதி ராஜு இந்தியா சட்ட சபையில் ஒருதீர்மானம் கொண்டு வந்து நிறைவேற்றினர். அரசாங்கத்தார் இப்போது ஒரு கமிஷன் நியமித்திருக்கிறார். ஆனால் இக்கமிஷன் கிணறு வெட்டப் பூதம் புறப்பட்டதையொக்க அமைந்திருக்கிறது. இக் கமிஷன் அங்கத்தினர் மொத்தம் பத்துப் பேர். இவர்களில் அறுவர் ஐரோப்பியர். மற்ற நால்வர் இந்தியர். இந்நால்வரில் ஸர் புருஷோத்தமதாஸ் தாகூர் தாஸைத் தவிர்த்த மற்ற மூவரும் அதிகாரவர்க்க அடியார்கள். மற்றும், இந்தப் பத்து பேரில் அறுவர் இம்பீரியல் பாங்கில் ஏதேனு மொருவழியில் சம்பந்தப்பட்டவர்கள். இக்கமிஷன் அமைப்பைப் பார்க்கும்போது, இது பிரிட்டிஷ் வியாபாரிகள், பாங்கர்களின் நன்மையைப் பாதுகாக்கவேற்பட்டதா இந்தியாவின் நன்மையையொட்டி நமது நாணயச் செலாவணியைத் திருத்தியமைக்க ஏற்பட்டதா என ஐயம்தோன்றுகிறது. இவ்வாறு ...ள்ளையார் பிடிக்கக் குரங்காய் முடிந்தது கண்ட ஸ்ரீமான் ஜின்னா இந்தியா ...டசபையில் மற்றொரு தீர்மானம் ...ண்டு வந்து இக்கமிஷன் அமைப் ...க் கண்டித்தார். ஆயினும் என்ன? ...ாங்கத்தார் அதை வழக்கம்போல்

குப்பைத் தொட்டியில் எறிந்துபோட்டனர். அரசாங்கத்தின்வரவுசெலவுத் திட்டத்தைக் குப்பைத் தொட்டியில் எறிவோம்என்று ஸ்ரீமான் வி. ஜே. படேல் ஒருமுறை அச்சுறுத்தினர். ஆனால்வரவு செலவுத் திட்டம் சிம்லா கோபுர உச்சியில் தான் விளங்குகின்றது. குப்பைத் தொட்டிக்குப் போவன அங்கத்தினரின் தீர்மானங்களே! சென்னையிலும், மற்றும் நாட்டின் பலவிடங்களிலும் நடந்த கூட்டங்களின் தீர்மானங்களும் அங்கேயே சேருமென எதிர்பார்க்கலாம். இந்நிலைமையில் நாட்டாரின் கடமை யென்னவென்று நாம் சொல்ல வேண்டுவதில்லை. இவ்வேண்டாத கமிஷனை ஒரு முகமாகப் பகிஷ்கரித்தலே ஒழுங்கானமுறையாகும். இதனால் நாணயச் செலாவணி சீர்திருந்திவிடுமா வென்று கேட்கப்படலாம். சீர்திருந்தாது. ஆனால் பொதுஜன அபிப்பிராயத்தைக் கலந்தே காரியம் நடத்துவதாக அரசாங்கத்தார் சொல்லிக் கொள்வதற் கேனும் இடமில்லாமலிருக்கும். பின்னர் நாணயச் செலாவணி திருந்துவதற்கு வழி தான் என்னவெனில், நமது சுயராஜ்யப் போராட்டத்தைத் தீவிரமாக நடத்தி விடுதலை பெறும் நாளை நெருங்கச் செய்வதேயாகும்.

இடியேறு

இன்றைய அனுபந்தம்

காஞ்சியில் கூடியுள்ள தமிழர் மகாநாட்டின் அக்கிராசன உபந்நியாசத்தையும், வரவேற்புக் கூட்டத்தலைவரின் சொற்பொழிவையும் ஒருவாரங்கழித்து "நவசக்தி"யில் வெளியிடுவதைப் பார்க்கினும், அதை இவ்வாரமே வெளியிடுமாறு நேயர் பலர் விழைந்ததற்கேற்ப, நேற்றைய "சக்தி"யின் பரவல இன்றைய அநுபந்தமாக வெளியிட்டிருக்கிறோம்.

வீரசுவர்க்கம்

... சிறுகாரியம் ஒன்று செய்யினும் அவர்கள் புகழ் எங்கும் பரவுகின்றது. ஆனால் உலகில் தாழ்ந்த நிலையிலுள்ளோர் அருஞ்செயல்கள் புரியினும் அவை அவ்வளவாக வெளிவருவதில்லை. எனினும், செல்வர்களைவிட ஏழைமக்களே பெரிதும் இவ்வுலகில் தீரச்செயல்கள் நிகழ்த்துகின்றனர். சென்ற ஞாயிற்றுக்கிழமையன்று சென்... அடுத்த தேனம்பேட்டையில் முருகேசுநாயுடு என்னும் தொழிலாளர் ஒரு குழந்தை... காப்பாற்றவேண்டித் தமது உயிரை ஈந்த... அவர் வேலைக்குப்போய் விட்டுத்திரும்பி வருகையில் தமக்குப் பின்னால் மோடார் வண்டி ஒன்று வந்ததையும், அவ்வண்டியின் முன்பு குழந்தையொன்று நின்றதையும் கண்டு அக்குழந்தையைத் தப்புவிக்கத் தாவி ஓடினாராம். ஆனால் குழந்தை இதற்குள் அப்பால் நகர்ந்துவிட்டது. அதிவேகமாய் வந்த ...ழும் மோடார்வண்டி அவர் மீதேறிச் சென்...து. உடனே அவர் வைத்திய சாலைக்கு அனுப்பப்பட்டுச் சிகிச்சை செய்யப்பட்டும் சிறிது நேரத்திற்குள் உயிர் நீத்தாராம். ஸ்ரீமான் நாயகருடைய வீரமும் தியாக உணர்வும் போற்றற் குரியனவாகும். வீரசுவர்க்கம் என்பது ஒன்று உண்டாயின் அவருடைய ஆத்மா அங்கெய்தி இன்புற்றிருக்குமென்பதில் ஐயம் இல்லை.

பிரான்ஸின் பகைவர்கள்

ரிப்பியர் தலைவரான அப்துல் கரீமின் சகோதரரை ஆங்கிலப்பத்திரிகை நிருபர் ஒருவர் பேட்டி கண்டு பேசிய விவரம் மற்றொரு பத்தியில் காணலாம். அதினின்றும் அச்சாதியார் விடுதலை பெறுவதில் எத்தனை உறுதி கொண்டிருக்கிறார்களென்பது நன்கு தெரிய வருகிறது. ஸிரியாவிலுள்ள தரூஸியரும் இத்தகைய உறுதி கொண்டிருக்கின்றனராம். அவர்களுடைய தலைவரான சுல்தான் அட்ராஷ்பாட்சா என்பவரை பர்லின் பத்திரிகை நிருபர் ஒருவர் சில மாதங்களுக்கு முன்பு கண்டு பேசிய விவரம் பிரசுரமாயிருக்கிறது.

"பிரான்சு தருஸியரைத் தாக்கத் துணிந்தால் ஸிரியா முழுவதும் கலகமாகக்கிளம்பும் என்று தாங்கள் பத்திரிகைக்கு எழுதுங்கள்; நாங்கள் கொண்டிருக்கும் உறுதி ஒன்றே—இதுவரையில் நாங்கள் வாழ்ந்து வந்தது போல் வாழ்வதைக் காட்டிலும் போர் முனையில் உயிர் துறப்பது சாலச் சிறந்தது."

என்று தருஸியரின் சுல்தான் கூறினாராம். பின்னால் நடந்துள்ள நிகழ்ச்சிகள் இதற்குப் பொருத்தமாகவே யிருக்கின்றன. டமாஸ்கஸ் கொடுமைகளுக்குப் பின்னர், தருஸியர் அடங்கிவிட்டதாக நினைப்பதற் கிடமில்லை. அந்நகரத்தைச் சூழ்ந்து தருஸியர் இருப்பதாகவும், துருப்புகளின் துணையின்றி நகருக்கு உள்ளேயோ, வெளியிலோ செல்வதற்கில்லையென்றும் தெரியவருகின்றன. மொரோக்கோவிலும், ஸிரியாவிலும் பிரஞ்சுக்காரர் கைக்கொண்ட முறைகள் உலகெங்கும் அவர்களுக்கு அபகீர்த்தியை விளைத்திருக்கின்றனவென்பதற்கு ஐயமில்லை. அவர்களுக்கு நன்மதி அளிக்குமாறு இறைவனை வேண்டுகிறோம்.

ஸ்ரீமான் ஆண்ட்ரூஸ்

பிரிட்டிஷ் ஆட்சியின் பயனாக இந்நாட்டுக்குப் பல நன்மைகள் விளைந்திருப்பதாகவும், அவற்றின்பொருட்டுக் கிரேட்பிரிட்டனுக்கு நாம் நன்றி செலுத்தக் கடமைப் பட்டிருக்கிறோம் என்றும் அடிக்கடி சொல்லப்படுகின்றன. ஆயினும் பள்ளிப் பிள்ளைகள்கூட இக்காலத்தில் அக்கூற்றுக்களை அப்படியே ஏற்றுக்கொள்ள இசைவதில்லை. உண்மையில் நாம் கிரேட் பிரிட்டனுக்கு நன்றி பாராட்ட இடமுண்டாயின், அது ஸ்ரீமான் ஆண்ட்ரூஸைப் போன்றுரை நமக்களித்ததற்காகவே யாகும். இப்பெரியாருக்கு இந்தியர் எத்தனை தூரம் கடமைப் பட்டுள்ளார்கள் என்பது நம்மால் விவரிக்கத் தரமன்று. இன்று அஸ்லாமில் அபினியின் கொடுமையைப் பற்றி விசாரணை செய்கிறார். மறுநாள் பம்பாய்த் தொழிலாளரின் நிலைமைக்கிரங்கி வேண்டுவன செய்கிறார். உடனே ஒரிஸாவில் பஞ்சத்திலடிபட்டுப் பரிதவிக்கும் ஏழைகளின் உதவிக்குச்செல்கிறார். இடையில் எத்தனையோ கட்டுரை வரைகிறார். கர்மவீரர் எனில் இவரையே சொல்ல வேண்டும். சென்ற வாரத்தில் இவர் தென்னாப்பிரிக்காவிலுள்ள நமது சகோதரர்களுக்குத் துணை செய்யும் பொருட்டுக் கப்பலேறிச் சென்றார். இப்படிப்பட்ட ஏழைபங்காளர் ஒருவரைஅளித்ததற்காக நாம் பிரிட்டிஷாருக்கு நன்றி பாராட்டவேண்டுமாயினும், அவர்கள் மனப்பூர்வமாக அவரை நமக்கு அனுப்பிவைக்கவில்லை யென்பதில் ஐயமில்லை. இன்றேல், இத்தகைய உத்தமரைப்பின்தொடர்ந்து செல்ல நமது அதிகார வர்க்கத்தார் சி. ஐ. டி. புலிகளை ஏன் அனுப்பிவைக்கவேண்டும்? ஒரிஸாவில் பஞ்சநிலைமையைப்பற்றி விசாரிக்கச் சென்றிருந்தபோது தம்மைப் பின்தொடர்ந்து இரண்டு சி. ஐ. டிக்காரர்கள் வந்ததாக ஸ்ரீமான் ஆண்ட்ரூஸ் தென்னாப்பிரிக்காவுக்குப் புறப்படுவதற்கு முன் தெரிவித்தார். அங்கு, அவர் பஞ்சத்திலடிபட்ட ஏழைகளை வைத்துக்கொண்டு பிரிட்டிஷ் ஆட்சியைக் கவிழ்க்கச் சதியாலோசனை ஏதோ செய்யப்போவதாக ஒரிஸா அதிகாரிகள் கருதினர் போலும்!

ஸ்ரீமதி ஸ்லேட்

சத்தியாகிரஹ ஆசிரமத்தில் வந்து தங்கியிருக்கும் ஸ்ரீமதி மாடிலின் ஸ்லேட் என்னு மாதரசியைக்கண்டு பேச "ஹிந்து" பத்திரிகையின் நிருபர் சென்றிருந்தாராம். தாம் செய்ய உத்தேசித்திருக்கும் வேலைகளைப்பற்றி அவர் எதுவும் கூறமறுத்து விட்டார். ஆனால் ஆசிரமத்தில் அவருடைய வாழ்க்கை எவ்வாறிருக்கிறதென்று கேட்டதற்கு மட்டும் பின்வருமாறு பதிலளித்தார்:—

"ஆசிரம வாழ்க்கை எனக்கு முற்றிலும் பிடித்திருக்கிறது. தற்போது நூல்நூற்கக் கற்றுக் கொண்டுவருகிறேன். ஊழியஞ்செய்தல்தான் எனதுவாழ்க்கை இலட்சியம். நூல்நூற்கக் கற்றுக்கொள்ளுதல் எனக்குக் காலையிலிருந்து மாலைவரை வேலைதருகின்றது. எனக்குவேறொன்றும் வேண்டுவதில்லை. எனவே, இங்கு உண்மையிலேயே வாழ்க்கை இன்பமயமாயிருக்கிறது."

ஊழியஞ் செய்தலையே தங்கள் வாழ்க்கை இலட்சியமாகக்கொண்ட பெண்மணிகள் பலர் இந்நாட்டில் தோன்றவேண்டு மென்பது எமது விருப்பம்.

மகாராஷ்டிரத் தலைவர்கள்

நமது பரதகண்டத்துள்ள சிறந்த நாடுகளுள் மகாராஷ்டிரமும் ஒன்று. இந்தியாவிற்குப் புத்துயிரளித்த பாலகங்காதர திலகர் பெருமான் இந்நாளில் அங்கே தோன்றி அந்நாட்டைச் சிறப்புறச் செய்தார். இப்பொழுது அங்குள்ள ஸ்ரீமான்கள் கேல்கார் ஜெயக்கர் முதலியோர் திலகர் பெருமான் பெயரால் அரசியல் வாணிபஞ் செய்ய முற்பட்டிருக்கிறார். மஹாராஷ்டிரத்தில் பிறந்த ஓர் உரிமையால் இவ்விருவரும் திலகராவரோ? இவ்விருவரும் ஒத்துழையாமை தோன்றிய நாள் முதல் அதை அலைத்துக்கொண்டே வருவதை ஓர் அறத் தொண்டாகக் கொண்டிருக்கிறார். காந்தியடிகளையும் அவர் முறைகளையும் இப்பெரியோர்கள் தூற்றிக் குறைகூறிய மொழிகளுக்களவில்லை. அவ்வியக்கம் ஒடுங்கியுள்ள இதுபோழ்து சுயராஜ்யக் கட்சியையும் குலைக்கத் தலைப்பட்டிருக்கின்றனர். ஸ்ரீமான் கேல்கார் கூட்டத்தார்க்கு ஒத்துழைப்புள மிருப்பின் நேர்மையாக ஒத்துழைக்கப்புகலாம். கான்பூர் காங்கரஸ் மஹாராஷ்டிரத் தலைவர்களுக்கு நல்ல பாடம் கற்பிக்குமென எதிர்பார்க்கிறோம்.

நக-வது தமிழர் மகாநாடு

வரவேற்புக் கூட்டத்தலைவர்

ஸ்ரீமான் ஸி. என். முத்துரங்க முதலியார்

உபந்நியாசம்

தமிழ் நாட்டுப் பிரதிநிதிகளே,
சகோதர சகோதரிகளே!

உங்களை இங்கு வரவேற்கும் பாக்கியம் செங்கற்பட்டு ஜில்லா வாசிகளாகிய எங்களுக்குக் கிடைத்தது எங்களுடைய அதிர்ஷ்டமே. பொருளிலும் ஊக்கத்திலும் நாங்கள் உயர்ந்தவர்களல்லவானாலும், காங்கிரஸ் மகாசபை யிடமுள்ள அபிமானத்திலும், உங்களைப் போன்ற தேசாபிமானிகளை வரவேற்க வேண்டுமென்கிற ஆர்வத்திலும் நாங்கள் ஒருவருக்கும் குறைந்தவர்களல்ல. ஆகையால், உங்களுக்கு இங்கு ஏதாவது சௌகரியக் குறைவு ஏற்பட்டாலும், அது எங்கள் சக்திக்குறைவால்ஏற்பட்டதாய்ப் பாவித்து எங்களை மன்னிக்கும்படியாய் நான் உங்களைக் கேட்டுக்கொள்ளுகிறேன்.

இந்தக்காஞ்சிபுரம்பண்டைக்காலத்திலிருந்து முக்கிய இந்தஸ்தலங்களில் ஒன்றாயும், தொண்டை நாட்டுக்குத் தலை நகரமாகவும், சோழ ராஜ்யத்தில் ஒரு முக்கிய நகரமாகவும் இருந்தது உங்கள் யாவருக்கும் தெரியும். ஆனால் இந்நகரத்தின் பழைய சிறப்புகளைப் பற்றி நாம் பேசுவதில் பயனில்லை. தற்கால நிலைமையையே கவனிக்கவேண்டும். நாமோ நம்முடைய சுதந்தரத்தை இழந்து ஆங்கில அரசாங்கத்தின் கீழ் அடிமைகளாயிருக்கிறோம். அத்துடன் நமக்குள் ஒற்றுமையின்றி சில்லரை வித்தியாசங்களைப் பாராட்டிக்கொண்டும் வருகிறோம். இந்நகரமே அநேக வீண் விதண்டாவாதங்களுக்கும் சண்டைகளுக்கும் பிறப்பிடமாக இருந்து வருகிறது. இருந்தும் இந்தப் புண்ணியஸ்தலத்தில் நமக்குள்ள பேதங்களை அறவே ஒழித்து சகோதர பாவத்துடனும் ஒற்றுமையுடனும் நம்முடைய சுதந்தரத்தைப் பெற வழிதேடுவோ மென்கிற காரணத்தாலே தான் நாங்கள் இங்குச் சபைகூட்டி உங்களை வரவேற்கிறோம். இதை நிறைவேற்ற எல்லாம் வல்ல இறைவன் அருள்புரிவாராக!

மகாத்மாவின் திட்டம்

சகோதர சகோதரிகளே! நான் இராஜீய ஞானம் பெற்றவனல்லனாயினும், வரவேற்பு சபைத்தலைவன் என்ற ஹோதாவில் நம்முடைய ... தேசத்தின் தற்கால நிலைமையைப் பற்றிச் சில வார்த்தைகள் சொல்ல விரும்புகிறேன். நம்முடைய நிலைமையைத் தீரயோசித்து நம்முடைய முன்னேற்றத்திற்கு இடையூறாயிருப்பவைகளை ஒழித்து நாம் சீக்கிரத்தில் நம்முடைய சுதந்தரத்தையடையும் வழியை இந்த இரண்டு நாள்களில் தீர்மானிப்பீர்களென்று நான் நம்புகிறேன்.

நமதுமுன்னோர்கள் செய்த புண்ணியத்தால் நாம் உலக சிரேஷ்டராகிய மகாத்மா காந்தியடிகளைத் தலைவராகப் பெற்றோம், நம்முடைய சக்திக் குறைவாலும் ஒற்றுமையின்மையாலும் அப்பெரியாரின் தலைமையால் ஏற்படக் கூடிய பலனை நாம் அடையாமலிருப்பது நம்முடைய துர்ப்பாக்கியமே. நம்முடைய தலைவரால் ஆரம்பிக்கப்பட்ட ஒத்துழையாமை இயக்கத்தைப்பற்றியும் அதன் சரிதத்தைப் பற்றியும் தேசிய ஞானம் பெற்ற தேசாபிமானிகளாகிய உங்களுக்கு நான் விரித்துரைக்க வேண்டியதில்லை. ஆனால் அதைப்பற்றி சில வார்த்தைகள் மாத்திரம் சொல்ல விரும்புகிறேன். மகாத்மா ஒத்துழையாமை இயக்கம் ஆரம்பித்தபோது கதர் அபிவிருத்தி, மதுவிலக்கு, தீண்டாமை ஒழித்தல், ஒற்றுமை முதலிய திட்டங்களை நாம் சுயராஜ்யம் அடைவதற்கு அடிப்படையாக நிறைவேற்ற வேண்டுமென்று ஆக்ஞாபித்தார். இத்திட்டங்களின் அவசியத்தைப்பற்றி நமது தலைவர் நமக்கு பன்முறை வற்புறுத்தி யிருக்கிறார். சகோதர சகோதரிகளே! இந்த முக்கிய திட்டங்களில் நாம் போதிய கவனத்தைச் செலுத்தி வேலை செய்யவில்லையென்று நான் வருந்துகிறேன். இந்த விஷயத்தில் ஒருவரையொருவர் குறை கூறுவதில் பயனில்லை. சுயராஜ்யக் கட்சியார் சட்ட சபைகளில் கவனத்தைச் செலுத்துவதாலும், காங்கிரஸ் அவர்களை எதிர்க்காததாலும் இவ்வேலைகள் நடக்கவில்லை யென்று சிலர் கூறுவதை நான் கேட்டிருக்கிறேன். சுயராஜ்யக் கட்சியார் சட்டசபைகளில் தங்கள் கவனத்தைச் செலுத்தினால், நிர்மாண திட்டத்தில் முழு நம்பிக்கையுள்ள மாறுதல் வேண்டாக் கட்சியார் அதில் தங்கள் முழுமனதைச் செலுத்தி ஏன் வேலை செய்யக் கூடாது? ஆனால் சுயராஜ்யக் கட்சியாரும் நிர்மாண திட்டத்தில் நம்பிக்கை யுடையவர்களென்றே நான் நம்புகிறேன். சட்ட சபைப் பிரசாரத்தில் நம்பிக்கை யில்லாதவர்கள் சுயராஜ்யக் கட்சியாரிடம் தங்கள் கவனத்தை அனாவசியமாய் செலுத்தாமல், நிர்மாணதிட்டத்தை நிறைவேற்ற முயன்றிருந்தால் அது அநேகமாய் நிறைவேறியே இருக்கும். நாமுப

மகாத்மாவின் கட்டளைப் படி நடந்தவர்களாயிருப்போம்.

நம்தேசத்தில், வெகு சிலர் நீங்கலாக, கதர் அபிவிருத்தியின் அத்யாவசியத்தைப்பற்றி அபிப்பிராய பேதமுடையவர்கள் ஒருவருமில்லை. ஆனால் இந்த விஷயத்தில் நமக்கு முன்னிருந்த ஊக்கம் கூட இப்பொழுது இல்லை. ஜனங்கள் கதரை விசுவாசத்துடன் வேண்டும்போது, கதர் கிடைப்பது அரிதாயிருக்கிறது. இதற்குக் காரணம் நம் தலைவர்களுக்குக் கதர் விஷயத்தில் நம்பிக்கைக்குறைவல்ல. ஆனால் அவர்களுக்குள்ளிருக்கும் மனஸ்தாபங்களும் அவைகளில் அவர்கள் வீணாய் கவனம் செலுத்துவதுமே இதற்கு முக்கிய காரணம். நம் தலைவர்களைத் தங்களுக்குள்ளிருக்கும் சச்சரவுகளை ஒழித்துக் காங்கிரஸ் வேலையைக் கவனிக்கும்படி நான் தாழ்மையுடன் வேண்டிக் கொள்ளுவதுடன், பொது ஜனங்களையும் சதா கதரணியுமாறு கேட்டுக் கொள்ளுகிறேன்.

மதுவிலக்கு விஷயத்திலும் நாம்போதுமான பிரசார வேலை செய்யாமலிருப்பது வருந்தத்தக்கது. ஜனங்களுக்குக் குடியால் நேரும் தீமைகளை எடுத்துக்காட்டி அவர்களாகவே குடியை விட்டு விடும்படி செய்வதே சிறந்த வழியாகும். இவ்விஷயத்தில் காங்கிரஸ் ஸ்தல ஸ்தாபனங்களைக் கொண்டும் மதுவிலக்கு சபையாருடன் கலந்தும் ஒவ்வொரு ஜில்லாவிலும் தீவிரமாய்ப் பிரசார வேலை செய்யவேண்டுமென்று நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

தீண்டாமை யொழிக்கும் விஷயத்தில் வைக்கத்தில் சத்யாக்கிரகிகள் செய்த வேலை போற்றத் தக்கதே. ஆனால் நாம் ஒவ்வொரு ஜில்லாவிலும் போதுமான பிரசார வேலை செய்யவில்லை யென்று வருந்துகிறேன். நம் ஆதிதிராவிடர்களுடைய அபிவிருத்திக்குரிய வழிகளைத் தேடவேண்டும். அத்துடன் பிராமணர், பிராமணரல்லாதாராகிய உயர் வகுப்பினரிடம் தீண்டாமை யென்னும் கொடிய நோயை ஒழிக்க வேண்டிய அத்யாவசியத்தைப் பற்றிப் பிரசாரம் செய்ய வேண்டும். சட்ட சபைக்குப் போகிறவர்கள் சட்ட சபைகள் மூலமாய்த் தீண்டாமையை விலக்க முயன்றால், வெளியி லிருப்பவர்கள் ... செய்து ஆதிதிராவிடர்களை ... நாட்டில் ... யுடைய குறைகளையும் சீர்திருத்... செய்யலாம். இவ்வி நிவர்த்தி செய்ய முய... கட்சியாரை சதா தம் செய்யாமல் சுயராஜ்யக் ... தீண்டாமை எப்படி ஒழிக்க கொண்டிருந்தால் தீண்... படி ஒழியும்?

சுயராஜ்யக் கட்சி

சகோதர சகோதரிகளே! காலஞ்சென்ற தேசபந்து சித்தரஞ்சன தாஸரால் ஸ்தாபிக்கப்பட்ட சுயராஜ்யக் கட்சியைப்பற்றியும் அதன் சென்ற நான்கு வருஷத்திய சரித்திரத்தைப் பற்றியும் நான் இங்கு சொல்லவேண்டிய அவசியமில்லை. மகாத்மா காந்தி சிறையிலிருந்து வந்தபிறகு சுயராஜ்யக் கட்சிக்கும் காங்கிரஸ் மகாசபைக்குமிருந்த மனஸ்தாபத்தை நீக்கி, சுயராஜ்யக் கட்சியாரைத் தங்களுக்கு நம்பிக்கையுள்ள வழியில் வேலை செய்யும்படி விட்டுவிட்டார். இதற்காகச் சில சகோதரர்கள் மகாத்மாவையும் கண்டிருக்கிறார்கள். இவர்கள் சுயராஜ்யக் கட்சித் தலைவர்களிடம் தங்களுக்குள்ள அருவருப்பினால் மாத்திரம் இவ்வாறு கண்டிக்கிறார்களென்று எண்ணுகிறேன். நான் முன்பு சொல்லியபடி சட்டசபைகளைக் கைப்பற்றுவதில் நம்பிக்கையுடையவர்களிடம் அனாவசியமாய்த் தங்கள் கவனத்தைச் செலுத்தாமல், மகாத்மா காட்டியுள்ள மற்ற வழிகளில் இவர்கள் ஏன் வேலை செய்யக்கூடாது என்று கேட்கிறேன்.

தவிர, சுயராஜ்யக்கட்சியார் அதிகார வர்க்கத்தினருக்கு, கூடுமான வரையில், சிரமம் கொடுத்துக்கொண்டே வருகிறார்கள். வங்காள ராஜதானியிலும், மத்திய மாகாணத்திலும் சுயராஜ்யக்கட்சியார் சட்டசபை மூலமாய்ச்செய்த வேலையைப் போற்றாதவர்களுண்டா? மற்ற சட்டசபைகளுக்கும் அவர்கள் பெரும்பான்மைக் கட்சியாராய்ச் சென்றிருந்தால் அரசாங்கத்தாருடைய மனப்பான்மை மாறியேயிருக்... சுயராஜ்யக்கட்சித் தலைவர் தேசப... இறந்துபோய் விட்டார் என்ற ச... பர்க்கென் ஹெட் பிரபு கத்தி ... களங்கமை வேன்றதாய்ப்பேசி... நான் உங்களுக்கு ஞாபக... சட்டசபை மூலமாயும் ச... லும்தீவிரப்பிரசாரஞ்செ... சட்டமறுப்புக்குத் ... இதைவெ... சுயராஜ்... சபைக்கு... டட்டு, ...டினும்

தீர்மானத்தை அகில இந்திய காங்கிரஸ் கமிட்டியில் நிறைவேற்றி வைத்தார்.

தேசபந்து தாஸருடைய மரணத்துக்குப் பிறகும் சுயராஜ்யக் கட்சி சரியாகவே நடந்து வருகிறது என்று சொல்வேன். மத்திய மாகாணத்தில் தாம்பே உத்தியோகம் பெற்றதுபோல் ஒருவரிருவர் கட்சியின் கொள்கைக்கு மாறாய் நடந்திருக்கலாம். ஆனால் மகாத்மா சொல்லுகிறபடி எல்லாக் கட்சிகளிலும் இவ்விதம் நடந்து கொள்ளும் சிலர் இருக்கிறார்கள். அதைக் கொண்டு கட்சியையே கண்டிப்பதற்குக் கொஞ்சமும் நியாயமில்லை. இவ்விதம் சுயராஜ்யக் கட்சியைப் பொது வாய்க் கண்டியாமல், வேண்டிய சீர்திருத்தங்களை எடுத்துச் சொன்னால் நன்றாயிருக்கும்.

உத்தியோக பகிஷ்காரம்

சுயராஜ்யக் கட்சியாருக்கும் நான் சிலவார்த்தைகள் சொல்ல விரும்புகிறேன். அவர்கள் காங்கிரஸ் சார்பாக சட்ட சபைக்குச் செல்ல அனுமதி பெற்றிருக்கிறார்கள். அவர்கள் தங்கள் கட்சியின் கொள்கைகளிலிருந்து கொஞ்சமும் தவறாது, அரசாங்கத்தாருடன் கூடிய வரையில் ஒத்துழையாதிருப்பதையே முக்கிய நோக்கமாகக் கொண்டு நடப்பார்களென்று நான் நிச்சயமாய் நம்புகிறேன். தெரிந் தெடுக்கப்பட்ட உத்தியோகங்களில் சம்பளமுள்ள உத்தியோகங்களையும், கௌரவ உத்தியோகங்களில் அரசாங்கத்தாரால் நியமிக்கப்பட்ட உத்தியோகங்களையும் கூட அவர்கள் பகிஷ்கரிக்க வேண்டு மென்பது என்னுடைய அபிப்பிராயம். இச்சந்தர்ப்பத்தில், உத்தியோகம் ஒப்புக் கொள்ளுவதில்லை யென்று சுயராஜ்யக் கட்சியார் நாகபுரியில் மறுபடியும் தீர்மானித்ததைப் பற்றிச் சந்தோஷப்படுகிறேன். அவர்களில் ஒவ்வொருவரையும் சதா கதராடையணிவதுடன், கதரபிவிருத்திக்குத் தம்மாலியன்ற உதவி புரியுமாறு நான் தாழ்மையுடன் வேண்டிக் கொள்ளுகிறேன்.

நம் சகோதரர்களில் சிலர் சுயராஜ்யக் கட்சியார் மந்திரிப் பதவியை ஒப்புக்கொள்ள வேண்டுமென்று சொல்லி வருகிறார்கள். இரட்டையாட்சி இருக்கிறவரையில், சுயராஜ்யக் கட்சியார் மந்திரி ஸ்தானம் பெற்றால், தங்கள் கொள்கைக்கு விரோதமாய் அரசாங்கத்தாருடன் ஒத்துழைக்க வேண்டியதுதான். வங்காளத்திலும் மத்திய மாகாணத்திலும், சுயராஜ்யக் கட்சியார் மந்திரிப் பதவி பெற்றிருந்தால், இப்பொழுது அவர்கள் செய்த வேலை செய்திருக்க முடியாதென்று நான் நிச்சயமாய்ச் சொல்லுவேன். ஆகையால், சுயராஜ்யக் கட்சியார் உத்தியோகம் பெறுவதில்லை யென்கிற தீர்மானத்தினின்று கொஞ்சமும் மாறக் கூடாதென்று நான் அபி[illegible]ராய[illegible]ப்படுகிறேன்.

நம்முடைய மாகாண[illegible] சட்டசபையில் சுயராஜ்யக் கட்சியை பல[illegible]ப்படுத்துவது மிக அவசியம். சட்டசபை[illegible] மூலமாய் வேலை செய்ய [illegible] யுள்ள தேசபக்தர்கள் யாவரும் தமிழ்நாடு சுயராஜ்யக் கட்சியில் சேர்ந்து அதைப் பலப்படுத்தி, வருகிற தேர்தலில் தமிழ் நாட்டிலுள்ள ஸ்தானங்களையும் கைப்பற்று வார்களென்று நம்புகிறேன். சில்லரை அபிப்பிராய பேதங்களிருந்தால் நாம் கட்சியில் சேர்ந்து நம்முடைய அபிப்பிராயப்படி மாற்றிக் கொள்ள பிரயத்தனப் படலாம். சுயராஜ்யக்கட்சியில் சேர விருப்பமில்லாதவர்கள் அவர்கள் செய்யும் வேலைக்கு இடையூறு ஒன்றும் உண்டாக்காமலாவதிருக்க வேண்டுமென்று நான் தெரிவித்துக் கொள்ளுகிறேன். காங்கிரஸ் சபையைச் சேர்ந்தவர்களில் சட்டசபைக்குப் போகிறவர்கள் ஒரே கட்சியினராயிருக்க வேண்டு மேயல்லாது காங்கிரசுக்குள்ளேயே இருகட்சிகளிருந்தால், சட்டசபைகளைக் கைக்கொள்ளுவதில் தீங்கு நேருமேயல்லாது நன்மையொன்றும் உண்டாகாது.

ஸ்தல ஸ்தாபனங்கள்

சட்டசபைகளைக் கைப்பற்றுவதுடன் தாலூகா போர்டு, முனிசிபாலிடி முதலிய ஸ்தலஸ்தாபனங்களையும் காங்கிரஸ் கைப்பற்றினால், காங்கிரஸ் நிர்மாண திட்டங்களை நிறைவேற்றுவதற்கு நமக்கு அனுகூலமாயிருக்கும். "நம்முடைய ஸ்தலஸ்தாபனங்கள், அதாவது முனிசிபாலிடி முதலிய சபைகள் நம்முடைய பேடித் தன்மைக்கு அறிகுறியாகவோ இருக்க வேண்டும்? அதிகாரவர்க்கத்தின் அடிமைகளாயும் தேசத்துரோகிகளாயும், காங்கிரசுக்கு விரோதிகளாயும், சுய நலப்புலிகளாயுமிருக்கும் அங்கத்தினர்கள் ஒழிய [illegible]டும். நம்முடைய பலத்தைக் குறைப் [illegible]கார வர்க்கம் மிகுந்த பாடு படு[illegible] இதை எவ்வளவு காலம் பொறுத் [illegible] இனியாவது ஒற்றுமைப்பட்டு [illegible]களையும்தாலூகாஜில்லாபோர்டு [illegible]லாபத்வாதிகள்கைப்பற்றி [illegible] நம் தேசத்தின் முன் [illegible]ட வேண்டும்" என்று [illegible]ஸரின் வார்த்தை [illegible] றுகிறேன். அவர்களின் [illegible]பாலிடியைக் [illegible] வருவது [illegible]ழ்நாடெங்

கும் ஸ்தலஸ்தாபனங்களைக் காங்கிரஸ் கைப்பற்றத் தகுந்த ஏற்பாடுசெய்யவேண்டுமென்று நான் கேட்டுக்கொள்ளுகிறேன்.

சுயராஜ்யக்கட்சியாருக்கு சட்டசபைக்குப் போக காங்கிரஸ் அனுமதிகொடுத்ததால் ஒத்துழையாமை இயக்கம் போய்விட்ட தென்று சொல்ல முடியாது. சுயராஜ்யக் கட்சியார் உத்தியோகம் பெறுவதில்லை யென்று உறுதி கொண்டிருக்கிறார்கள். அவர்கள் சட்டசபைக்குப் போவது அரசாங்கத்தாருடன் ஒத்துழைப்பதற்கல்ல. ஒத்துழைப்பதால் ஒன்றும் நடவாதென்று எல்லோருக்கும் நிச்சயமாய் ஏற்பட்டிருக்கிறது. ஆகையால் ஜனப் யாகுப் ஹூசேன் சாயபு அவர்கள் காங்கிரஸ் பழையபடி அரசாங்கத்தாருடன் ஒத்துழைக்க வேண்டு மென்பதை நீங்கள் ஒருவரும் ஒப்புக் கொள்ள மாட்டீர்களென்று நம்புகிறேன்.

ஜஸ்டிஸ் கட்சி

தமிழ் நாட்டுப் பிரதி நிதிகளே! நம்முடைய மாகாண விஷயமாய் சில வார்த்தைகள் சொல்ல விரும்புகிறேன். இம்மாகாணத்தில் காங்கிரஸ் வேலைக்கும் மற்றப் பொது வேலைக்கும் இடையூறாயிருப்பது ஜஸ்டிஸ் கட்சியே. இது உண்மையில் ஒரு கட்சியல்ல வென்று நான் சொல்வேன். பொது ஜனங்களிடத்தில் இக்கட்சியாருக்குள்ள கொள்கைகளோ அபிப்பிராயங்களோ கிடையாது. தாங்கள் தமயோக்கியதைக்கு மேலான உத்தியோகம் முதலிய செல்வாக்குப் பெற்று முன்னேற்றம் அடைவதற்காக அரசாங்கத்தாருடன் ஒத்துழைத்துப் பொதுஜன நன்மைக்கு விரோதமாக நடந்துவருகிற சிலரே 'ஜஸ்டிஸ் கட்சி'யாவர். இவர் பிராமணரைச் சதாதூஷிக்கிறபோதிலும் பிராமணரல்லாதாருக்கு ஒருவித நன்மையும் செய்வதில்லை. தஞ்சை ஜில்லாவில் நிலவரி உயர்த்தியது நியாயமென்று இவர்கள் சட்டசபையில் ஓட்டுசெய்ததை நீங்கள் மறந்து விட்டீர்களா? தேசத்திற்காகச் சிறைக்குச்சென்ற தேசாபிமானிகளை கொலை, களவு முதலிய குற்றங்கள் செய்தவர்களைப் போல நடத்தவேண்டுமென்று இவர்கள் சட்டசபையில் சொன்னது உங்களுக்குத் தெரியும். தங்கள் கட்சி பலத்தினால் தேவஸ்தான மசோதாவை வெகு அவசரத்துடன் சட்ட சபையில் நிறைவேற்றி வைத்த இவர்கள், ஆதிதிராவிடர்கள் கோவில்களுக்குச் செல்லலாமென்று ஒரு சட்டம் வருகிற தேர்தலுக்குள் நிறைவேற்றி வைப்பார்களாவென்று கேட்கிறேன்.

மேலும், ஒரு ஜாதியாரை அடியோடு சேர்க்காத இவர்கள் கட்சியை தேசீ[illegible]யகட்சியென்று எப்படிச் சொல்லுதல் கூடு[illegible]? பிராமணரல்லாதாரைக்காட்டிலும் பிராமணர் வெகு சிலரே. எண்ணிக்கையிலும் பொருளிலும் பிராமணரை விடப் பிராமணரல்லாதாரே உயர்ந்தவர்கள். இருந்தும், பிராமணருக்காக பயந்து தனிக்கட்சி யொன்று பிராமணரல்லாதார் ஏற்படுத்திக் கொள்ளுவதென்றால் அதைவிட பிராமணரல்லாதாருக்கு வேறு பழிச் சொல் வேண்டுமா! இக்கட்சியார் பிராமணரைத் தூஷிப்பதுடன் இவர்களைச் சேராத பிராமணரல்லாதாரையும் தூஷிப்பதை நீங்கள் காணலாம். இவர்களுடைய தூஷணை மனிதரோடு நில்லாது, பிராமணருக்கும் பிராமணரல்லாதாருக்கும் பொதுவான சமஸ்கிருத பாஷைக்கும் எட்டியிருப்பது மிகவும் விசனிக்கத்தக்கது. சகோதர சகோதரிகளே! இவர்கள் உண்மையில் அரசாங்கக் கட்சியாரே. பிராமணரல்லாதாரில் பெரும்பான்மையோர் இவர்களுடைய சூழ்ச்சியையும் அற்ப நோக்கத்தையும் அறிந்து கொண்டிருக்கிறார்களென்று நான் சந்தோஷிக்கிறேன். பிராமணரல்லாதாரில் இக்கட்சியாரைப்போன்ற சுயநலப் புலிகள் இருக்குமளவும் நாம் பிராமணரை மாத்திரம் எப்படிக் குறை கூறலாம்? யோக்கியதையும் யோக்கியதைத் தவறும் ஒவ்வொரு வகுப்பிலுமிருக்கின்றன. ஆகையால், ஜாதிமத வகுப்பு வித்தியாசம் பாராட்டாது, நம்முடைய பிறப்புரிமையாகிய சுயராஜ்யத்திற்காக உழைக்கும் காங்கிரஸ் மகாசபையில் நமது சகோதர சகோதரிகள் அதிகமாய்ச் சேர்ந்து அதைப்பலப்படுத்த வேண்டுமென்று நான் பிரார்த்திக்கிறேன்.

காங்கிரஸில் வேற்றுமை

மேற்சொன்ன பிராமணத்வேஷம் காங்கிரஸ் சபையைச் சேர்ந்த சிலரிடமும் இருப்பதைக் காண நான் மிகவும் வருந்துகிறேன். இது காரணமாகவே தமிழ் நாட்டில் கொஞ்ச காலமாகக் காங்கிரஸ்வேலையொன்றும் நடவாமலிருக்கிறது. இது காரணமாகவே நம் தேசத்திற்காகப் பெருந்தியாகம் செய்த சக்கிரவர்த்தி ராஜகோபாலாசாரியாரைப் போன்ற மகான்கள் காங்கிரஸினின்று ஒதுங்கி நிற்கிறார்கள். இது காரணமாகவே காங்கிரஸ் இயக்கத்தில் ஈடுபட்டு உழைத்து வந்த பிராமணரல்லாதாரில் சிலர் அரசாங்கக் கட்சியாகிய ஜஸ்டிஸ் கட்சியிடம் அனுதாபங்காட்டி வருகிறார்கள். ஆகையால் இதைப்பற்றி நீங்கள் தீர யோசிக்க வேண்டும்.

முதலில், ஆசார சீ[illegible]ந்த விஷயமாய் நமக்குள்ள பேதங்களை [illegible]சிய விஷயங்களில் கொண்டுவரக் கூடாது. மேலும் இவ்விஷயத்தில் பிராமணரை மாத்திரம் தூஷிப்பதில் கொஞ்சமும் நியாயமில்லை. சீர் திருத்தம் வேண்டுபவர், பிராமணர் பிராமணரல்லாதார் எல்லா வகுப்பிலும் இருக்கிறார்கள். பிராமணரைவிடப் பிராமணரல்லாதாரே வகுப்பு வித்தியாசம் அதிகமாய்ப் பாராட்டுகிறார்கள். பிராமணரல்லாதாருக் குள்ளேயே எவ்வளவு வித்தியாசங்களிருக்கின்றன வென்பது உங்களுக்கு நன்றாய்த் தெரியும். ஆகையால் இதில் பிராமணர், பிராமண ரல்லாதார் எனப் பிரிவு ஏற்படக் கொஞ்சமும் இடமில்லை. மேலும் நாளுக்கு நாள் ஜாதி வித்தியாசங்கள் மறைந்து கொண்டிருக்கும் இந்நாளில் அதைத் துரிதப்படுத்தப் பிரயத்தனப்பட்டால், அதனால் சீர்திருத்தம் நிச்சயமாய்ப் பிற்போக்கடையுமென்று நான் உண்மைச் சீர்திருத்தக்காரருக்குத் தெரிவித்துக் கொள்ளுகிறேன்.

நமது பிராமணரல்லாத காங்கிரஸ் சகோதரர்களில் சிலர், தங்களுக்குப் பிராமண காங்கிரஸ் சகோதரர்களிடமுள்ள பொறாமையாலோ அல்லது அருவருப்பினாலோ, பிராமணத்வேஷத்தை காங்கிரஸ் சபைக்குள் வற்படுத்தி வருகிறார்கள். இது இவர்கள் கொள்கைக்கும் தேசாபிமானத்திற்கும் முற்றிலும் மாறாக இருக்கிறது என்று சொல்லுவேன். நான்முன்புசொன்னபடி ஜாதி வித்தியாசத்தை அறவே ஒழித்துச் சுயநலமின்றித் தேசத்திற்காகத் தியாகம் செய்யும் பிராமண தேசாபிமானிகள் அனேகர் இல்லையா! அவர்களிருக்குமட்டும் நாம் பிராமணரைப் பொதுவாய்த் தூஷிப்பது நியாயமா? தேச முன்னேற்றத்தை மற்றெல்லாவற்றிலும் பெரிதாக நினைத்துப் பிராமணரிடமுள்ள துவேஷத்தைவிட்டுப் பழையபடி எல்லாத் தேசாபிமானிகளுடனும் கலந்து காங்கிரஸ் வேலை செய்யும்படி என் பிராமணரல்லாத சகோதரர்களையன்றுடிக் கேட்டுக் கொள்ளுகிறேன்.

ஜாதி வித்தியாசம் பாராட்டாத பிராமணர் அனேகர் இருந்த போதிலும், ஜாதி கர்வத்தோடு சுயநலம் பாராட்டும் பிராமணரும், பிராமணரல்லாதாரும் அதை முற்றிலும் விட்டுத் தேசத்திற்காக உழைக்க முன் வரவேண்டுமென்று நான் கேட்டுக்கொள்ளுகிறேன்.

வேண்டுகோள்

சகோதர சகோதரிகளே! நமது துர்ப்பாக்கியத்தால் நமது தலைவர்களில் சிலர் இவ்விதப் பிளவுகள் ஏற்படுத்திய போதிலும், நீங்கள் [illegible] கொஞ்சமேனும் இடங்கொடுக்கக் [illegible] நீங்கள் சுயராஜ்யம் கூடாது. [illegible] அடைய வேண்டுமானால், காங்கிரஸ் சபையில் உங்களுக்கு நம்பிக்கை யிருந்தால், காங்கிரஸ் மேடையில் ஜாதி வித்தியாசத்திற்கு இடங் கொடாமல் காங்கிரஸ் வேலையை நடத்தவேண்டும். நான் மேற்சொன்ன சில தலைவர்களுடைய சூழ்ச்சியால் நீங்கள் மயங்கக் கூடாது. நீங்களே சற்று யோசித்துப் பார்த்தால், எல்லாம் உங்களுக்கு விளங்கும். வறுமையே பூஷணமாய்க்கொண்ட இந்நாட்டில் காங்கிரஸ் வேலை மிக துர்லபமாயிருக்கிறது. மிகுந்த கஷ்டத்துடன் செய்யும் வேலைக்குச் சிலர் சுயநலத்தைக் கொண்டு இடையூறு ஏற்படுத்தினால், அவர்களைக் கண்டித்து அதைத் தடுப்பது உங்கள்கடமையல்லவா? மகாத்மா காந்தியடிகள் அரசாங்கத்தாருடன் போர்புரிய ஆரம்பித்தது உங்களிடம் அவருக்குள்ள நம்பிக்கையாலல்லாது, தலைவர்களிடமுள்ள நம்பிக்கையாலல்ல. ஆகையால், சகோதரர்களே, நீங்கள் சில்லரைக் கலகங்களுக்கு இடங்கொடுத்து மகாத்மாவின் மனதைப் புண் படுத்தாதீர்கள்.

சகோதர சகோதரிகளே! நம் முன்னோர்களிடம் ஒற்றுமையின்மையாலேதான் ஆங்கில அரசாங்கத்தார் அவர்களிடமிருந்து ராஜ்யத்தைக் கைப்பற்றினார்கள். இப்பொழுதும் நம்மிடமுள்ள பேதங்களாலேதான் நம்மை அவர்கள் ஆண்டு வருகிறார்கள். இன்னும் எவ்வளவு காலம் நாம் நமக்குள் சண்டை போட்டுக்கொண்டு அந்நிய நாட்டாருக்கு அடிமைகளாக இருந்து வருவது? நமக்குள்ளிருக்கும் வித்தியாசங்கள் போதாமல், புதிய வித்தியாசங்களை சிலர் உண்டுபண்ணுவது சரியா? எழு புண்ணிய ஸ்தலங்களில் ஒன்றாகிய காஞ்சியில் நாம் இன்று கூடியிருக்கிறோம். தேசிய விஷயத்தில், நாம் சுயராஜ்யம் அடையும் நோக்கத்தில், நமக்குள்ள வித்தியாசங்களை அறவே ஒழித்து, மகம்மதியரோ, கிறிஸ்தவரோ, பிராமணரோ, பிராமணரல்லாதாரோ, ஆதிதிராவிடரோ, எல்லோரும் நம் பாரதமாதாவின் மக்களென்றெண்ணி ஒரே மனதாய், தைரியத்துடனும், உறுதியுடனும், சத்தியத்துடனும் பாடு பட வேண்டுமென்று இன்று பிரதிக்ஞை செய்துக் கொள்ள வேண்டுமென்றும் நான் உங்களைக் கேட்டுக் கொள்ளுகிறேன். நமக்கு வேண்டிய திட புத்தியை எல்லாம் வல்ல இறைவன் கொடுப்பாராக!

நான் மறுபடியும் உங்களை இம்மகா நாட்டிற்கு வரவேற்று என் சிற்றுரையை முடித்துக் கொள்ளுகிறேன். வந்தே மாதரம்!

இனிஐக்கிய தேசியக் கட்சியோடு கலவாமல் சுயராஜ்யக் கட்சியார் சென்னைச் சட்ட சபையில் தனித்து வேலை செய்வாராம்.

"எங் இந்தியா" குறிப்புகள்

நூற்போர் சங்கம்

அகில இந்திய நூல்நூற்போர்சங்கத்தில் இதுகாறும் 1100 அங்கத்தினர் சேர்ந்திருப்பதாகக் கடைசியாக வந்த செய்தி கூறுகிறது. "எங் இந்தியா"வின் சென்ற இரண்டு இதழ்களிலும் 373 அங்கத்தினர்களின் பெயர்கள் பிரசுரிக்கப்பட்டிருக்கின்றன. இவர்களில் ஒவ்வொரு மாகாணத்தையும் சேர்ந்தவர்களின் தொகை விவரம்பின்வருமாறு:—ஆந்திரம் 13, அஸ்ஸாம் 23, பீகார் 44, வங்காளம் 29, ஹிந்து மத்தியமாகாணம் 7, மராத்தி மத்திய மாகாணம் 8, பம்பாய் 10, தில்லி 6, கூர்ஜரம் 65, கர்நாடகம் 39, கேரளம் 2, மகாராஷ்டிரம் 35, பஞ்சாப் 5, சிந்து 24, தமிழ்நாடு 33, ஐக்கிய மாகாணம் 16, உத்கலம் 12.

"கூண்டுச் சிங்கம்"

டாக்டர் அன்சாரி அவர்களுக்கு மகாத்மா காந்தி எழுதிய கடிதத்தின் முழுவிவரம் பின் வருமாறு:— "சர்வதேசச் சங்கத்துக்குக் காங்கிரஸ் அக்கிராசனர் ஒரு தந்தி அனுப்புவதால் என்ன பயன்விளையும்? கூண்டுக்குள்ளகப்பட்ட சிங்கத்தின் நிலையில் நான் இருக்கிறேன். அதற்கும் எனக்கும் வேற்றுமை யாதெனில், சிங்கம் கோபத்துடன் அங்குமிங்கும் அலைந்து பற்களைக் கடித்துக்கொண்டும், கர்ஜித்துக்கொண்டும் கூண்டின் இரும்புக் கம்பிகளை ஓங்கி அறைந்து உடைக்க முயல்கிறது. தன்னுடைய விடுதலை முயற்சிகள் எல்லாம் வீண் என்று அதற்குத் தெரிவதில்லை. நானோ என்னுடைய பலம் இவ்வளவுதான் என்று உணர்ந்து வீண் கோபத்துக் கிடங்கொடாமல் இருக்கிறேன். நமது கோரிக்கைக்கு ஆதாரவாகப் பின் பலம் ஏதேனும் இருந்தால் தங்களுடைய யோசனையின்படி உடனே த[illegible] அனுப்பி யிருப்பேன். "எங் இந்தியா" வில் நான் கூறாமல் விடுக்[illegible]ம் பல விஷயங்கள் என் இருதயத்தில், ஆழப் புதைந்துகிடக்கின்றன. நான் பிரசுரிக்கும் விஷயங்களைவிட அவை [illegible]கவும் முக்கியமானவை. ஆயினும் நினை[illegible]தாறும் ஆண்டவன் சந்நிதியில் அவைக[illegible] சொல்லி முறையிட[illegible] [illegible]ற்றியுள்ள நிலைமையை எண்ணும் போது என் இருதயம் இளைப்புற்று ஏக்கமடைகின்றது. ஆனால் என் உள்ளத்துக்குள்ளே யிருந்துவரும் சிறுகுரல் எனக்கு நம்பிக்கை யூட்டுகிறது. ஆகையினால் தான் என்னைச் சுற்றிலும் நெருப்புப்பற்றி எரியும் போதும் நான் புன்னகை கொள்கிறேன். நம்முடைய பேடிமையையும், பலவீனத்தையும் விளம்பரப் படுத்திக் கொள்ளுவதினின்றும் என்னைக் காப்பாற்றுங்கள்."

மிருகங்களினின்றும் படிப்பினை

மேற்கண்ட செய்தியைப் பிரசுரித்து அதன் மீது மகாத்மா எழுதி யிருப்பதின் சாராம்சம் பின் வருமாறு:- இந்தியர்கள், ஹிந்துக்கள், முஸ்லிம்கள், கிறிஸ்துவர்கள், பார்ஸிகள், ஆசியாக்காரர்கள் என்ற இந்த எல்லா முறைகளிலும், ஸிரியாவுக்கு இழைக்கப் பட்டிருக்கும் இந்த இழிவை, இந்த அநாகரிகக் கொடுமையை, இந்த டையர் செயலை எதிர்த்து நம்மால் ஏதும் செய்யமுடியாமலிருக்கும் பலவீனத்தை எண்ணிப்பார்ப்போமாக. நமது பேடிமையை நன்கு உணர்ந்து கொண்டால் மிருகங்களினின்றேனும் நாம் ஒரு படிப்பினை கற்றுக்கொள்ளலாம். கொடும்புயல் வீசும்போது மிருகங்கள் என்ன செய்கின்றன? ஓரிடத்தில் நெருங்கிவந்து ஒன்றுக்கொன்று வெப்பமும், தைரியமும் அளிக்கின்றன வன்றோ? வாயுதேவனை நோக்கி அவனது கொடுமையைத் தணிக்கும்படி அவை கைகூப்பி நிற்பதில்லை. காற்றின் கொடுமையினின்றும் காத்துக்கொள்ள அவை ஏற்பாடு செய்து கொள்கின்றன. நாமோ? ஹிந்து முஸ்லிம் வேற்றுமை தினந்தோறும் வளர்ந்து வருகிறது. இராட்டை இயக்கத்தின் கருத்தை நாம் இன்னும் அறிந்து கொள்ளவில்லை. கதர் அணியாததற்கு இல்லாத காரணங்களையெல்லாம் கண்டுபிடித்து வருகிறோம். நம்மைச் சுற்றியோ பெரும்புயல் அடித்துவருகிறது நாம் ஒருவருக்கொருவர் ஆதாரவாயிருப்பதை விட்டுத் தனித்தனியே நின்று குளிரில் விரைக்கிறோம். வாயுதேவனை நோக்கி விண்ணப்பம் செய்து கொண்டிருக்கிறோம். ஹிந்து முஸ்லீம் ஒற்றுமையை நிலைப்படுத்தவும், ஜனங்களை இராட்டையை ஏற்றுக் கொள்ளும்படி செய்யவும் என்னால் முடியாமற் போகலாம். ஆனால் கருணைகாட்டும்படி விண்ணப்பம் போடாமலிருப்பதற்கு வேண்டிய அறிவேனும் என்னிடம் இருக்கிறது.

சென்றவாரத்து எங் இந்தியாவில் "கீதையின் பொருள்" என்ற தலைப்புடன் மகாத்மா காந்தி எழுதியுள்ள கட்டுரையின் மொழி பெயர்ப்பு பின்வருமாறு:—

கீதையும், அஹிம்சையும்

"எழுத்தைத்தள்ளி, கருத்தைக்கொள்ளுங்கள்"

ஒரு நண்பர் பின்வரும் ஐயத்தைக் கிளப்பி விட்டிருக்கிறார்:

"கீதை ஹிம்சையைப் போதிக்கும் நூலா, அஹிம்சை நெறியைக் கற்பிக்கும் நூலா என்பதைப் பற்றியவிவாதம் நீண்டகால் நிகழ்ந்து வருமெனத் தோன்றுகிறது. கீதையில் நமக்கு வேண்டிய பொருளை நாம் காண்பது வேறு. ஒருதலைச் சார்பின்றிப் படித்துப் பொருள் காண்பது வேறு. அஹிம்சையை வாழ்க்கையின் நித்திய நெறியாகக் கொண்டவனுக்கு இவ்விஷயத்தில் அதிக கஷ்டம் தோன்றாது. கீதை அஹிம்சையைப் போதித்தால் மட்டுமே அதைத்தான் ஒப்புக் கொள்ள முடியு மென்று அவன் கூறவான். கீதையைப் போன்ற ஒருசிறந்த நூல் அஹிம்சைநெறியின் சிறப்பைக் கூறுவதே பொருத்த முடையதாகும் என்று அவன் கருதுவான். கீதை அவ்வழிகாட்டாவிடில், ஓரளவு அந்நூலுக்கு அவன் மதிப்புத் தரலா மெனினும், அதையே தனது மோட்ச சாதன நூலாகக் கொள்ள ஒருப்படான்.

கீதையின் முதல் அத்தியாயத்தில், அர்ச்சுனன் அஹிம்சாதர்ம உணர்வு பெற்றுத் தன் ஆயுதங்களைக் கீழே போடுவதைக் காண்கிறோம். ஹிம்சையினால் விளையக்கூடிய கொடுமைகளை அவன் மனக் கண்ணால் பார்த்துப் பதறுகிறான். அவன் மயக்கமுற்று, அச்சங்கொண்டு 'அந்தோ! எத்தகைய கொடும்பாவம் செய்ய நாம் தலைப்பட்டுள்ளோம்' என்று நடுநடுங்கிக் கதறுகிறான். அப்போது ஸ்ரீகிருஷ்ணன் அவனுக்கு உபதேசிக்கிறார்:—போதும் இந்த உயர்ந்த தத்துவப்பேச்சு. உலகில் கொல்வோனுமில்லை; கொல்லப்படுவோனுமில்லை. ஆத்மா அழிவற்றது; நித்யமானது. இவ்வுடல் அழிய வேண்டியதே. எனவே, சண்டைசெய். இப்போர் உன்னைத் தேடிவந்திருக்கிறது; உனது கடமையாய் இருக்கிறது. வெற்றி தோல்விகளைப் பற்றிக் கவலைப் படாதே. உன் கடன் பணி செய்வதே.'

பதினோராம் அத்தியாயத்தில் பகவான் இந்தப் பிரபஞ்சத் தோற்றத்தை அர்ச்சுனன் கண்களுக்குப் புலப்படுத்திவிட்டுக் கூறுகிறார்: 'உலகங்களை அழிக்கும் காலன் நான். அவ்வேலையில் இப்போது ஈடுபட்டிருக்கிறேன். என்னால் முன்னமேயே கொல்லப்பட்டிருக்கும் இவர்களை நீ கொன்று புகழ் அடைவாய். வருந்தாதே!'

ஆண்டவன் முன்னிலையில் ஹிம்சையும் அஹிம்சையும் ஒன்றேயாகும். ஆயினும் மானிடர்களுக்கு இறைவன் காட்டி யிருக்கும் வழியென்ன? 'யுத்தம்செய், உன்னுடைய பகைவர்கள் மீது நிச்சயம் வெற்றி கொள்வாய்' என்பதுதானா? கீதை அஹிம்சை நெறி போதிக்கும் நூலானால், முதலாவது, பதினோராவது அத்தியாயங்கள் மற்ற அத்தியாயங்களுடன் முரண் படுகின்றன. அவை அஹிம்சாதர்மத்தை ஆதரிக்கவில்லை. என்னுடைய ஐயத்தைத் தீர்க்கத் தங்களுக்குச் சாவகாசம் கிடைக்குமானால் மகிழ்ச்சியடைவேன்."

இருதயமும் அறிவும்

இந்த நண்பரின் கேள்வி நித்திய மானது. கீதையைப் படித்தவர் ஒவ்வொருவரும் தாமே பதில் தேடி உணரவேண்டும். ஆயினும் என்னுடைய பதிலை இங்கே தருகிறேன். முடிவாகப் பார்த்தால், ஒருவனுடைய வாழ்க்கை நெறியை அமைப்பது அவனுடைய இருதயமேயன்றி அறிவு அன்று. இருதயம் ஒரு முடிவை ஏற்றுக்கொண்டு விடுகிறது. பின்னர் அறிவு அதற்குக்காரணங்கள் கண்டுபிடித்துத் தருகிறது. மனிதன் தான் செய்கிற, செய்ய விரும்புகிற காரியங்களுக்கு ஆதாரவாகக் காரணங்கள் கண்டு பிடித்தல் இயற்கை.

எனவே, கீதைக்கு நான் தரும்பொருளை அங்கீகரிக்க முடியாதவர்களின் நிலைமையை நான் அறிந்துகொள்ளக்கூடும். ஆனால் நான் கூறும் பொருள் எவ்வாறு கிடைத்ததென்றும், எந்த வியாக்கியான விதிகளை ஆதாரமாகக் கொண்டு நான் கீதைக்குப் பொருள் செய்தேனென்றும் தெரிவித்தல் அவசியம். வெற்றி, தோல்வியைப் பொருட்படுத்தாது என்னுடைய பொருளை ஆதரித்து வாதமிடுதல் என் கடன்.

முதன்முதல் நான் கீதைபடிக்க ஆரம்பித்தது 1889ம் ஆண்டில். அப்போது எனக்கு இருபது பிராயம் ஆகியிருந்தது; அஹிம்சையைப்பற்றி ஒன்றுமே தெரியாது. கூர்ஜர கவியான ஷாமலால்பட்டர், பகைவனையும் அன்பினால் வெல்லவேண்டும் என்ற பொருள் படப் பாடியிருந்த ஒரு கவியட்டும் அப்போது என் மனதைக் கவர்ந்திருந்தது. ஆனால் இதிலிருந்து அஹிம்சா தர்மத்தின் உண்மையைக் கண்டு கொண்டேனில்லை. உதாரணமாக, அஹிம்சை மனிதரல்லாத பிற உயிர்களுக்கும் பொருந்துமென்று நான் நினைக்கவில்லை. இதற்கு முன் இந்தியாவில் இருந்தபோது மாமிச உணவு சுவைத்திருந்தேன். பாம்பு முதலிய விஷ ஜந்துக்களைக் கொல்லுதல் என்னுடைய கடமையென்று எண்ணியிருந்தேன். ஐரோப்பாவிலும் அஹிம்சை நெறியைக் கைக்கொண்டவன் விஷ ஜந்துக்களையும் கொல்லலாகாதென்று உறுதிகொண்டிருக்கிறேன். ஆங்கிலேயருடன் சண்டை போவதற்கு நம்மைத் தயார்செய்து கொள்ளவேண்டுமென்ற கொள்கையில் அப்போது எனக்கு நம்பிக்கை இருந்தது. இதற்கு முதல் படியாகவே நான் மாமிச உணவு கொண்டது. இங்கிலாந்துக்குப் புறப்படுவதற்கு முன் என்னுடைய நிலைமை இதுதான். இங்கிலாந்தில், என்னுடைய தாயாருக்கு நான் கொடுத்த வாக்கை நிறைவேற்றும் உறுதியினால் மாமிச போஜனம் முதலியவற்றினின் றும்காப்பாற்றப்பட்டேன். சத்தியத்தில் எனக்கிருந்த பற்று என்னைப் பல முறைகளிலும் காப்பாற்றி யிருக்கிறது.

"மனதைப் பறிகொடுத்தேன்"

இங்கிலாந்திலிருக்கும் போது இரண்டு ஆங்கில நண்பர்களுடன் நான் சேர்ந்திருந்ததின் காரணமாக கீதை படிக்க வேண்டி வந்தது. "படிக்கவேண்டி வந்தது" என்று ஏன் கூறுகிறேனெனில், என்னுடைய சொந்த விருப்பங் காரணமாக நான் அதைப் படிக்கவில்லை. ஆனால் மேற் சொன்ன நண்பர்கள் தங்களுடன்சேர்ந்து கீதை படிக்கும்படி கேட்டபோது என்னுடைய அறியாமை எனக்கே அவமானமாயிருந்தது. என்னுடைய மத நூல்களைப் பற்றி எனக்கு ஒன்றுமே தெரியாததை நினைத்துப் பெரிதும் வருந்தினேன். உதவியின்றிக் கீதையின் சுலோகங்கள் எல்லாவற்றையும் படித்துப் பொருள் தெரிந்துகொள்வதற்குப் போதிய அளவு சமஸ்கிருத பாஷையில் எனக்குப் பயிற்சி இல்லாமலிருந்தது. என் நண்பர்களுக்கோ சமஸ்கிருதமே தெரியாது. எனவே, ஸர் எட்வின் ஆர்னால்டின் அழகிய மொழி பெயர்ப்பை அவர்கள் கொண்டுவந்தார்கள். அதைக் கையில் எடுத்ததும் என் மனதை முழுதும் பறிகொடுத்தேன். பக்கம் பக்கமாக அப்புத்தகத்தைக் கரைத்துக் குடித்துவிட்டேன் என்று சொல்லலாம். இரண்டாவது அத்தியாயத்தின் இறுதி பத்தொன்பது சுலோகங்களையும் என் இருதயத்தில் என்றும் அழியா வண்ணம் பதித்திருக்கி[illegible]ன். என் வரையில் அந்த சுலோகங்களிலே எல்லா ஞானமும் அடங்கி யிருக்கிறது. நித்தியமான உண்மைகள் அவற்றில் பொதிந்து கிடக்கின்றன. தர்க்கமுறை அந்த சுலோகங்களில் காண்கிறோம். ஆனால் அவற்றின் சிறப்பு அநுபவ ஞானமே.

அதன் பின்னர் எவ்வளவோ மொழி பெயர்ப்புக்களும், விரிவுரைகளும் படித்திருக்கிறேன். மனம் திருப்தியடையும் வரையில் வாதம் செய்திருக்கிறேன். ஆனால் முதன் முறைபடித்ததில் ஏற்பட்ட அபிப்பிராயம்மாறவில்லை. கீதை யென்னும் பொக்கிஷத்தைத் திறப்பதற்கு அந்த சுலோகங்களே திறவுகோல். அவற்றோடு முரண்படும் பகுதிகளைத் தள்ளிவிடும்படியும் நான் கூறத் தயங்கமாட்டேன். ஆனால் தாழ்மை உணர்ச்சி கொண்ட மானுக்கன் எதையும் தள்ளவேண்டியதில்லை. 'என் அறிவு சிற்றறிவாதலின் இந்த முரண்பாட்டின் இரகசியத்தை அறிந்து கொள்ள முடியவில்லை. பின்னர் ஒருநாள் அறிந்து கொள்வேன்' என்ற இத்தகைய மனோபாவம் அவன் கொண்டிருப்பான்.

பக்தியும் சிரத்தையும் வேண்டும்

சமய நூல்களின் உண்மைப் பொருளை அறிய வேண்டுமானால் சிரத்தையும், அநுபவமும் இன்றியமையாதன. சூத்திரன் ஒருவன் வேதத்தைப் படிக்கக் கூடாது என்ற விதி முற்றிலும் பொருள் இல்லாததன்று. சூத்திரன் என்றால் பாரமார்த்திகத் துறையில் பயிற்சி யில்லாதவனும், அஞ்ஞானியுமான மனிதன் என்று பொருள். அவன் வேதங்களுக்கும், மற்ற சமய நூல்களுக்கும் தவறான பொருள் சொல்வது இயல்பு. அல்ஜீப்ரா கணக்கு ஒன்றை எல்லாரும் போட்டுவிட முடியாது. அக்கணக்கு முறை சிறிதளவேனும் கற்றவனால் தான் முடியும். மகா பாதகங்களில் மூழ்கியிருப்போன் ஒருவன் "நானேபிரம்மம்" என்ற உயர்ந்த உண்மையை உரைத்தல் எவ்வாறு தகுதியாகும்? இந்த வேதாந்த முடிவுப் பொருளை அவன் எவ்வளவு தூரம் தன் உபயோகப் படுத்தக் கூடும் என்பதை சிந்திக்கவேண்டும்.

எனவே, சமயநூல்களுக்குப் பொருள் உரைக்கப் புகுவோன் பாரமார்த்திகப் பயிற்சி பெற்றிருத்தல் அவசியம். யமம், நியமம் என்னும் ஒழுக்க முறைகளை அவன் முழுதும் அனுஷ்டித்து வருவோனாயிருத்தல் வேண்டும். குருமுகமாக மத கிரந்தங்களைப்படிப்பதின் அவசியத்தைப்பற்றிச் சாஸ்திரங்கள் சொல்கின்றன. ஆனால் இக்காலத்தில் குரு கிடைப்பது அரிது. எனவே, பக்திமார்க்கத்தைக் கற்பிக்கும் நூல்களைப் படிக்கும்படி மகான்கள் கட்டளையிடுகின்றனர். பக்தி, சிரத்தை இல்லாதவர்கள் சமயநூல்களுக்குப் பொருள் கூற அருகரல்லர். பண்டிதர்கள் தங்கள் கல்வித் திறமையால் நீண்ட விரிவுரைகள் செய்யலாம். ஆனால் அவர்கள் உண்மைப் பொருள் அறியார்கள். முக்தி நெறியில் அநுபவம் பெற்றவர்களே உண்மைப் பொருளைக் கண்டுணர்தல் கூடும்.

ஆனால், அநுபவமில்லாதவர்களும் சில விதிகளை ஆதாரமாகக் கொண்டு பொருள் செய்யலாம். உண்மையுடன் மாறுபடும் பொருள் [illegible] மாட்டாது. உண்மையிலேயே [illegible] பில்லாதவர்களுக்குச் [illegible] அவர்களுடன் ஒருவனும் [illegible] முடியாது. சாஸ்திரங்களிலே அஹிம்சையைக் காணாதவனுக்கு ஆபத்து உண்டு. ஆனால் மேற்சொன்னவர்களைப்போல் அவனுக்கு வழியே யில்லாமற் போகாது. சத்தியம், இருக்கும் பொருள் ஒன்றைக் குறிக்கிறது. அஹிம்சை நிறைவை எதிர்மறையாக மறுக்கிறது. சத்தியம் சுயம் பிரகாசமானது. அம்மரத்தினின்று முதிர்ந்தகனி அஹிம்சை. சத்தியத்தில் அஹிம்சை அடங்கி யிருக்கிறது. ஆனால் சத்தியத்தைப் போல் அது சுயம் பிரகாசமானதன்று. அஹிம் சாதர்மத்தை ஒப்புக் கொள்ளாமலே ஒருவன் சாஸ்திரங் களுக்குப் பொருள் தேடலாம். ஆனால் அவன் சத்தியத்தை ஒப்புக் கொண்டிருந்தால் தன் தேட்டத்தின் முடிவில் அஹிம்சைக்கு வந்து சேர்வான்.

சத்தியத்தைக் கண்டு பிடிப்பதற்கு உலக ஆசைகளைத் துறத்தல் இன்றியமையாதது. சத்தியத்தை அறிந்த மகான் தம்மைச்சூழ்ந்திருந்த ஹிம்சையினிடையேயும் அஹிம்சையைக்கண்டு பின் வருமாறு சொன்னார்:— 'ஹிம்சை பொய்; அஹிம்சையே உண்மை. அஹிம்சையின்றிச் சத்தியத்தை அறிதல் இல்லை. அஹிம்சையை யடைவதற்கு பிரமசர்யம், ஆஸ்தேயம் (திருடாமை), அபரிக்ரகம் (துறவு) இவை சாதனம். அஹிம்சை சத்தியத்தின்ஆத்மா. அஹிம்சையில்லாத மனிதன் மிருகமே.' உண்மை நெறியைத் தேடுவோன் ஒருவன் இவ்வுண்மைகளை அறிவான். அப்போது சாஸ்திரங்களுக்குப் பொருள் கூறுதல் அவனுக்கு எளிதாகும்.

கருத்தைக் கவனியும்

சமய நூல்களுக்குப் பொருள் கூறுவதில் அனுசரிக்க வேண்டிய மற்றொரு விதி, எழுத்தை அப்படியே எடுத்துக்கொள்ளாமல் கருத்தைக் கவனிப்பதாகும். துளசி தாஸரின் ராமாயணம் ஒரு சிறந்த புஸ்தகம். தூய்மையும், பக்தியும் அதில் நிரம்பியிருக்கின்றன. அதில் ஒரு சுலோகம் 'தம்பட்டம், சூத்திரர், மூடர், பெண்கள் இவர்களனைவரும் அடிக்கப்படத்தகுந்தவர்கள்' என்று சொல்கிறது. இந்த சுலோகத்தை எடுத்துக் காட்டித் தன் மனைவியை ஒருவன் அடிக்கப் புகுந்தால் அவன் எரிவாய் நரகம் எய்துதல் நிச்சயம். ஸ்ரீராமபிரான் தமது மனைவியை அடித்தாரில்லை. மற்று, அவள் மனம் சிறிதளவுநோகும் படியாகவும் அவர் எதுவும் செய்யவில்லை. துளசிதாசர் அவர் நாளில் வழங்கிய ஒரு பழமொழியைக் கையாண்டிருக்கிறார். இதை ஆதாரமாகக் கொண்டு மனைவிகளை அடிக்கும் மிருகப் பிராயத்தினர் இருப்பர் என்று அவர் கனவிலும் கருதியிருக்கமாட்டார். துளசிதாஸரே அக்காலத்து முறையைப் பின்பற்றித் தமது மனைவியை அடித்தாரென்று வைத்துக் கொள்வோம். அப்போதும், அது தவறேயாகும். இராமாயணம் மனைவியரைக் கணவன்மார் அடித்தல் நியாயமென்று நிரூபிக்கவோ எழுதப்பட்டது? பூரணத்வம்பெற்ற மனிதனான இராமபிரானையும், மனைவியர் திலகமானசீதாதேவியையும், சகோதரர்களுக்கு ஓர் இலக்கியமான பரதனையும்பற்றி வர்ணிப்பதற்கே இராமாயணம் பாடப்பட்டது. எனவே, கெட்டவழக்கங்களை ஆதரிக்கும் சுலோகங்கள் எங்கேனும் இடையில் வந்திருந்தால் அவற்றைத் தள்ளிவிடவே வேண்டும். பூகோளம் கற்பிப்பதற்காக துளசிதாசர் தமது விலைமதிப்பற்ற இதிகாசத்தை எழுதவில்லை. எனவே தவறான பூகோளம் ஏதேனும் அதில் காணப்பட்டால் ஐயமின்றித் தள்ளியேதீர வேண்டும்.

மேற் சொன்னவற்றை மனதிற் கொண்டு கீதையை ஆராய்வோம். முக்தியும், முக்திக்கான சாதனமுமே கீதையின் உபதேசமாகும். பாரதயுத்தம் இவ்வுபதேசத்திற்கான ஒரு சந்தர்ப்பம் மட்டுமே. கீதையை இயற்றிய கவி யுத்தத்தையும், ஹிம்சையையும் வெறுக்கவில்லை யென்றும், அதனாலேயே இவ்வுபதேசத்துக்கு ஒரு யுத்தத்தைச் சந்தர்ப்பமாகக் கொண்டா ரென்றும், வேண்டுமானால் நீங்கள் சொல்லலாம். ஆனால் மகாபாரதத்தை நான் படித்தவரையில் எனக்கு வேறு அபிப்பிராயம் ஏற்பட்டுளது. அந்த ஆசரியமான அழகிய இதிகாசத்திலே வியாசர் யுத்தங்களின் பயனற்றதன்மையை நன்கு நிரூபித்திருக்கிறார். கௌரவர் தோல்வியடைந்தால் என்ன? பாண்டவர் வெற்றிபெற்றதால் என்ன? வெற்றியடைந்த கட்சியில் மிகுந்தவர் எத்தனைபேர்? அவர்களுடையகதி என்ன? குந்திமாதா எத்தகை முடிவையடைந்தாள்? யாதவர் என்ன ஆயினர்? என்று வியாசமுனிவர் வினவுகிறார்.

முக்கிய உபதேசம்

சண்டையின் வர்ணனையும், ஹிம்சையின் நியாயமும் இந்த இதிகாசத்தின் முக்கிய விஷயங்களல்ல. எனவே அவற்றை வற்புறுத்துவது முற்றிலும் தவறாகும். எங்கேனும் சில சுலோகம் அஹிம்சை நெறிக்கு முரணாயிருக்கலாம். ஆனால் கீதை ஹிம்சை நெறியைப் போதிக்கிறதென்று கொண்டால் நூலின் அமைப்பு முழுதும் முரண் படுகின்றது.

கவி ஒருவன் தன்னுடைய பாட்டு எவ்வளவு பொருள்களுக்கு இடந்தரும் என்று நினைத்துப் பாடுவதில்லை. தன்னை யறியாமல் பொங்கியெழும்பாட்டே உண்மையில் அழகிய பாட்டு. பாட்டுக்களில் காணப்படும் உயர்ந்த தத்வங்களைக் கவியின் வாழ்க்கையில் காண முடியாமற் போகலாம். கீதையின் முக்கிய உபதேசம் அஹிம்சையே என்பதை இரண்டாம் அத்தியாயத்திலும், பதினெட்டாம் அத்தியாயத்திலும் தெளிவாகக் காணலாம். மற்ற அத்தியாயங்களும் இவ்வுபதேசத்தைப் பெரிதும் அணைத்தே செல்கின்றன. கோபமும், பற்றும், பகைமையும் இல்லாமல் ஹிம்சை செய்தல் முடியாது. ஆனால் கீதையோ, சத்வம், ராஜசம், தாமசம் என்னும் முக் குணங்களையும் கடந்த குணாதீத நிலைக்கு நம்மைக் கொண்டு போக முயற்சிக்கிறது. இந்நிலையில் கோபமேது? பகைமையேது? ஆனால் அர்ச்சுனன் ஒவ்வொரு முறையும் வில்லின் நாணைக் காதளவு இழுத்து அம்புவிடும்போது அவனிடம் சாந்தம் குடி கொண்டிருந்திருக்குமோ? அவன் கண்கள் கோபத்தால் சிவந்துதோன்றுவதை இப் போதும் நமது மனக்கண் முன்பு பார்க்கலாம்.

அர்ச்சுனன் யுத்தம்செய்ய மறுத்தது அஹிம்சையிலுள்ள பற்றினாலன்று. இதற்கு முன் பலமுறை அவன் சண்டை செய்திருக்கிறான். இம்முறை தப்பான இரக்கம் அவனை மேற்கொண்டது. கொலைத்தொழில் தர்மமா? அதர்மமா? என்று அர்ச்சுனன் ஆராய்ச்சி செய்யவே தொடங்கவில்லை. நான் ஒருவனையுமே கொல்லமாட்டேன் என்று அவன் சொல்லவில்லை. தனது உறவினரையும், நண்பர்களையும் எவ்வாறு கொல்வது என்றுதான் அவன் வருந்தினான். ஸ்ரீ கிருஷ்ணன் [illegible]ர்ச்சுனனுடைய இந்த மயக்கத்தின் உண்[illegible]க் கண்டு கொண்டார். எனவே, அவர் "முன்னமே நீ கொலைசெய்திருக்கிறாய். இப்போது திடீ[illegible]று அஹிம்சா மூர்த்தியாய் ஆகிவிட முடியாது. தொடங்கிய வினையைச் செய்துமுடித்துவிடு." என்று கூறினார். எக்ஸ்பிரஸ் ரயில் வண்டியில் பிரயாணம் செய்யும் ஒருவன் நடுவழியில் பிரயாணத்தில் சலிப்படைந்து வெளியே குதித்தானாயின் தற்கொலைக் குற்றத்திற்கு உள்ளாவான். அர்ச்சுனன் இந்நிலையிலேயே இருந்தான். எனவே அஹிம்சா மூர்த்தியான கிருஷ்[illegible] பரமாத்மா அவ்வாறு உபதேசம் செய்தார். ஒரு குறிப்பிட்ட சந்தர்ப்பத்தில் கொலை செய்யச் சொன்ன காரணத்தினாலேயே கீதை ஹிம்சையையும், யுத்தத்தையும் கற்பிக்கும் நூல் என்று கூறுதல் தவறாகும். தின[illegible]வாழ்க்கையில் ஓரளவு ஹிம்சை இன்றியமை[illegible]யாமலிருப்பதால் ஹிம்சைதான் வாழ்க்கை நெறி என்று கூறலாமா? கீதையின் கருத்தை உய்த்துணர்வோன் அஃது அஹிம்சாதர்மத்தின் இரகசியத்தையும், இந்தச் சடவுடல[illegible]த்தின் மூலம் இறைவனை அறியும் வழியை[illegible]யும் போதிப்பதைக் காண்பான்.

மற்றும், திருத[illegible]ராஷ்டிரன், யுதிஷ்டிரர், அர்ச்சுனன், கண்[illegible]ணன் முதலியோர் யாவர்? அவர்கள் சரித்திர[illegible] பூர்வமானவர்களா? கீதை அப்படித்தான் சொல்கிறதா? போர்க்களத்தின் மத்தியி[illegible] அர்ச்சுனன் திடீரென்று நின்று கிருஷ்[illegible]ணனைக் கேட்டது உண்மையாகவே நிகழ்[illegible]ததா? அப்போதே கிருஷ்ணன் கீதை முழுவதை[illegible]யும் சவிஸ்தாரமாக அவனுக்குக் கூறினாரா?

என்வரையில், [illegible] துரியோதனாதியர் மனிதனின் தீய[illegible] குணங்க ளென்றும், அர்ச்சுனாதியர் மனிதனி[illegible] நல்ல அம்சங்க ளென்றுமே நான் கருது[illegible]றேன். நமது உடலே போர்க்களம். இரண்டு கட்சியினருக்கும் நித்திய மான யுத்தம் நடந்து கொண்டிருக்கிறது. மகரிஷியானகவி இந்த யுத்தத்தைத் தெளிவாக வர்ணிக்கிறார். கிரு[illegible]ஷ்ணன் ஒவ்வொருவனுடைய உள்ளத்திலேயும் கோவில் கொண்டிருக்கும் அந்தராத்மா. கடிகா[illegible]ரத்துக்குச் சாவி கொடுத்தல் அவசியமாயிருத்த[illegible]ல் போல், நமக்குள்ளேயிருக்கும் இறைவனு[illegible]டைய குரல் நமது மனத்தில் தூய்மை இ[illegible]ருந்தால்தான் கேட்கும்.

கோழைத்தனத்திலும் ஹி[illegible] மேல்

உலகில் யுத்தத்திற்கு இ[illegible] டையாது என்பதும் இல்லை. [illegible]தவர் [illegible]களைக் கீதை எல்லா[illegible] [illegible]விட் [illegible]டுச் சோர்ந்திருக்கும் [illegible]ச் [illegible] சமுடையோன், [illegible] [illegible]ளவிரும்புவோ[illegible] இடங்கொ[illegible] [illegible]பாயிடினும்

(மேல்)

மொரோக்கோ வீரர்

ரிப்பியர் தலைவனின் உறுதி

"பூண்டோடு நாசமாகும்வரை போர்டுவோம்"

இங்கிலாந்தில் பிரசுரமாகும் "டெயிலி எக்ஸ்பிரஸ்" என்ற பத்திரிகையின் விசேஷ நிருபர் வின் ஸெண்ட் ஷீன் என்பவர் ரிப்பியர் சைன்யத்தின் பிரதம சேனதிபதியும், வீரர் அப்துல் கரீமின்சகோதரருமான ஸிடி மகமது என்பாரைக்கண்டு பேசிய விவரம் அப்பத்திரிகையில் பிரசுரமாயிருக்கிறது. மேற்படி விசேஷ நிருபர் ரிப்பியர் சைன்யத்தின் தலைமை ஸ்தானத்திலிருந்து செப்டம்பர்மீ 13௳ விட்டு அக்கடிதத்தை எழுதியுள்ளார். அதன் சாராம்சம் பின் வருமாறு:—

ரிப்பியர் சைன்யத்தின் தலைவர் ஸிடி மகமது இன்று எனக்குப் பேட்டி கொடுத்து நீண்டநேரம் பேசிக் கொண்டிருந்தார். யுத்த நிலைமையைப் பற்றியும், சமாதானத்திற்குரிய வழிகளைப்பற்றியும் விரிவாக அவர் தமது அபிப்பிராயத்தைத் தெரிவித்தார்.

வடக்குக்கடற்கரையை இப்போது பிரஞ்சு, ஸ்பானிய கப்பற் படைகள் தாக்க ஆரம்பித்திருக்கின்றன. அவர்களுடைய தரைச் சைன்யங்களும் சில விடங்களில் முன்னேறத் தொடங்கி யிருக்கின்றன. ஆயினும் ஸிடி மகமதுவின் தோற்றத்திலிருந்து அவர் சிறிதும் அதைரிய மடைந்திருப்பதாகக் காணப் படவில்லை.

ரிப்பியர் சேனதிபதி பழுப்புநிறக் கண்களும், பழுப்பு நிறதாடியும் படைத்தவர்; நடுத்தரமான உயரமுள்ளவர்; மிகச்சாதாரணமான உடைகள் அணிந்திருந்தார். உடையிலிருந்து அவருக்கும் மற்ற இராணுவ வீரர்களுக்கும் வேற்றுமை காணமுடியாது. தங்க விளிம்பு கட்டிய மூக்குக்கண்ணுடி அணிந்திருக்கிறார். அவரைப்பார்த்தால் இஸ்லாமிய கலாசாலை ஒன்றில் ஆசிரியர் என்று தோன்றுமே யன்றி ஒரு வீர சைன்யத்தை நடத்தி வெற்றிக்கொடிநாட்டிய சேனதிபதி என்று தோன்றாது. அவர் சுத்தமான ஸ்பானிய பாஷை பேசுகிறார். என்னிடம் பிரஞ்சு மொழியில் பேசினர்.

அவருடைய காரியாலயம் இவ்விட[ம்] புதிதாகக் கட்டப்பட்டிருக்கும் ம[ண்] வீட்டிலுள்ள ஓர் அறையே[யா]ம். பாரஸீக தேசத்து அழகிய ரத்ன [கம்ப]ளம் ஒன்றுதான் இவ்வறையில் விசேஷம[ா]னது. தற்போதைய யுத்தநிலையைப்பற்றி ஸிடி மகமது விரிவாகக் கூறிவிட்டுப் பின்னர், பொதுவாக ரிப்பியரின் மனோபாவத்தைக் குறித்துப்பேசினர்:—

"தெற்குப்போர் முனையில் எங்களைத்தோற்கடிக்க பிரான்ஸ் எல்லாமுறைகளையும் கையாண்டு பார்த்து விட்டது. பெரிய பீரங்கிகள், ஏராளமான துருப்புகள், ஆகாய விமானங்கள், பீரங்கிப்பிரயோகத்திலும், வெடிகுண்டுப் பிரயோகத்திலும் கண்டுபிடிக்கப்பட்டிருக்கும் புதியமுறைகள் இவையெல்லாவற்றையும் துணையாகக்கொண்டு பிரான்ஸ்போராடுகிறது. இவற்றில் பெரும்பான்மையான வற்றிற்கு எங்களிடம் பாதுகாப்பு சாதனங்கள் இல்லை.

தெற்குப் போர்முனையில் இப்போதுஇரண்டு லட்சம் பிரஞ்சு சைன்யங்கள் இருக்கின்றன. நாங்கள் அங்கே இதுவரை அனுப்ப முடிந்திருக்கும் சைன்யம் எவ்வள வென்று உங்களுக்குத் தெரியுமா? 18 ஆயிரந்தான். தற்போது இவ்வளவு சைன்யங் கூட அங்கில்லை. உண்மையில் கொசு ஒன்று யானையை எதிர்த்துச் சண்டை போடுவது போல் நாங்கள் சண்டையிடுகிறோம். ஆனல் முடியுமோ?

எங்களுக்கு வெற்றி! இதையாரும் மறுப்பார்கள் என்று நான் நினைக்கவில்லை.

சென்ற ஐந்துமாத யுத்தத்தில் பிரஞ்சுக்காரர் திட்டமான வெற்றி ஒருமுறை கூட அடையவில்லை. பிரஞ்சுக்காரர் வசமிருந்த 85 முக்கிய ஸ்தலங்களை நாங்கள் பிடித்துக் கொண்டிருக்கிறோம். பிரஞ்சுக்காரர் எங்கும் பின்வாங்கியிருக்கிறார்கள். ஏராளமான நஷ்டமடைந்திருக்கிறார்கள். தற்போது ஐரோப்பாவிலேயே பல மிகுந்த வல்லரசை எதிர்த்து நாங்கள் வெற்றி யடைவதின் இரகசியம் என்ன? இந்த நாட்டின் இயற்கை அமைப்பும், சீதோஷ்ண நிலையும் ஒரு வகைக் காரணங்கள். ஆனல் எங்களுடைய போர் முறை தான் முக்கிய காரண மென்று சொல்வேன். எங்கள் உயிருக்காக நாங்கள் போராடுகிறோம். சுதந்திரத்துடன் அமைதியாக உயிர் வாழும் உரிமைக்காக நாங்கள் சண்டைபோடுகிறோம்.

பிரஞ்சுக்காரர் எதற்காகச் சண்டையிடுகிறார்? எனக்குச்சிறிதும் புரியவில்லை யென்று ஒப்புக் கொள்கிறேன். அவர்கள் ஒவ்வொரு நாளும் இரண்டுலட்சம் பவுன் செலவிடுகிறார்கள். எதற்காக? அல்லாவுக்குத்தான் தெரியும்.

இந்த நாட்டைக் கைப்பற்றுவதற்காக இருக்கமுடியாது. ஏனெனில், முதலில் அவர்கள் எங்களை ஜெயித்தாகவேண்டும். இன்னும் எத்தனையோ பிரஞ்சு உயிர்களையும், பணத்தையும் சேதமாக்கி எங்களை ஜெயித்தார்களென்று வைத்துக்கொள்வோம். அப்போதும் அவர்கள் நோக்கம் நிறைவேறாது. அவர்கள் இந்நாட்டைக் கைப்பற்றினாலும், நீண்டகாலம் வைத்திருக்க முடியாது.

உலகம் தோன்றின காள் தொட்டு இதுவரை ரிப்பியரை அடக்கியாள எவராலும் முடியவில்லை. நாங்கள் பிடிவாதமுள்ள சாதியார். பிரஞ்சுக்காரர் எங்களை ஒரு காலும் அடக்கியாள முடியாது.

இந்த யுத்தத்திற்குப் பொறுப்புபிரஞ்சுக்காரரையே சாரும் என்பதை நிரூபிக்க வேண்டிய தஸ்தவேஜிகள் என் சகோதரர் அப்துல் கரீமிடம் இருக்கின்றன. யுத்தத்தை ஆரம்பித்த அவர்கள் எப்போது அதை முடிப்பதென்று நினைக்கிறார்களோ தெரியவில்லை. என்வரையில் சமாதானம் சீக்கிரம் ஏற்படுமென்று நம்புகிறேன். பிரான்சு முதன்மந்திரி மிஸ்டர் [...] எனக்கு நம்பிக்கை யுண்டு. [...]ஷத்தில் நான் பாரிசுக்குச் சென்றிருந்தபோது அவரைப் பார்த்திருக்கிறேன். நாங்கள் சமாதானமும், சுதந்திரமும் பெறுவதற்கு எல்லாஉதவியும் செய்வதாக அவர் கூறினர். ஆனல் அப்போது அவர் ஒரு கட்சித்தலைவராக மட்டுமே இருந்தார். முதன் மந்திரியாகவில்லை.

நாங்கள் கேட்பதெல்லாம், ரிப்பியருக்கும் சுற்றியுள்ள பிரதேசங்களுக்கும் சுதந்திரமேயாகும். எங்களுடைய சுதந்திரத்தில் தலையிடுவதில்லையென்றால், பெயரளவில் மொரோக்கோ சுல்தானின் ஆளுகைக்குட்பட்டிருக்கவும் நாங்கள் ஆட்சேபியோம்.

யுத்தம் தொடர்ந்து நடந்தால் இருசாராரும் அழிந்துபோக வேண்டுவதுதான். யுத்தமும் சமாதானமும் பிரஞ்சுக்காரரையே பொறுத்திருக்கின்றன. இன்னும் ஓராண்டுவரை நாங்கள் சளைக்காமல் யுத்தம் செய்யக் கூடும். ஆனல் பிரான்சு இன்னும் ஒரு வருஷத்திற்கு இந்த யுத்தத்தைச் சமாளிக்க முடியுமா?

அமெரிக்கா, இங்கிலாந்து, இதாலி முதலிய தேசங்களில் சமாதானத்திற்காக ஒரு வார்த்தை சொல்லக்கூடியவர் ஒருவருமில்லையா? இவ்வாறு யாரேனும் முன்வந்து சமாதானம் ஏற்படுத்தாத வரையில் இன்னும் ஒரு வருஷத்திற்கோ இரண்டு வருஷத்திற்கோ இந்த யுத்தம் நீடிக்கும் என்பதில் சந்தேகமில்லை. எங்கள் மீது வெற்றியடைவதற்குப் பிரஞ்சுக்காரர் இந்நாட்டின்மீது படையெடுத்து எங்களில் ஒருமனிதனும்பாக்கியில்லாமற் போகும் வரையில் சண்டையிட்டாக வேண்டும். உயிருடன் நாங்கள் ஒருகாலும் அடிமைத் தனத்துக்குச் சம்மதியோம். எங்கள் சாதி முழுவதும் பூண்டோடு நாசமாகும் வரையில் விடுதலைக்காகப்போராடியே தீருவோம்.'

[மேற்படி பத்திரிகாநிருபர் ஸிடி மகமதைக் கண்டு பேசியது செப்டம்பர் மாதத்தில். அதற்குப்பின் பிரஞ்சு ஸ்பானிய படைகள் முன்னேறியதாகச் செய்திகள் வந்தன. ஆனல் மழைகாலம் வந்து விடவே மறுபடியும் பிரஞ்சு, ஸ்பானிய சைன்யங்கள் கைப்பற்றிய இடங்களைக் காவல்செய்து விட்டுப் பின் வாங்க ஆரம்பித்தன. இனி மழைகாலத்தில் ஒன்றும் செய்வதற்கில்லையென்று பிரஞ்சு சேனதிபதி பாரிஸுக்குத் திரும்பிவிட்டதாகக் கிடைத்த செய்தி கூறுகிறது.—ப-ர்]

ஆனல் அவனுடைய தர்மம் அஃதன்று. தர்மம் ஒன்றே. அஹிம்சையே மோட்சம். சத்திய தரிசனமே முக்தி. இங்கு, கோழைத் தனத்துக்கு இடமில்லை. இந்த அதிசயமான உலகில் ஹிம்சை இருந்து கொண்டுதான் இருக்கும். அதினின்றும் மீள நீதை வழி காட்டுகிறது. ஆனல் கோழைத்தனம், சோர்வு என்னும் வழிகள் சரியானவையல்ல வென்றும் சொல்கிறது. கோழைத் தனத்தைவிட, சண்டையில் கொல்லுதலும், கொல்லப் படுதலும் சாலச் சிறந்தவை.

எனது நண்பருக்கு இன்னும் பொருள் விளங்கி யிராவிடில், அவருக்குப் பொருள் விளங்கும்படி செய்ய நான் அசக்தனு யிருக்கிறேன். எல்லாம்வல்ல இறைவன், இந்தப்பிரபஞ்சத்தை ஆக்கி அளித்து அழிப்பவன் என்றும், அ[வ]ன அத்தொழில்கள் செய்பவனுகவே இ[...]சல் வேண்டு மென்றும் அங்கிகரிக்கப் ப[...]? இறைவன் சிருஷ்டி செய்[...] வாஞயின் [...] அவனுக்கு உரிமையுண்டு. [...] ஆக்குவது மில்லை; அழிப் [...]மதெல்லாம் இறக்க வேச[...] வனுடைய நியதி. [...] தான் விளங்குகி[...] [...]ங்கள் என்றும் [...]ப்பம்போல் [...]ந்தானுயின் [...]?

பண்டித நேருவின் "அகம்பாவம்"

கட்சித் தலைவருக்கு இலட்சணமா?

மௌலானு மகமதலியின் எச்சரிக்கை

கடைசியாக வெளியான "காம்ரேட்" பத்திரிகையில் மௌலானு முகமதலி "அகில இந்திய காங்கிரஸ் கமிட்டி கூட்டமும் பிறகும்" என்ற தலைப்புடன் ஒரு நீண்ட கட்டுரை எழுதியிருக்கிறார். அதன் ஒருபகுதியின்சாராம்சம் மட்டும் கீழே பிரசுரிக்கப்பட்டிருக்கிறது. மௌலானு தாம் 1924-ம் வருஷம் நவம்பர் மாதத்திலேயே, உலகில் பெருந் தயாளரான மகாத்மாகாந்தியின் செல்வாக்கைக் குறைக்க முயற்சி செய்யப்படுவதைப் பற்றிச் சுயராஜ்யக்கட்சியாருக்கு எச்சரிக்கை செய்ததாகக் குறிப்பிட்டுப் பின்னர் எழுதுவதாவது :—

என் எச்சரிக்கை பயன்படுமென்று நம்பியிருந்தேன். ஆனல் பண்டித நேரு பாட்னுவில் செய்த பிரசங்கம் என் நம்பிக்கை வீண் என்று காட்டிற்று. எனவே, மீண்டும் ஒரு முறை இப்போது எச்சரிக்கை செய்ய விரும்புகிறேன். இம்முறையேனும் என் எச்சரிக்கை ஏற்றுக் கொள்ளப்படுமென நம்புகிறேன். ஏனெனில், கயாவிலே கலகத் தலைவராகக் கிளம்பிய பண்டிநேரு, தாமும் தாஸரும் மகாத்மாவின் திட்டத்தை எதிர்த்துக் கலகம் செய்ததுபோல் இப்போது தமது வைதிகசுயராஜ்யக்கட்சியை எதிர்த்துத்தாம்பேக்களும், ஆனேக்களும், மூஞ்சிகளும், கெல்கார்களும், ஜெயகார்களும் கலகமாகக் கிளம்பிருப்பதைக் காண்கிறானன்றோ? டாக்டர் மூஞ்சி கலகம் செய்வாரென்பது எதிர்பார்த்திருக்கக் கூடியதே. நாகபுரி காங்கிரஸ் முடிந்தவுடன், லோகமான்ய திலகருடன் அரசியல் ஞானமும் இறந்துவிட்டது என்று அவர் கூறியதாகச் சொல்லப்படுகிறது. ஸ்ரீமான் கெல்கார் விஷயமும் இவ்வாறே. 1921ல் பூனுவில் அவர் பகிரங்கமாக, மகாராஷ்டிரத்தில் போதுமான கதர் உற்பத்தியாகாவிட்டால் சாக்கையாவது அணிவோம் என்று கூறிய வாக்குறுதியை நிறைவேற்றிய அழகிலிருந்தே அவருடை[ய] போக்கை ஊகித்திருக்கலாம். தமது [...]றே. [...]ப்பற்றியவரையில் பண்டித நேரு அதிர்ஷ்ட சாலியல்லர். ஸ்ரீமான் படேலைவிட கெல்கார் இப்போது அவருக்குத் தொந்திரவு அதிகம்கொடுக்கிறார். ஸ்ரீமான்தாம் பேக்குவந்த "நல்லதிர்ஷ்டத்தை"க் குறித்துத் தமது "சொந்த ஹோரா"வில் அனுப்பிய வாழ்த்துச் செய்தியைப் பற்றி அவர் நீண்ட வியாக்கியானங்கள் எழுதியிருக்கிறார். ஸ்ரீமான் படேலையும், பண்டித நேருவின் ஸ்கீன் கமிட்டி பதவியையும் அவர் இழப்பது பொருத்தமற்ற வாதம் என்பதில் சந்தேகமில்லை. ஆனல் கலகத்துக்கு வழிகாட்டியவர் பண்டித நேருவே என்று அவர் நினைவூட்டும் போது அவரை மறுத்துக் கூறுவதற்கில்லை. பண்டித நேரு முதலியோர் தாங்களும் ஒத்துழையாதார் என்று சொல்லிக் கொண்டே அக்கட்சியினரையும், அவர்களின் மா பெருந் தலைவரையும் எதிர்த்துக் கலகம் செய்து வெற்றி பெறவில்லையா? ஒத்துழையாமை இயக்கத்திலிருந்து சட்டசபைப் பிரவேசம் தோன்றக்கூடுமானல், சுயராஜ்யக் கட்சியிலிருந்து பரஸ்பரஒத்துழைப்பு ஏன் பிறத்தல் கூடாது?

இஃது எங்ஙனமாயினும் ஆகுக. தம்முடைய கட்சிக்குள் இவ்வளவு கட்டுப்பாட்டை விரும்பும் பண்டிதநேரு, தமது கட்சி விளைத்த கலகத்தைக் குறித்து மட்டும் என் குதூகலமடைகிறார்? மகாத்மாவினிட மிருந்தும், ஒத்துழையாதாரிடமிருந்தும் எல்லாவற்றையும் பெற்றுக் கொண்டு பதிலுக்கு யாதொன்றும்—செலவில்லாத வெறும் வந்தனம்கூட கொடாமலிருக்க ஏன் விரும்புகிறார்? இதைப் பற்றித்தான் நாம் கவனிக்க வேண்டும். என்னைவிட வயதிலும், தொண்டிலும் பெரியவரும், இணையில்லாத தியாக மூர்த்தியுமான ஒருவரைப் பற்றிக்குறை சொல்ல வேண்டியிருப்பது எனக்குப் பெரிதும் வருத்தமளிக்கிறது. ஆயினும் என் செய்வது? பண்டித நேருவின் கலகக்கிளர்சியும், அவருடைய கோபமும், அவரது நன்றியற்ற தன்மையும், தமதுகட்சிக்குள் அவர் வேண்டும் தீவிரமான கட்டுப்பாடும், எல்லாம் அவருடைய அகம்பாவம் காரணமாகவே எழுந்தன வென்று நான் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். படேல்களும், கெல்கார்களும் தமமிடத்தில் நடப்பதுபோல் தாம் மகாத்மா காந்தியினிடம் நடந்து கொள்ளலாமென்று அவர் நினைப்பதற்கு அவருடையஅகம்பாவமே காரணம். என்னைப் போன்ற மாறுதல் வேண்டாதார், தில்லியிலும், காக்கினுடாவிலும், பம்பாயிலும், பெல்காமிலும், பாட்னுவிலும் செய்ததெல்லாம், சுயராஜ்யக்கட்சியின் பெருந் தலைவருக்கும், அவர் நிர்மாணித்த பெருங் கட்சிக்கும் நாங்கள் செலுத்த வேண்டிய காணிக்கைகள்! எனவே மாறுதல் வேண்டாதாருக்கு நன்றி எதற்காகச் செலுத்துவது? ஆனல் இத்தகைய கட்சி அபிமானத்தையே மேற்கொண்டு நம்மில் யாரேனும் ஒரு வார்த்தை சொல்லிவிட்டால், வந்தது மோசம்! உடனே போர்தொடுக்கவும். யுத்தகளத்தில் வெற்றியடைந்தவன் தோல்வியடைந்தவனுக்கு நிபந்தனை சொல்வது போல் பேசவும் தொடங்குகிறார்.

ஸ்ரீமான் பட்டாபி சீதாராமையா சுயராஜ்யக் கட்சியினர் துரோகம் செய்து விட்டதாகக் கூறியது அநாவசிய மென்றும், நியாய மற்றதென்றும் பல முறை சொல்லி யிருக்கிறேன். ஆனல் இதன் மீது பண்டித நேரு கொண்ட கோபம் நீண்ட நாளாகச் சகித்துக் கொண்டு வந்த மகாத்மாவையும் அசைத்து விட்டது. அடிகள் நட்பு முறையில் பண்டித நேருவுக்குக் கொஞ்சம் புத்தி மதி கூறுவது அவசிய மாயிற்று. மகாத்மாவினிடம் நான் வைத்துள்ள மதிப்பைப்பற்றி பல முறை சொல்லியிருக்கிறேன். ஆனல் மகாத்மாவின் பெருமையை நன்கு உணர்ந்திருப்பதின் பயனுக அவரிடம் மதிப்பு உணர்ச்சி மழுங்கிப் போகும் தறுவாயில், அவரை நன்றாக அறிந்திருப்பதாய் எண்ணியிருக்கும் நாங்களும் அதிசயமடையும்படி, அவர் ஏதேனும் ஓர் அருஞ்செயல் புரிந்து விடுகிறார்.

லாலாலஜபதிராய், விபினசந்திரபாலர் இவர்கள் விஷயத்தில் காந்தியடிகள் காட்டியுள்ள பொறுமை அதிஅற்புதமானது. விஷயங்களைச் சரியாக ஆராயாமல், தப்புந்தவறுமாகக் "கவி" எழுதியிருந்த கட்டுரை விஷயத்திலும் அவர் அத்தகைய அதிசயப் பொறுமைகாட்டியுள்ளார். பண்டிதமதன் மோகன் மாளவியாவின் தியாகத்தைப்பற்றி அவர் கூறும்புகழுரைகளுக்கு அளவில்லை ஆனல் அவருடையபெருந்தயாளத் தின்எல்லையைக்காண சுயராஜ்யக்கட்சியினருக் கேகொடுத்துவைத்திருந்தது. இவ்வளவுவிசால இருதயமுடையவர், பிறரைக்குறை கூற ஒரு காலும் ஒருப்படாதவர், ஆயினும் நம்மைச் சீர்திருத்துவதற்கு முற்றிலும் தகுதியுடையவரான மகாத்மாகாந்தியே பண்டிதநேருவின் கோபத்தைக் கண்டு அவருக்குப் புத்தி கூற வேண்டியிருந்தது. தமக்குப் பெரிதும் வருத்தத்தை அளிக்கக்கூடிய இக்கடமையை மகாத்மா செய்தார். இச்சம்பவத்தைப்பற்றி நன்குயோசிக்கும்படியும், இனி மேல் அவருடைய பெரிய பதவிக்கும், திறமைக்கும், புகழுக்கும் தகுதியில்லாத எதையும் செய்யாமலிருக்கும் படியும் மகாத்மா பண்டிதநேருவைக் கேட்டுக் கொண்டார். ஓர் இளையசகோதரர் தமது இருதயத்திலிருந்து அண்ணன் ஒருவனுக்குச் சொன்னதுபோல் மகாத்மாகூறிய மொழிகளுக்குப் பண்டிதநேரு வசப்பட்டிருந்தால் அவர் அங்கிருந்த எல்லாருடைய இருதயங்களையும்—பட்டாபி சீதாராமையாவினுடைய தன்பட—தம்வயப் படுத்தியிருப்பார். ஆனல், உலகில்சிறந்த பெருந்தகையின் இருதயத்திலிருந்து வந்த இந்தவேண்டுகோளுக்குப் பண்டிதநேருவும் இருதயத்தினின்று பதில் அளிக்காமல் மூளையினின்றும் பதில் சொன்னர். ஏதோ முயற்சிசெய்து சீர்திருந்தப் பார்ப்பதாக அவர் கூறினர். ஆனல் அவர் கூறியபான்மையானது தம்மால் சீர்திருந்த முடியாது என்று எங்களுக்கு உறுதி கூறக்கவலை கொண்டிருப்பவர் போலவே காணப்பட்டது. "ஒரு ஜீவிய காலத்தின் வழக்கம்" என்று இதைப்பற்றிப் பெருமையடைந்தவர்போல் அவர் சமாதானமீ கூறினர். இதே மாதிரியான மற்றொரு சந்தர்ப்பம் ஏற்பட்டால், இவ்வாறே நடந்து கொள்ள மாட்டேன் என்று உறுதி கூறுவதற்கில்லையென்றார். தவறைத் தாழ்மையுடன் ஒப்புக்கொண்டு அதற்காக வருந்துவதற்குப் பதிலாக, அத்தவறைக் குறித்துக் கர்வம் கொண்டிருப்பவர் போலவே காணப்பட்டார். இத்தகைய கர்வம், அன்னிய அதிகாரவர்க்கத்தாரிடம் காணப்பட்டாலும், நமது அரசியல் ஐசுவரிய வர்க்கத்தாரிடம் காணப்பட்டாலும் அதைச் "சாத்தான்" கர்வம் என்றுதான் சொல்லவேண்டும்.

சுயராஜ்யக்கட்சியாருக்கு முழுதும் விட்டுக் கொடுப்பதற்கு நான் என் முக்கிய காரணமாயிருந்தேன் என்பதைப்பற்றி ஒரு வார்த்தை கூறி முடிக்கிறேன். தில்லியிலும், காக்கினுடாவிலும் போலவே இன்றும் எனக்குச் சுயராஜ்யக்கட்சித் திட்டத்தில் நம்பிக்கை யில்லை. ஆனல் மாகாத்மாவும் மாறுதல் வேண்டாதாரும் சுயராஜ்யக்கட்சியாரை எல்லா நிபந்தனைகளினின்று விடுவித்துக் காங்கிரஸ் ஸ்தாபனத்தையும் அவர்களிடம் ஒப்புவித்தது குறித்து மகிழ்ச்சியடைகிறேன். இதற்கு ஒரே காரணம் யாதெனில், சுயராஜ்யக்கட்சியினர் சட்டசபை வேலையை முழுதும் நடத்திப் பார்த்த பின்னர், மாறுதல் வேண்டாதாரைப் போலவே சட்டசபைகள் மலட்டுத்தனம் வாய்ந்தன என்று அறிந்து ஒத்துழையாமைக்கே திரும்பிவருவார்கள் என்ற நம்பிக்கையினல் தான்.

எதிரொலி

நல்ல யுக்தி

மோட்டார் டிரைவர்களுக்கு நடு ஊருக்குள் மெதுவாகச் செல்ல வேண்டு மென்ற உணர்ச்சி சிறிதுமில்லை. திருப்பங்களிலும் ஜனநடமாட்டம் மிகுதியுள்ள இடங்களிலுங் கூட மெதுவாகச் செல்ல அவர் மனம் இணங்குவதில்லை. பிறருடைய உயிர் பாதுகாக்கத் தக்கதென்ற எண்ணமும் உதிப்பதில்லை. ஸ்டீரிங்கைக் கையில் பிடித்தவுடன் இவ்வுலகத்தி லிருப்பதாகவே பெரும்பாலான டிரைவர்கள் நினைப்பது கிடையாது. இம்மாதிரியான அநியாயத்தைப் பொறுக்க முடியாமல், துருக்கித் தலைநகரான கான்ஸ்டாண்டி நோபிள் பட்டினத்திலுள்ள போலீஸ் இலாகாத் தலைவர் ஒருயுக்தி கண்டு பிடித்திருக்கிறார். அங்குள்ள போலீஸ் சேவகர்கள், நிறையக் கூர்மையான ஆணிகளை அறைந்துள்ள பலகைகளை வேகமாக வருகிற மோட்டாரின் முன்னர் வீசி விடுகின்றனராம். பிரேக் சரியாக இருந்து ஞாபகமாக நிறுத்தப்படுகிற கார்கள் தவிர பாக்கிக் கார்களின் டயர்கள் கிழிந்து போகின்றனவாம். இதனல் உடனே நிறுத்தத்தக்க விதமாக மெதுவாகவே கார்களைச் செலுத்துகிறார்களாம். நல்லயுக்தி. "குமரன்"

நூல் நூற்கும் முறை

நூலை இடது கையில் பிடித்திழுக்கும் பொழுது விரல்களின் நடுவிலுள்ள பஞ்சைக் கெட்டியாக அழுத்திப்பிடிக்கவேண்டும். மெதுவாகப்பிடித்திருந்தால் நூல் ஒரே மாதிரியாக வருவதில்லை. பஞ்சிலுள்ள கட்டிகள் உடையாமல் அப்படியே நூலில் வந்துவிடுகின்றன. சிலர் கையைச் சட்டென இழுத்து, பிறகு கையை நிறுத்திக்கொண்டு ராட்டையைச் சுழற்றி நூலுக்கு முறுக்கேற்றுகிறார்கள். இது தப்பான வழி. இப்படிச் செய்வதால் நூல் சரியாக முறுக்கேறுவதில்லை. சில விடங்களில் அதிகமாகவும் சில விடங்களில் குறைவாகவும் முறுக்கப்பட்டு நூல் பிரயோஜனமற்று விடுகிறது. ஆகையால் கையை அழுத்திப் பிடித்து நூலுக்கு முறுக்கேற ஏற மெதுவாக இழுக்கவேண்டும். இழுத்து முடிந்ததும் கையை நிறுத்திக்கொண்டு ராட்டையைச்சுழற்றாமல் உடனே கதிரில் நூலைச் சுற்றவேண்டும். இப்படிச் செய்வதால் நூல் ஒரே மாதிரி முறுக்[...] நூலின் பருமனும் ஒரே மாதிரியாக விருக்கும். "குடிநூல்"

பண்டைத்தமிழரின் வாணிபம்

கி. பி. முதல் நூற்றாண்டு முதல் ஆறாம் நூற்றாண்டுவரை தமிழகத்திற்கும் ரோம ராஜ்யத்திற்கும் இடை விடாத வர்த்தகப் போக்குவரவு இருந்தது. தமிழகத்திலிருந்து ரோமாபுரிக்கு ஏற்றுமதிசெய்யப்பட்டவைகளில் இஞ்சி, மிளகு, வாசனைத் திரவியங்கள், வைரம், முத்து, பலவிதஆபரணங்கள், பட்டு இவைகள் முக்கியமானவை. இவை சேர பாண்டியப் பிரதேசங்களில் மிகுதியாய் அகப்பட்டன வாதலால் வருஷா வருஷம் ரோம ராஜ்யத்திற்கு இவை ஏற்றுமதிசெய்யப்பட்டன. அக்காலத்திய ரோம நாட்டுப் பெண்டிர் இந்தியரின் முத்திற்கும் இரத்தின கம்பளங்களுக்கும் பட்டாடைக்கும் அதிகப்பிரியம் கொண்டிருந்தனர். பிளினி என்னும் மேனுட்டாசிரியர் இந்தியாவிலிருந்து இறக்குமதி செய்யப்பட்ட இப்பொருள்கள், ரோமா புரியின் கடைகளில் இந்தியாவில் விற்கும் விலையை விட நூறு பங்கு அதிக விலைக்கு விற்கப்பட்டன வென்றும் வருஷா வருஷம் இந்திய வர்த்தக மூலமாகச் சுமார் 8 லக்ஷம் சவரன் ரோமர் நஷ்டமடைகின்றன ரென்றும் குறிப்பிட்டிருக்கிறார். அக்காலத்தில் இந்திய-வர்த்தகத்திற்குச் சான்றாக இப்பொழுதும் தமிழ் நாட்டில் பல விடங்களில் ரோம நாணயங்கள் ஏராளமாய்க் கிடைக்கின்றன. "லக்ஷ்மி"

இங்கிலாந்தில் விதவைகளுக்கு உதவி

இங்கிலாந்தில் அரசாங்கத்தார் விதவைகள், அநாதைக் குழந்தைகள் இவர்களின் உதவிக்காக ஒருசட்டம் இயற்றியிருக்கிறார்கள். இதன்படி பதினுங்கு வயதிற்குட்பட்ட குழந்தைகளை யுடைய விதவைகளுக்கு வாரத்திற்கு 10 ஷில்லிங் (ஆறரை ரூபா) வீதமும், பதினுன்கு வயதுக்குட்பட்ட பெற்றோரில்லாத குழந்தைகளுக்கு வாரம் 7½ ஷில்லிங்வீதமும் உபகாரச் சம்பளம் அளிக்கப்படும். ஏழைக்குடும் பெண்களுக்கு இச்சட்டம் போதாவாயிருக்குமென்பதில் ஐயமில்லை. அநேக குடும்பங்களில் விதவைகள் தங்களுடைய குழந்தைகளைப் போஷித்துக் கல்வி புகட்ட வேண்டியவர்களாயிருக்கிறார்கள். இந்தியாவில் இந்த முக்கிய விஷயம் எப்போது யோசிக்கப் படுமோ தெரியவில்லை. இந்தியாவில் பாதகமில்லையென்றும், விதவைகள் உறவினர் வீட்டில்தங்கள் வாழ்நாள்முழுதும் இருந்துகழித்து விடுகிறார்கள் என்றும் சொல்கிறார்கள். ஆனல் உறவினர் வீட்டில் விதவைகள் படும் கஷ்டத்தைப்பற்றி யாரும் கவனிப்பதில்லை. பெரும்பான்மையும், நமது நாட்டு விதவைகள் தாங்கள் இருக்கும் வீட்டின் சம்பள மில்லாத ஊழியர்களாய் இருக்கிறார்கள். வீட்டு வேலையெல்லாம் அவர்கள் தலையில் விடிகின்றன. வாழ்க்கையில் உள்ள இன்பம் எதற்கும் அவர் உரியவர்களல்லர். இத்துடன் முடிவுவரை அவர்கள் குடும்பத்திலுள்ள மற்றவர்களால் ஏசப்பட்டு, இடிபட்டுக் காலங் கழிக்கிறார்கள். "ஸ்திரீ தர்மம்"

மாப்பிள்ளை விற்பனை

முன்ஷி ஈசுவரசாரணர் என்பார் எழுதியுள்ள கட்டுரையில் ஒரு பகுதி பின்வருமாறு:— கல்யாண மாதங்கள் கழிந்து விட்டனவென்று அறிதல் மிகவும் மகிழ்ச்சிதருகின்றது. இந்த மாதங்களில் தான் பல இழிந்த செயல்களைப் பற்றிய துயரகரமான கதைகளைக் கேள்விப் படுகிறோம். வரதட்சணைகளின் கொடுமைகளைப்பற்றி வர்ணிக்க மொழிகள் கிடைத்தல் அரிது. எம். ஏ. பி. ஏ. எல், எல். பி. பட்டதாரிகளான நம்மவர்கள் தங்கள் பையன்களை அதிக தொகை கொடுப்போருக்கு விற்பதும், பின்னர் நட[...]னைப் போல் நடந்து கொள்வதும் கேட்கக்கர்ண கடூரமாயிருக்கின்றது. நமது பையன்களில் கல்யாணங்களின் போது இழிகுணங்களெல்லாம் வெளியாகின்றன. காட்டுமிராண்டிகளைப் போல் நடந்து கொள்கிறோம். பெண்ணைப் பெற்றோர்களின் உணர்ச்சிகளைச் சிறிதும் மதிப்பதில்லை. கலாசாலைப் படிப்பினல் என்ன பயன்? மாணவர்களை நான் ஒரு கேள்வி கேட்கிறேன். ஆடுமாடுகளைப் போல் அதிக பணத்திற்கு விற்கப் பட அவர்கள் இணங்குதல் சரியாமா? இந்தக் கொடிய முறையை எதிர்த்து, "எங்களுக்கும்எங்கள் கலாசாலைகளுக்கும் அழியாதஇழிவு ஏற்படச் சம்மதியோம்" அவர்கள் சொல்ல வேண்டாமா? ஒழுக்கம் கற்பியாத கல்வியால் எத்தகைய பயனும் இல்லை. ஒரு பையன் தன் வகுப்பில் முதன்மை பெற்று விளங்கலாம். ஆனல் அவனிடம் ஒழுக்கமும், தர்மத்தில் உறுதியும் இல்லாவிடில் தேசத்திற்கு அவனல் பயன் இல்லை. எந்த நாட்டிலும் பெரியோரெனப் போற்றப் படுவோர் ஒழுக்கச் சிறப்பினலேயே அந்நிலையை அடைகின்றனர். நமது பி. ஏ. பட்டதாரிகள் ஒழுக்க முடையவர்களாயிருந்தால் இந்த வரதட்சிணைக் கொடுமையை முன்னமே ஒழித்திருப்பா. ஆனல் மேடைகளில் சட்டமாகப் பேசும் இவர்கள் வீட்டுக்குச் சென்றதும் வரதட்சிணை கேட்கின்றனர்! "கயஸ்த சமாசார்."

பாதிரி சோல்ஜர்

ஆண்டவன் வழிபாட்டில் ஈடுபட்டிருக்க வேண்டிய மதகுருமார் ஆயுதமெடுத்துப்போர் செய்யவேண்டி வரும் முறையிலுள்ள ஆபாசம், கர்னல் பிரெங்டன் பர்க் என்பாரின் உதாரணத்திலிருந்து நன்கு விளங்குகிறது. மொரோக்கோவிலிருந்து வரும் யுத்தச்செய்திகளில் இவருடைய பெயரை அடிக்கடி காண்கிறோம். இவர் ஒரு காதலிக் பாதிரியார். சென்ற மகாயுத்தத்தில் இவர் சைன்யத்தில் சேர்ந்து சண்டையிட நேர்ந்தது. தமது போர்த்திறமையால் அவர் கர்னல் பதவிக்கு உயர்த்தப்பட்டார். யுத்தத்திற்குப் பின்னல் இவர் மொரோக்கோவுக்கு மதப்பிரசாரகராக அனுப்பப்பட்டார். அங்கு ரிப்பியர்களுடன் போர் தொடங்கப்பட்டபோது இவர் மீண்டும் மார்ஷல் லயாதேயின் கீழ் சைன்யத்தில் சேர்ந்து யுத்தம்செய்யநேர்ந்தது. இதைப்பற்றி மத்திய ஐரோப்பாவில் காதலிக்மதப் பத்திரிகைகளுள் சிறப்புற்று விளங்கும் "காத்-கர்ச்சன் ஸெய்டங்" என்றபத்திரிகை பின்வரும் கேள்விகளைவிடுத்திருக்கிறது:— "நேற்றைய தினம் தாங்கள் போதனை செய்ததற்கு நேர் மாறாக இன்றையதினம் கிறிஸ்துவ மதப்பிரசாரகர்கள் நடப்பதைப் பார்க்கும் ரிப்பியர், நேற்றையதினம் சமாதானம், அன்பு என்று உபதேசம் செய்தவர்கள் இன்றையதினம் அரசியல் ஆதிக்கத்துக்காக இராணுவத்தில் சேர்ந்து சண்டையிடுவதைப் பார்க்கும் அந்தச் சாதியார், கிறிஸ்துவமதத்தின் மாண்பைப் பற்றி என்ன நினைப்பார்கள்? கிறிஸ்துவ மதத்தின் வாசனையே வேண்டா மென்று அவர்கள் சொன்னல் அதில் ஆச்சரியத்திற்கு இடமுண்டா? இதில் இன்னும் கேடான விஷயம் என்ன வென்றால், பிரான்ஸிலுள்ள காதலிக் பத்திரிகைகள் இந்த முரண்பாட்டின் இழிவை உணராமல் தங்கள் 'பாதிரி சோல்ஜரின்'' தீரத்தின் பொருட்டுப் பெருமை கொள்கின்றன.' இத்தகைய அறிவீனமும் உண்டா என்று நாம் ஆச்சரியப்பட வேண்டியவர்களாயிருக்கிறோம்.

"பார்ட்மைட்லி ரிவ்யூ"

முறையீடு

தனி நபர்களைக் கண்டிக்கக் கூடாதா?

"நவசக்தி" ஆசிரியர் அவர்கட்கு,

ஐயா,

இம்மாதம் 6௳ வெளியான "நவசக்தி" மூன்றாம் பாலில் ஸ்ரீமான் க. சந்தானம் அவர்களால் எழுதப்பட்ட "ஒற்றுமை" என்னும் கட்டுரையை ஆவலுடன் படித்துப் பார்த்தேன். நமது தேசமிருக்கும் நிலைமையில் ஒற்றுமை சாத்தியமில்லையென்று அவர் கூறுவதை நான் முழுதும் அங்கீகரிக்கிறேன். மற்றும்பலரும் அவ்வாறே அபிப்பிராயப்படுவார்கள். "ஒற்றுமை, ஒற்றுமை" என்று ஒருபுறம் பறை சாற்றப்பட்டு வருகையில், மற்றொரு புறத்தில் புதிய, புதிய வேற்றுமைகள் உண்டாகி வருகின்றன. ஒத்துழையாதாரை "வைதிகர்கள்" என்று கேலி செய்த சுயராஜ்யக்கட்சியார், இனி கெல்கார் கோஷ்டியாரால் வைதிக சுயராஜ்யக்கட்சியார், மாறுதல் வேண்டாத சுயராஜ்யக்கட்சியார் என்று இடிக்கப்படப்போகின்றனர். சென்னை மாகாணத்தில் சுயராஜ்யக்கட்சியினருக்கும், ஐக்ய தேசியவாதிகளுக்கும் நட்புமையவிட [...] வேற்றுமையே அதிகமாகி வருகிறது. கிலாபத் முஸ்லீம்களுக்குள் அலி சகோதரர் கட்சி, அப்துல் பாரிகட்சி யென்று பிரிவு ஏற்பட்டுவிட்டது. இந்நிலைமையில் ஒவ்வொரு கட்சியாரும் அவரவர்கள் கொள்கைகளை உண்மையாகக் கடைப்பிடித்து ஒழுகுவதே நாட்டின் விடுதலைக்கு ஏற்ற வழியாகும் என்பதை என்னைப் போன்ற பலர் ஒப்புக்கொள்வார்கள்.

ஆனல், ஸ்ரீமான் க. சந்தானம் "கொள்கைகளையும் முறைகளையும் தவிர மற்ற எவ்விதத்திலும் ஒரு கூட்டத்தார் மற்றவர்களைக் கண்டிப்பது பொதுவாழ்க்கைக்குக் கேடு விளைவிக்கும்" என்றும், "தனிநபர்களை அவமதித்துப் பேசி அதன் மூலம் ஒரு கட்சியைக் குலைக்க முயலுவது நீசகாரிய" மென்றும் சொல்லும்போது சில சந்தேகங்கள் உண்டாகின்றன. பிறகட்சியினரைப் பற்றிப் பொய்யான அவதூறுகள் பரப்புவதையே அவர் குறிப்பிட்டாரென்றால் நான் அதை முழுதும் ஒப்புக்கொள்கிறேன். ஆனல்தனி நபர்களின் [...] யாரும் கண்டனம் செய்யவேகூடாது என்றால் அதை நான் ஆட்சேபிக்க வேண்டியிருக்கிறது. பிறநாடுகளைப் போல் நாமஇன்னும் சுயராஜ்யம் பெறவில்லை. எனவே, அந்நாடுகளிலுள்ள கட்சி அமைப்புகளை மனதிற் கொண்டு நமது நாட்டுநிலையை நாம் ஆராயக்கூடாது. நாடு விடுதலை பெறுவதற்காக முயன்று கொண்டிருக்கையில், தேசபக்தர்கள் என்ற வேஷத்தில் சுயநல வாதிகளும், துரோகிகளும் தோன்றித் தங்கள் நலத்தைத் தேடிக்கொள்ளும்படி நாம் விட்டுவிடுதல் சரியன்று. உண்மையாளன் எந்தக் கட்சியிலிருந்தாலும், மனிதனைப்பொறுத்த வரையில் அவனைப்போற்ற வேண்டும். சுயநல வாதி எந்தக் கட்சியில் இருப்பினும் ஜனங்கள் அவனை நம்பி மோசம் போகா வண்ணம் எச்சரிக்கை செய்யவேண்டுவது அவசியமன்றோ? அப்படிப்பட்டவர்களைக் கண்டிக்காமலிருக்க முடியாது. உதாரணமாக, ஸ்ரீமான் ச. இராஜகோபாலாச்சாரியாரை எடுத்துக்கொள்வோம். கதரைப்பற்றி தினசரிப்பத்திரிகைகளில் அவர் எழுதும் குறிப்புகள் மனதைக் கவர்வனவாயிருக்கின்றன. ஆனலும் புதுப்பாளையம் ஆசிரமத்தில் அவர் நடத்தும் வாழ்க்கையே அக்குறிப்புகளுக்கு அதிக சிறப்பை அளிக்கின்றன. இவ்வாறன்றி, ஸ்ரீமான் ஆச்சாரியார் பிறருக்கு அழகாக உபதேசம் செய்துவிட்டு, வீட்டில் தாமும், தமது குழந்தைகளும் பட்டாடை உடுத்தி மகிழும்பட்சத்தில் அவருடைய எழுத்துக்கு எத்தகைய மதிப்பு இருக்கும்? சொலலொன்று செயலொன்றாக இருப்பது குறித்து அவரைக் கண்டித்தல் அப்போது அநீதியாமோ?

வேஷதாரிகளுக்குஇடங்கொடுத்தல்உண்மையில் நமதுவிடுதலைஇயக்கத்துக்கேகேடாய்முடியும். ஏனெனில், பொதுஜனங்கள் சில பொய்யர்கள் இருப்பதாகக்கண்டதும் தேசியஇயக்கத்திலேயே பொதுவாக வெறுப்புக் கொள்வார்கள். இன்னும் சில உதாரணங்கள் கூறி நிறுத்துகிறேன். ஒத்துழையாதார் என்று சொல்லிக் கொள்ளும் ஒருவர் "சாத்தான்" அரசாங்கத்தின் உத்தியோக இழிவைப்பற்றி வேண்டிய மட்டும் பேசிவிட்டு, தமது புதல்வருக்கு உத்தியோகம் தேடுவதற்காக அரசாங்கத்தின தயவை நாடியதாகத் தெரிந்தால் அவரைக் கண்டித்துப் பொது வாழ்வினின்றும் நீக்குவது மற்ற தேசபக்தர்களின் கடமையன்றோ? மற்றும், பிராமணரல்லாதாரின் நன்மையே முக்கிய நோக்கமென்று சொல்லிச் செல்வாக்குப் பெற்ற ஒரு தலைவர், தமக்கு [ஆ]காத ஒரு பிராமணரைத் தொலைப்பதற்காக இச்செல்வாக்கை உபயோகித்துக் கொண்டு, தமது அதிகாரத்தை நிலைக்கச் செய்வதற்காக மற்றொரு பிராமணருடன் ஒப்பந்தம் செய்து கொண்டு அவரை வானளாவப் புகழ்ந்தால், அது நீசகாரியமென்று கண்டித்தல் நமது கடமையாகாதா? எனவே, தனி நபர்களாயினும், அவர்கள் சுயநல வாதிகள், துரோகிகள் என்று தெரிந்தால் அவர்களுடைய நடத்தையையும், குணத்தையும் பகிரங்கமாகக் கண்டித்தல் நமது பொது வாழ்வின் மேன்மைக்கு இன்றியமையாதது என்பது எனது தாழ்மையான அபிப்பிராயம். எஸ். முத்துசாமி.

தமிழ்க் குருகுலம்

பாரத்துவாஜ ஆச்சிரம அங்கத்தினர்கள் கூட்டம் ஐப்பசிமீ உகு-ந்தேதி சேரமாதேவியில் திரு. நாராயணய்யர் தலைமையிற் கூடியது. அக்கூட்டத்தில் குருகுல சம்பந்தமாகப் பின்கண்ட தீர்மானங்கள் செய்யப் பெற்றன.

சென்ற ஆனி ௩-ந்தேதியில் ஆசிரமிகள் அனைவரும் இருந்த கூட்டத்தில் காலஞ்சென்ற ஸ்ரீமான் வ. வெ. ஸு. ஐயரால் ஸ்தாபிக்கப் பட்ட மூன்று ஸ்தாபனங்களாகிற பால பாரதி, தமிழ்க் குருகுலம், பரத்துவாஜ ஆசிரமம் இம் மூன்றையும் முன்போல நடத்துவதென்று தீர்மானிக்கப் பட்டதற்கும் ஆசிரம விதிகளுக்கும் முற்றிலும் மாறாகத் தன் சொந்தப் பொறுப்பின் மேலேயே பால பாரதியை நிறுத்தியும், ஆசிரமத்தையும் அழிப்பதற்கு அதிக்கிரமமான வழிகளைக் கையாண்டும் குருகுலச் சொத்துக்களை ஆசிரமப் பொதுவில் வைக்காமல் தன் சொந்தத்திலேயே கையடக்கம் செய்து கொண்டும் ஆசிரமத்தின் ஆத்யாத்மிக லௌகிக அபிவிருத்திக்குப் பெரிதும் அழிவு தேடியும் குருகுலத்தை நீடித்து நடத்துவதற்கான முறைகளைக் கையாள மறுத்தும் இன்னும் பலவாறாகக் கிரமாதீதமுறையில் நடந்து பரத்துவாஜ ஆசிரமம், தமிழ்க் குருகுலம் இவற்றுக்கு ஆசாரியராயிருக்கத் தன்னை அனுகூலாக்கிக் கொண்டுள்ளமையின் ஷ ஸ்தாபனங்களின் ஆசாரிய பதவியினின்றும் ஸ்ரீ தி. ரா. மகாதேவய்யரை நீக்குவதென்று தீர்மானிக்கப் [...]ம் ஏகோபித்து நிறை[வே]றியது. தீர்மான[ம்] [...] வேறியது.

ஆசிரம குருகுல நி[தியை]ப் பெற்றுப் பொது பாங்கிகளில் போடாது தன் கையிலேயே வைத்துக் கொண்டிருப்பதா[ல்] ஆசிரம தனதிகாரி பதவியினின்று ஸ்ரீ தி. ரா. மகாதேவய்யரை நீக்குகிறது. ஒருமனதாகத் தீர்மானம் நிறைவேறியது.

குருகுலத்தின் முழுப்பொறுப்பையும் ஏற்று நிர்வகித்து வருவதற்காக ஸ்ரீமான்கள் வயி. சு. ஷண்முகம் செட்டியார், ராவ. சொக்கலிங்கஞ் செட்டியார், மு. காசி விசுவநாதன் செட்டியார், சொ. முருகப்ப செட்டியார், எஸ். இராமநாதன், ஆசிரமப் பிரதிநிதியாக தி. நாராயணையர் ஆகியவர்களோடு குருகுல ஆசாரியரையும்—(மேற்கண்ட பஞ்சாயத்தார் அறுவரால் குருகுலம் நடத்தப்படும் பொழுது தெரிந்தெடுக்கப்பட விருக்கிற ஆசாரியரையும்) சேர்த்துப் பஞ்சாயத்தாக நியமிக்கிறது. தற்பொழுது மேலே கண்ட அறுவரையும் ஸ்ரீ தி. ரா. மகாதேவய்யரிடமிருந்து குருகுலச் சொத்துக்களைக் கைப்பற்றிக் கொள்ளும் உரிமை பெற்ற பஞ்சாயத்தாக நியமிக்கிறது. ஒரு மனதாக நிறைவேறியது.

இந்தியன் பாங்கியிலிருந்து காரியதரிசிக்கு அனுப்பப்பட்ட கடிதம் படிக்கப் பட்டது. மேற்கண்ட தீர்மானங்களை இந்தியன் பாங்கிக்கு அனுப்புமாறு இக்கூட்டத்தலைவருக்கு அதிகாரம் கொடுக்கிறது. தீர்மானம் நிறைவேறியது.

குருகுலச் சொத்துக்களை ஸ்ரீ தி. ரா. மகாதேவய்யாவர்கள் ஏற்கனவே கைப்பற்றிக் கொண்டிருப்பதாலும் மீதியுள்ளதையும் கைப்பற்றாதற்கு முன்னல் அவசரமாக எடுத்துக் கொள்ள வேண்டிய நடவடிக்கைகளை எடுத்துக்கொள்ள ஸ்ரீ வயி. சு. ஷண்முகம் செட்டியாரவர்களுக்கு அதிகாரம் கொடுப்பதென்று தீர்மானிக்கப்படுகிறது. அவ்வாறு வேண்டிய சகல நடவடிக்கைகளையும் எடுத்துக்கொள்ளுமாறு ஸ்ரீ வயி. சு. ஷண்முகஞ் செட்டியாரவர்களை இக்கூட்டம் வேண்டிக்கொள்ளுகிறது. தீர்மானம் ஏகோபித்து நிறைவேறியது.

சபை அக்கிராசனர் தி. [...]
சி. ஸு[...]
ரு. கு[...]
வீ. [...]

பாரத்துவாஜ ஆசி[ரமம்]
சேரமாதேவி,

"லண்டன் புள்ளிவிவரங்கள்"

மேற்கண்ட பெயருடன் லண்டன் நகர சபையாரால் ஒரு நூல் வெளியிடப்பட்டிருக்கிறது. அதிலிருந்து பின் வரும் விவரங்கள் தொகுக்கப்பட்டன :—

லண்டன் நகரின் ஜனத்தொகை 80 லட்சம். லண்டனில் உள்ள வீடுகள், மாளிகைகள் இவைகளின் விலை மதிப்பு 6.25,25,827 பவுன். லண்டன் நகரபரிபாலனத்துக்கு வருஷந்தோறும் 6 கோடி பவுன் செலவாகிறதாம். கௌண்டி கௌன்சில் என்னும் ஸ்தல ஸ்தாபனத்துக்கு 1கோடி 30லட்சம் பவுனும், கார்பொரேஷனுக்கு 22,13,515 பவுனும் வருஷவருமானம் கிடைக்கிறதாம். லண்டன் நகர வாசிகளின் மொத்தக் கடன்தொகை 12,29,88,798பவுனாகும். பணத்தில் பெரிய நகரமாயினும், நகரவாசிகளில் கடன் பட்டவர்களும் உண்டு. லண்டன் நகரில் பலவகைப் பட்ட தர்மங்களுக்கு வருஷத்தில் மொத்தம் 1கோடி 48லட்சம் பவுன் நன்கொடை சேர்கிறதாம். அந்நகரில் மூன்று நிமிஷங்களுக்கு ஒன்று வீதம் ஜனனம் நேரிடுகிறது. வருஷத்தில் 39,000 விவாகங்கள் நடைபெறுகின்றன. லண்டன் தெருக்களின் மொத்த நீளம் 2210 மைல். அவைகளைச் செப்பனிட்டு நிர்வகிக்க வருஷத்தில் 28,24,000 பவுன் செலவாகிறது. 14,72,489 மைல் நீளமுள்ள டெலிபோன் கம்பிகள் அந்நகரிலே குறுக்கும் நெடுக்கும்போகின்றன. மொத்தம் 80கோடி முறை டெலிபோன்களில் பேசப்படுகின்றது. 5593 சாராயக் கடைகள் லண்டனில் இருக்கின்றன. ஹைட் நந்தவனத்தின் திருப்பத்தில் ஒரு முறை கணக்கிட்டபோது 12 மணி நேரத்தில் 49,434 மோடார் வண்டிகளும், 3533 குதிரை வண்டிகளும், 7577 சைகிள்களும் 559 மோடார் சைகிள்களும் போயினவாம்.

இந்தியாவிலும் பிறநாடுகளிலும் கல்வி அபிவிருத்தி

உலகிலுள்ள பற்பல தேசங்களிலும், சென்ற நான்கு ஜனக் கணிதங்களின்படி, மொத்த ஜனத்தொகையில் 100க்கு எவ்வளவு பேர் படிக்கத் தெரிந்தவர்கள் என்ற விவரம் கீழே கொடுக்கப்பட்டிருக்கிறது. மற்ற தேசங்களுடன் ஒப்பிடும்போது கல்வி அபி விருத்தியில் இந்தியா எவ்வளவு தூரம் பின்னால் நிற்கிறது என்று இதிலிருந்து தெரிந்துகொள்ளலாம்.

	1891	1901	1911	1921
ஹாலந்து	81	86	94·5	100
நார்வே	82	87	95	100
ஜெர்மனி	83	88	96	100
பிரான்ஸ்	84	88	92	94
அமெரிக்கா ஐக்யராஜ்யம்	85	86	89	95·4
இங்கிலாந்து	81	86	87	93·5
ஜப்பான்	65	80	95	97·8
பிலிப்பைன் தீவுகள்	29	47	58	70 5
பிரிட்டிஷ் இந்தியா	3	3·8	4·5	5·2
திருவாங்கூர்	...	11	19	28·2
பரோடா	4·2	6·6	13	21·5
நைஜாம்	...	5·5	9·7	15·7

(5 வயதுக்கு மேற்பட்டவர்களின் ஜனத்தொகைமீது கணக்கிடப்பட்டது.)

ஊறுகாய் ! சட்னி ! முரப்பா !

இந்தப் பெயர்களைச் சொல்லும்போதே உங்கள் வாயில் நீர் ஊறுகின்றது. இவைகளை நீங்கள் வீட்டிலேயே தயார் செய்வது பெரிய வியாபாரம் செய்யலாம். முறைகள் விரிவாகவும், எளிய ஆங்கில நடையிலும் எழுதப்பட்டிருக்கின்றன.

Manufacture of
INDIAN PICKLES, CHUTNEYS AND MORABBAS

புத்தகம் ஒன்றின் விலை ரூ. 1-8-0 வி. பி. செலவு பிரத்தியேகம்.

கடிதங்கள் ஆங்கிலத்தில் எழுதப்படவேண்டும்.

INDUSTRY BOOK DEPT.,
32, Keshub Bhaban, Shambazar,
CALCUTTA.

11-வது வருடம்

தமிழ் மாதாந்த சஞ்சிகைகளில் பெயர் பெற்றதும், பல்லாயிரக் கணக்கான சந்தாதாரர்களை யுடையதுமான "ஆனந்தபோதினிக்கு" 11-வது வருடம் ஆடி மாதம் பிறக்கப்போகிறது. உடனே சந்தாதாரர்களாய்ச் சேருங்கள் மாதிரி காப்பி இனும்.

சந்தா ... ஒன்றுக்கு ரூ. 1 0
" வெளி நாடுகளுக்கு ரூ. 1 4

ஆனந்தபோதினி ஆபீஸ், மதராஸ்.

மோக்ஷமார்க்கம்

மோக்ஷமார்க்கத்தை நாடும் ஒவ்வொருவரும் அறிந்துகொள்ளவேண்டிய பல நல்ல விஷயங்கள் அடங்கியுள்ளன. வடமொழி நூல்களிலிருந்தும் தென்மொழி நூல்களிலிருந்தும் பல மேற்கோள்கள் இதில் வெளியாயிருக்கின்றன. எல்லோரும் படித்துப் பயனடையத் தக்க எளிய நடையில் எழுதியுள்ளது. நல்ல காகிதத்தில் அச்சிட்டுள்ளது.

விலை அணா 10.

பாரதியாரின் கீதங்கள்

முதல் பாகம் ...	ரூ 1	0
இரண்டாம் பாகம் ...	1	0
மூன்றும் பாகம் ...	0	10
4-ம் பாகம் (ஞானரதம்) ...	0	8
பாஞ்சாலிசபதம் (காவியம்)....	0	12

முருகவேள் புத்தகசாலை
இராயப்பேட்டை, சென்னை

ஒரே ரூபாய்

வாசனைகளிற் சிறந்தது எது?

பிரெஞ்சு செண்டுகளே !

ஜாஸ்மின், வில்லா, ரோஸ்
பெரிய புட்டி விலை ரூபா 2.
சிறிய புட்டி விலை ரூபா 1.
3-மாதிரி புட்டிகளின் விலை ரூபா 1—0—0
தபாற் செலவு அணா 12 பிரத்தியேகம்.
நம்முடைய கேட்லாக்கிற்கு எழுதவும்.

லக்ஷ்மண பிரசாத் அண்டு கோ,
(ந) புதுச்சேரி.

மணவாழ்க்கை மர்மங்கள்

முன்பு "கொக்கோகச் சோலம்" என்று வெளியிடப்பட்டதின் விரி நூல் இது. இல்லற இன்பசுகத்தைப் பரிபூரணமாய் எவ்வாறு அனுபவிப்பதென்று வெகு விரிவாக எழுதப்பட்டிருக்கிறது. இவ்வரிய நூல், விவாகமானவர்களுக்கும், இனி ஆகப்போகிறவர்களுக்கும் அத்தியாவசியமானது.
விலை ரூ. 2-4-0.
தபாற் பெட்டி 248, சென்னை.

வெளியிடப்பட்டது! பலரும் எதிர்பார்த்திருந்த புத்தகம்

தேசபந்து விஜயம்

அழகிய எழு ஆப்டோன் சித்திரப்படங்களை யுடையது; தமிழ்நாட்டுச் சுயராஜ்யக் கட்சியின் தலைவராகிய கௌரவம் பொருந்திய ஸ்ரீமான் எஸ். ஸ்ரீநிவாச ஐயங்கார், பி. ஏ., பி. எல்., அவர்களுடைய முகவுரையுடன் கூடியது.

சுயராஜ்யக் கட்சியின் தந்தையும், பாரதமாதாவின் அரும்பெரும் தொண்டரும், நம்நாட்டு நாயகரும், கல்கத்தாவின் கற்பகமும், கலியுகத்தின் கர்ணனும், வங்காளத்தின் சிங்கமும், தேசத்தின்பந்துவுமாகிய சி. ஆர். தாசருடைய அற்புத சரித்திரமும், அரிய செயல்களும், உயர்ந்த உப தேசங்களும் அடங்கியது.

இஃது, எல்லோர்க்கும் நன்கு விளங்கும்படி எளிய தமிழ் வசன நடையில் தக்கவரால் அழகாக எழுதப்பட்டது; நம் நாட்டினர் ஒவ்வொருவரும் கட்டாயம் படிக்க வேண்டிய புத்தகம்; அருமை பெருமை வாய்ந்த பல நீதிகளைப்போதிப்பது; தாய் நாட்டின் அபிமானத்தை யூட்டுவது; பாரதமாதாவினிடம பக்தியைப் பெருகச் செய்வது; படிக்கப் படிக்க இன்பம் பயப்பது.

உடனே எழுதுங்கள். பின்னிட்டுப் புத்தகம் கிடைக்காமைக்கு வருந்தவேண்டாம். விலை அணா 0-12-0. தபால் சார்ஜி வேறு.

மானேஜர்.
செந்தமிழ்ச்சிந்தாமணிப் புத்தகசாலை
பெரியமெட், சென்னை

இங்கிலீஷ் உபாத்தியாயர்

Rs. 1—8—0

வடுவூர் கே. துரைசாமி அய்யங்கார் முகவுரை எழுதியது. இங்கிலீஷ் கற்றுக்கொள்ளவிரும்புகிற தமிழ் அறிந்த ஸ்திரீகளும், கிராம முன்சீப், கர்ணங்களும், விவசாயிகளும் சுலபமாய் இப்புத்தகத்தினால் கற்றுக்கொள்ளலாம்.

தி. மதராஸ் நாவல் டிபோ,
3, இருசப்பன்சந்து, மிண்ட்பில்டிங்ஸ் மதராஸ்.

நான்காம் பதிப்பு! வெளியாய் விட்டது!!

சரீர மர்ம சாஸ்திரம்

இந்த அருமையான நூலில் ஸ்திரீ, புருஷர், அனுபவிக்க வேண்டிய சம்சார சுகம், குடும்ப ரஹசியம், மணவாழ்க்கையின் மர்மங்கள் அனைத்தும் ததும்பிக்கிடக்கின்றன. 54-படங்களுடன் 200- பக்கங்கள் கொண்ட பெரிய புஸ்தகம் 1-க்கு விலை ரூபா 1.

மாணிக்க விலாசம் பிரஸ்,
அருணாசல முதலி வீதி, மதராஸ்.

நமது சிங்கப்பூர் ஏஜண்டுகள்

கே. எஸ். ஏ. எஸ். பிரதர்ஸ்,
கமிஷன் ஏஜண்டுகள்,
புஸ்தக வியாபாரிகள்,
176, செலிங்கிரோட், சிங்கப்பூர்.

பிரிட்டிஷ் அண்டு அமெரிக்கன் நியூஸ் கம்பெனி,
புஸ்தக வியாபாரிகள்,
6, பாடரிரோட் சிங்கப்பூர்.

ஒற்றுமை

இது சித்திரப் படங்களுடனும் விநோதப் படங்களுடனும் வரும் ஒருமாதப் பத்திரிகை. பல பண்டிதர்களால் எழுதப்படும் அரிய விஷயங்களைத் தன்னகத்துக் கொண்டது. தமிழ் மொழியின் வளர்ச்சி கருதி வெளி வருவது. வருஷசந்தா உள்நாடு ரூ 1. வெளிநாடு ரூ. 1¼. மாதிரிப் பிரதி இனும்.

'ஒற்றுமை' ஆபீஸ்
சைதாப்பேட்டை, மதராஸ்.

ஸ்ரீ மந்திரகவசங்கள்.

இந்த தாயித்துகளை சகலரும் அணிந்து சுகப்படுங்கள்

உத்தியோக விருத்திக்காக	ரூ. 2-0-0
வியாபார விருத்திக்காக	,, 3-0-0
சந்தான விருத்திக்காக	,, 5-0-0
சகலகாரிய சித்திக்காக	,, 2-0-0
தொழில் பயிர் விருத்திக்கு	,, 3-0-0
கிரகதோஷ நிவர்த்திக்கு	,, 7-0-0
கேசுகளில் ஜயம்பெற	,, 3-0-0
சோதிட பலன்கள் 5 கேள்விகளுக்கு	,, 2-0-0

வி. பி. வேறு. விசேஷ தாயித்துகளும் செய்து கொடுக்கப்படும். பதிலுக்கு ஸ்டாம்பு அனுப்பவும்.

கமலா அண்டு கோ,
பாங்கிமலைவழி.

"கிராம வாழ்க்கை"

கிராம வாசிகளின் முன்னேற்றத்தைக் கருதி உழைத்து வரும் ஓர் உயர்தர தமிழ் மாதப் பத்திரிகை.

பிரதி மாதமும் அருமையான கட்டுரைகள் வெளி வரும்.

வருஷ சந்தா உள்நாட்டிற்கு ... ரூ. 2-0-0
" வெளிநாட்டிற்கு ... ரூ. 2-8-0

வெளிநாட்டு நேயர்கள் முன்பணம் அனுப்ப வேண்டும்.

கிராம வாழ்க்கை ஆபீஸ்,

முதல் சஞ்சிகை தயாராய்விட்டது

அருணகிரிநாதர் அருளிச்செய்த திருப்புகழ் விருத்தி உரை

(உரை ஆசிரியர் :—பி. எஸ். சுப்பிரமணியப், எம்.ஏ.,)

முதல்தொகுதி : : 6-படைவீடுகள்

டெமி அளவில் 64-பக்கங்கள்கொண்ட 12சஞ்சிகைகளாக வெளிவருகிறது

வருஷ சந்தா (தபாற்செலவுடன்)

		வெளியூர்	உள்ளூர்
...உயர்ந்த காகிதப் பதிப்பு	ரூ.	6—0—0	5—4—0
...னிச் ...ஞ்சிகை	,,	0—9—0	0—8—0
...கிளேஸ் காகிதப் ...ப்பு	,,	4-12-0	4—0—0
சஞ்சிகை	,,	0—7—0	0—6—0

அல்லயன்ஸ் கம்பெனி, மயிலாப்பூர், சென்னை.

விவேக - - - - போதினி

18-வருஷ காலமாக தமிழபிமானிகளால் நன்கு மதிக்கப்பெற்றது. மிக்க அருமையான விஷயங்களே கொண்டது. எவ்வயதினர்க்கும் உபயோகமான சிறந்த வியாசங்கள் அடங்கியது. வருஷ சந்தா உள்நாட்டுக்கு ரூ. 5-ம், வெளி நாடுகளுக்கு ரூ. 6-ம் 17-ம் தொகுதி முதல் சந்தாதார்க்கு 1-8-0 விலையுள்ள புத்தகங்கள் இனுமாய் அளிக்கப்படுகின்றன. 5-அணா தபாற் தலைகள் அனுப்பி மாதிரி சஞ்சிகைபெறலாம். சந்தாதாராகும் பக்ஷத்தில் இந்த 5 அணாவை கழித்துக் கொண்டு பாக்கி ரூபாயை அனுப்பினால் போதுமானது. இச்சிறந்த பத்திரிகையை ஆதரித்தல் அவசியம்.

மானேஜர்,
விவேக போதினி,
மயிலாப்பூர், சென்னை

உயர்ந்த இலை குறைந்த விலை !

சிவபுரி - - - புகையிலை

உலகு புகழ்வது எது? உற்சாகத்தின் ஊற்று எது? மணம் மிகுந்தது எது? குணம் சிறந்தது எது? சிதம்பரத்திற்கு அடுத்த சிவபுரி புகையிலையே!

தேவைக் கெழுதுங்கள்! ஒரு முறை பரீக்ஷித்தால் உண்மை விளங்கும்.

கத்தை ஒன்றுக்கு 40 இலைகள் கொண்டது

1 நெ. கத்தை விலை ரூபா		5=0
2 நெ.	,, ,,	4=4
3 நெ.	,, ,,	3=12
4 நெ.	,, ,,	3=0

வி. பி. தபால் பாக்கிங் சார்ஜ் வேறு.

வி.கே. எஸ். ஐயர் & கோ,
ஆணிக்காரன் தெரு, சிதம்பரம்.

சில நாட்களுக்கு மாத்திரம்

உலகப் பிரசித்திபெற்ற "சி" மார்க்கு டைம் பீஸ், (ரிஜிஸ்டர்) பவுண்டன்பேனாவுடன் இனாமாய் கொடுக்கப்படும்.
விலை ரூ. 2-12-0

ஸ்வான் ஹவுஸ்,
தபால் பெட்டி 508, பி. டி. மதராஸ்.

வரகவி - திரு. அ. சுப்ரமண்ய பாரதியார் எழுதிய நூல்கள்

ஜடாவல்லவர்

அல்லது

இல்லற இன்ப ரகசியம்

இப்புத்தகத்தைப் படிக்கும் ஆண், பெண், சிறுவர், சிறுமியர் முதலிய அனைவரும் தம்தம் குடும்பங்களிலும் வாழ்நாட்களிலும் கண்கூடாகக் கண்டு அநுபவிக்கும் ... இல்லற வாழ்க்கையின் இரகசியங்களை இதன் கண் காணக்கூடும்.

கிரௌன் 600 பக்கம்] விலை ரூபா 2—8

பரதன் அல்லது உத்தம சகோதரன் விலை அணா 0 12

ஆண், பெண், சிறுவர், சிறுமியர் முதல் யாவரும் பாரதத்தை எளிதில் வாங்கிப் படித்துப் பயனடையும் பொருட்டு, மூன்று புத்தகங்களாகப் பிரித்துத் தெள்ளிய நடையில் எழுதிக் குறைந்த விலையும் வைக்கப்பட்டிருக்கிறது.

பாண்டவர் பாலலீலை (படங்களுடன்)	ரூ 0 10
பாண்டவர் வனவாசம்	ரூ 0 12
பாண்டவ விஜயம்	ரூ 1 0

(ஒரே தடவையில் மூன்று புத்தகங்களையும் ஆர்டர் செய்கிறவர்களுக்கு ரூ 2)

பச்சையப்பன் காலேஜ் தமிழ்ப்புலவர்
மணி. திருநாவுக்கரசு முதலியாரின் நூல்கள்

பாமணிக்கோவை மூன்று பாகம்	ரூ. 1—10—0
உரைமணிக் கோவை (மூன்று பாகம்)	ரூ. 1—8—0
புலவர் கதை (இரண்டு பாகம்)	ரூ. 1—8—0
திருக்கண்ணப்பன் (படங்களுடன்)	ரூ. 0—5—0

K. பழனியாண்டிப் பிள்ளை கம்பெனி,
புத்தக வியாபாரிகள், 583, பைகிராப்ட்ஸ் ரோடு,
திருவல்லிக்கேணி, சென்னை.

☞ 10000 ஜனங்களால் வாசிக்கப்பட்டு நல்ல பயன் அடைந்து உள்ளார்கள்.
எமது லேடி ... மார்க் போட்டிருக்கும் புஸ்தகம் பார்த்து வாங்குங்கள் !!
சொல்லிய படி இப் புத்தகத்தில் இல்லாவிட்டால் உங்கள் பணத்தை திருப்பி விடுகிறோம்.

ஆங்கில ஆசான் அல்லது ஆங்கில போதினி.

தமிழ் எழுத்துக்களை வாசித்தால் இங்கிலீஷ் பதங்கள் தெரிந்து கொள்ளலாம்.

தெலுங்கிலும் இம்மாதிரி புத்தகம் வெளிவந்துவிட்டது.

கொஞ்சம் பிரதிகளே இருக்கின்றன. ஆர்டருக்கு முந்துங்கள்

அறுபது நாளையில் இங்கிலீஷ் கற்றுக் கொள்ளலாம்.

இதுவரையில் இம்மாதிரியான புத்தகம் வெளிவரவில்லை. இது இங்கிலீஷ் பேசவும், படிக்கவும் எழுதவும் கற்றுக்கொள்ளக்கூடிய சுலபமான தமிழில் நன்றாய்த் திருத்தப்பட்டு 5 பதிப்பாக பிரசுரிக்கப்பட்டிருக்கிறது. உடனே எழுதுங்கள். விலை ரூ. 2. தபால்செலவு அணா. 7.

பினாங்கு சிங்கப்பூர் தேசங்களிலிருந்து முன்பணம் அனுப்பினால்தான் புஸ்தகம் அனுப்பப்படும். கவனிக்கவும். கேட்லாக் இனும்.

தி. இராஜகோபால் முதலியார், 302, தங்கசாலை தெருவு,
மின்ட் பில்டிங் போஸ்டு, மதராஸ்.

வெளியாகி விட்டது ! வெளியாகி விட்டது !!

"பச்சைமோதிரத்தின் மர்மம்"

ஓர் இனிய துப்பறியும் தமிழ் நாவல். இதுவரை இம்மாதிரியான டிடெக்டிவ், ஆச்சரியப்படக்கூடிய நாவல் வெளிவந்ததே இல்லை.

225 பக்கங்கள் விலை ரூ. 1. நேர்த்தியான அச்சு

லக்ஷ்மிப் புத்தகசாலை, தபால்பெட்டி 99, சென்னை.

திருமூலர் திருமந்திரம்

பல பிரதிகளுக்கிணங்கப் பரிசோதித்தும், சில அரும் பாடல்களை (*) இக்குறியிட்டு விளக்கியும், இறுதியில் செய்யுள் முதற்குறிப்பகராதி சேர்த்தும் நல்ல காகிதத்தில் அழகுபெற அச்சிட்டு கலிகோ பயிண்டு செய்யப்பட்டுளது. வி ரூபா 2-4-0

இதுவரையில் வெளிவராதது!

முருகவேள் பனுவல் திரட்டு

சுப்பிரமணியபக்தர்கள் பாராயணஞ் செய்தற்குரிய சிறந்த நூல்

இதில், திருப்புகழ், கந்தரலங்காரம், கந்தரனுபூதி, கந்தரந்தாதி, கந்தர் கலிவெண்பா, திருமுருகாற்றுப்படை, முதகுக் குமாரசாமி பிள்ளைத்தமிழ், திருப்போரூர் சந்நிதிமுறை, திருத்தணிகை சந்நிதி முறை, கந்தபுராணம், தணிகைபுராணம், திருச்செந்தூர்ப் புராணம் முதலிய நூல்கள் அடங்கியிருக்கின்றன. கலிகோ பவுண்டு ரூ. 1.

முருகவேள் புத்தகசாலை, இராயப்பேட்டை, சென்னை.

இல்லற சுகம் எது ?

தம்பதிகள் இருவரும் பிணியின்றி ஆரோக்கிய ஸ்திதியிலிருந்து கவலையற்ற ஆரோக்கியம், திடகாத்திரம் இவைகளோடு கூடிய குழந்தைகளை ஈன்றெடுத்து அவைகளுடைய ஆடல், பாடல், மழலை ... களால் இன்பப்படுவதே சுகம். மேற்கூறிய சுகத்தையடைய விரும்பும் புரு... ...ர்

மதனமஞ்சரி ...

அவசியம் ... கொள்ளவேண்டும். ... தக்கு ... 12 டப். ரூ. 9.
தபால் ... ஒரு டப்பி விலை ரூ. 1 ...

மற்றும் ஸ்திரீகள் மேற்கூறிய சுகத்தையடைய ஸ்திரீ ஜாதிகளுக்கு சாமானியமாய் ஒவ்வொருவருக்கும் இருக்கும் வியாதிகளைப்போக்கி சந்தானமளிக்கும் தமது

கர்ப்பாமிருத சூரணம்

உபயோகிக்கவேண்டும். ஒரு டப்பி விலை ரூ. 2-0-0

முழு விவரங்களடங்கிய கியாட்லாக் இனும். ரூ. 6 விலையுள்ள மருந்து 5-க்கும் ரூ. 12 விலையுள்ள மருந்து ரூ. 9-க்கும அனுப்பப்படும். வி. பி. பாகிங் செலவு வேறு.

ராஜவைத்திய நாராயணஜீ கேசவஜீ, 57, வைனுபஜார் ரோட், மதராஸ்.

ஒரே மாத்திரை ! ஒரே மணியில் குணம் !!

ஆயுர்வேத சாஸ்திரி அஷ்டாவதானி மிஸ்டர் K. V. சுப்பராவ் M. D. A.
(ஆல் தயார் செய்யப்பட்ட)

காமாமிருதம்

இந்த ஔஷதம் காது புஷ்டிக்காகவே தயார் செய்யப்பட்டது. ஒரு மாத்திரை சாப்பிட்ட 1-மணி நேரத்தில் வீரியசக்தியை விருத்தி செய்து எவ்வளவு பலஹீனமானவர்களையும் பலவான்களாகச் செய்யும். எவ்விதமான காப்பு தளர்ச்சியையும் போக்கி, உலக சுகத்தை யனுபவிக்கச் செய்யும் ஒரு அருமையான மருந்து, வீரிய சக்தியை இழந்தவர்களுக்கு 15-நாளில் பூர்ண குணம் தரும். மருந்தை வெளிக்கும் பூசலாம். உபயோகிக்கும் விதம், மருந்துடன் அனுப்பப்படும்.

20 மாத்திரைகள் விலை ... ... ரூபா 2 0 0

விலாசம் :— அமிருதாச்சிரமம், நெ. 17, எல்லூர் கிருஷ்ணா ஜில்லா.

கலியாணகாலங்களிலும் பண்டிகைகாலங்களிலும் மரியாதை முதலியவை செய்வதற்கு

தகுந்த உடைகள் வாங்குமிடம்.

நாங்கள் எல்லாவித ஜவுளி திணுசுகளும், மனதுக்குத திருப்திகாமாயும், தற்போதைய நாகரீகத்திற்கு ஏற்றதுமான எல்லா திணுசு காசிப்புடவைகள், துப்பட்டாக்கள், வெள்ளைவேஷ்டிகள், உருமால்கள், பட்டு திணுசுகள், பெங்களூர், காஞ்சிபுரம், சுதேசி, பார்சி சேலைகளும், ரவிக்கைகளும், மதுரை புட்டாச்சேலைகளும், கறுப்பு ஹோம்ரூல்சேலை ...ளும் அநேக ரகங்களும் வரவழைத்திருக்கிறோம்.

விலை நயம். ஒருதடவை வந்து பாருங்கள். நம்பிக்கையான இடம்.

வெளியூர் ஆர்டர்கள் உடனுக்குடன் கவனித்து அனுப்பப்படும். கேட்லாக் இனும்.

எஸ். ஆர். பாலுசாமி ஐயர் & சன்ஸ்
சில்க் ஹவுஸ், 82, நைனியப்பன் நாய்க்கன் தெரு,
பார்க்டவுன், சென்னை.

Printed … P… d by T. V. …lyanasundara Mudaliar, (Editor) at the Sadhu Press, 44-Bazaar Road, Roy… h M

END OF
ISSUE